**ANGLO ASIAN MINI MART**
513 High Road
Wembley,
Middx
Hao 4 ag
Tel: 020 8900 2451
தரமான இலங்கை Groceries
கடலுணவு வகைகள், மரக்கறி
வகைகள் அனைத்தையும்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.
Pub.

Euro 1.55 France: 10FFrs. Germany: 2.50DM Swiss: 2.50SFrs. GB: 90P

# ஈழமுரசு

பிரித்தானியா
Eelamurasu Weekly

முரசு: 7 30 ஓகஸ்ட் – 05 செப்டெம்பர் 2001 முழக்கம்: 346

**FORWARD CONSULTANTS**
CONSULTING FOR PEOPLE
WE PROVIDE !!!!
*** ANY PURPOSE LOAN ***
*** BUSINESS LOAN ***
*** RESIDENTIAL MORTGAGES ***
CALL US ON 020 8900 9052
1 LANCELOT PARADE, LANCELOT ROAD, WEMBLEY, MIDDX HAO 2 AJ, UK
info@forwardconsultants.co.uk
www.forwardconsultants.co.uk
Pub.

## தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களை பதவி விலகுமாறு

# சங்கிலியன் படை அறிவிப்பு விடுதலைப் புலிகள் மறுப்பு!

*(28.08.01)*

கடந்த சனிக்கிழமை சங்கிலியன் படை என்ற அமைப்பு யாழ்ப்பாணத்தில் வெளியிட்டிருக்கும் துண்டுப் பிரசுரமொன்றில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தமது பதவிகளை இராஜினாமாச் செய்ய வேண்டுமென துண்டுப் பிரசுரம் மூலம் அறிவிப்பு விடுத்திருந்தது.

அத் துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, சிங்களப் பேரினவாதத்தின் தமிழின அழிப்பு நடவடிக்கைகளுக்குப் பல வழிகளிலும் பக்கபலமாக நிற்கும் பதவி வெறியர்களே, பதவி விலகுங்கள். பல்லாயிரக் கணக்கான மக்களினதும், போராளிகளினதும் உயிர்த்தியாகங்களால் கட்டியெழுப்பப்பட்ட விடுதலைப் போராட்டத்தைக் காட்டிக் கொடுக்கும் துரோகத்தனத்திலிருந்து தூர விலகுங்கள். தமிழீழ தாயகத்தின் விடுதலைப்போரை மழுங்கடிக்கும் சிங்கள பேரினவாத கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்தும், கைகோர்த்தும் செயற்பட்டுவரும் அரசியல்வாதிகளை மக்களே அரவணைக்காதீர்கள். தத்தம் பதவிகளை தக்க வைத்துக்கொள்வதற்காகச் சிங்கள பேரினவாதத்துடன் நட்புப் பாராட்டிக் கொண்டு போராட்டத்தை கொச்சைப் படுத்த இடமளிக்காதீர்கள்.

பண்டா - செல்வா ஒப்பந்தம் கிழிக்கப்பட்டது தொடக்கம் இன்றுவரை தமிழ் மக்களைத் தொடர்ந்தும் ஏமாற்றிவருவதே

(☞ 2ம் பக்கம்)

## கடற்படையின் வான்பிரிவு மூடப்பட்டது

*(27.08.01)*

விடுதலைப் புலிகளின் சர்வதேச கடற்போக்குவரத்துக்களை கண்காணிப்பதற்கும் தடுத்து நிறுத்துவதற்கும் என பலகோடி அமெரிக்க டொலர்களில் உருவாக்கிய கடற்படையின் வான் பிரிவை மூடுவதாக சிறீலங்கா அறிவித்துள்ளது. எதிர்வரும் செப்டெம்பர் 30ம் திகதியுடன் வான் அணிப்பிரிவை மூடுவது என்று முடிவு செய்திருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

தற்போதைய நிலையில் கடற்படையின் வான் அணிப்பிரிவின் தேவை அவசியமற்றது என அரசு கருதுவதாகவும், அதனால் கடற்படையின் வான் பிரிவு மூடப்பட உள்ளதாகவும், அதன் திட்டங்கள் யாவும் செப்ரெம்பர் 30ம் திகதியுடன் கைவிடப்படும் எனவும் கடற்படைத் தளபதி வைஸ் அட்

(☞ 2ம் பக்கம்)

## பொ.ஐ.மு – ஐ.தே.க மத்தியஸ்தராக அமெரிக்க தூதர்

*(27.08.01)*

ஆட்சியுள்ள பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஒன்று சேர்ந்து தனிச் சிங்கள அரசாங்கத்தை அமைப்பதற்கு உத்தியோகபூர்வமான முறையில் பேச்சுவார்த்தை நடத்த வருமாறு ரணில் விக்கிரமசிங்கவிற்கு சிறீலங்காப் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க அழைப்பு விடுத்திருந்தார். இந்த அழைப்பிற்கு பின்னணியாக அமெரிக்கா செயற்பட்டுள்ளது இப்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இரண்டு கட்சிகளுக்கும் இடையே கருத்தொருமிப்பு ஏற்படுவது தொடர்பான

(☞ 2ம் பக்கம்)

## பாவற்குள தாக்குதலில் அதிகாரி பலி

*(27.08.01)*

வவுனியா பாவற்குளம் பகுதியில், இன்று, விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கண்ணிவெடித் தாக்குதலில், மேஜர் தரத்தைச் சேர்ந்த சிறீலங்காப் படையதிகாரி ஒருவர் கொல்லப்பட மேலும் ஒரு இராணுவச் சிப்பாய் படுகாயமடைந்துள்ளார். செட்டிக்குளம் இராணுவ முகாமிலிருந்து, வாகனத்தில் பாவற்குளம் சென்று

(☞ 2ம் பக்கம்)

## ஜேர்மனியில் தமிழர் அடித்துக் கொலை

*(27.08.01)*

ஜேர்மனியில் இரண்டு பிள்ளைகளின் தந்தை யோகேஸ்வரன் (வயது 37) என்பவர் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார். அவர் தங்கியிருந்த அல்ட்டன் நகர அகதி முகாமுக்கு அண்மித்ததாகவுள்ள தொலைபேசிப் பாவனைப்பெட்டிக்கு அருகிலேயே கொலை செய்யப்பட்டு கிடந்ததாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இக் கொலைக்கான காரணம் எதுவும் தெரியவில்லையாயினும், சக தமிழர் ஒருவரே இதனைச் செய்திருக்கலாம் எனப் பொலிசார் தரப்பில் சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பான தகவல்கள் தெரிந்தவர்கள் உடனடியாக 02361-553280 என்ற தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மேற்படி யோகேஸ்வரன்

(☞ 2ம் பக்கம்)

## 61 பெற்றோர்கள் பிள்ளைகளை ஒப்படைத்தனர்

*(27.08.01)*

மட்டக்களப்பு பகுதிகளில் விடுதலைப் போராட்டத்தை வென்றெடுக்க பெற்றோர்கள் தமது பிள்ளைகளை விடுதலைப் புலிகளுடன் இணைத்து வருவது அண்மைக்காலமாக அதிகரித்துள்ளது தெரிந்ததே. கடந்த வியாழனன்று மட்டும் 61 பெற்றோர்கள் தமது பிள்ளைகளை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைத்துள்ளனர். பண்டாரியாவெளி, முனைக்காடு, தந்தாமலை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பெற்றோர்கள் தமது பிள்ளைகளை அழைத்துச் சென்று, விடுதலைப் புலிகளின் மட்டு-அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கரிகாலனிடம் ஒப்படைத்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## டென்மார்க்கில் தமிழ் இளைஞர் எரிந்த நிலையில் சடலமாக மீட்பு

*(27.08.01)*

டென்மார்க் நாட்டின் எஸ்டியன் நகரில் தமிழ் இளைஞர் ஒருவர் எரிந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். கணேசலிங்கம் நிர்மலா தம்பதிகளின் மூத்த மகனான செந்தூரன் (18) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வெளியிடம் ஒன்றில் அமைந்திருந்த மலசல கூடம் ஒன்றுக்கு அருகிலேயே எரிந்த நிலையில் இவர் மீட்கப்பட்டுள்ளார். இவரது சடலத்தை பெற்றோர்கள் அடையாளம் காட்டியுள்ளனர். தனது பெற்றோருடன் இப்பகுதியிலேயே வசித்து வந்த மேற்படி இளைஞன், இந்த ஆண்டின் கோடைக்கால விடுமுறைக்கு பின்னர், வர்த்தகப் பள்ளியொன்றில் தனது கல்வியைத் தொடர இருந்துள்ளார். இவரது மரணம் எதற்காக, எவ்வாறு நிகழ்ந்தது என்பது பற்றிய ஆதாரங்களோ, தகவல்களோ இதுவரை கிடைக்கப் பெறவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

**தமிழினி** பல்பொருள் அங்காடி
**TAMILINI** Cash and Carry
195-197 The Broadway,
Southall, Middx Ub1 1LZ
Tel: 020 8606 9900
Fax: 020 8813 8269
• எமக்கு லண்டனில் வேறு எப் பகுதியிலும் கிளைகள் எதுவும் கிடையாது!

ஈழமுரசு
Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris, France.
**RCS PARIS**
B 399 673 110 (95B01491)
**Directeur de la publication:**
P. Velupillai
**Redacteur:** P. Sivaguru
**Impression:**
IMPRIMERIE PUBLI-HEBDOS 1
27 BERNAY, FRANCE.

நிர்வாகி: ப. வேலுப்பிள்ளை
நிறுவக ஆசிரியர்:
அமரர் க. கஜேந்திரன்
ஆசிரியர்: பி.சிவகுரு

தபால் தொடர்புகளுக்கு:
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris, France
E.Mail-eelamurasu@noos.fr
Web side: www.eelamurasu.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:
பிரான்ஸ்:
TeL: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

ஜேர்மனி:
AMUTHASURABI
Rheinische Str-55, 44137 Dortmund.
அமுதசுரபி: 02311206692
அமரன்: 01734242356

டென்மார்க்: அ.ஜெயராகவன்
Sprotoflen - 53 - ST - TH
5800 Nyborg, Denmark.
Tel: 24422634 - Fax: 65302588

சுவிஸ்: தபாற்தொடர்பு
EELA MURASU
Postfach 238, 4313 Möhlin, Swiss.
Natel: 079 635 02 16

பிரித்தானியா:
தபாற்தொடர்பு:
EELAMURASU
5, Saxony Parade,
Hayes, UB3 2TQ.
Fax/Tel: 0208-56 16 877
ஜெயந்தன்: - Tel: 07956908145
கண்ணன் - Tel: 07884051522
பாஸ்கரன் - Tel: 07811040188

இத்தாலி: மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD - Tel: 22425527

நெதர்லாந்து: த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804

அவுஸ்திரேலியா: 'EELAMURASU'
P.O Box S-109, Homebush South
N.S.W 2140, Australia.
Tel: (02) 9649 5795
Fax: (02) 9649 5164
Mobil: 0403095073
E-Mail:tccsydney@one.net.au

கனடா:
**Shoppers World Postal Outlet**
3003 Danforth Ave., P.O.Box 93618
Toronto, ON., M4C 5R4
Tel: (416) 686-3041
Fax: (416) 686-3041

குறிப்பு:
இவ் இதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு.


(1ம் பக்கத் தொடர்ச்சி)

## தமிழ் பாராளுமன்ற...

சிங்கள தலைமைகளின் வழக்கம். இதிலிருந்து தென்னிலங்கை கட்சிகள் எதுவும் மாறிவிடவில்லை. ஆனால், ஜனநாயகப் போர்வையில் பாராளுமன்றப் பதவிகளைப் பெற்றுக் கொண்டிருப்பவர்கள் சிங்களப் பேரினவாதத்தின் கபட நாடகங்களுக்குத் துணை போகின்றனர். அபிவிருத்தி செய்யப் போவதாகக் கூறிப் போராட்டத்தை அடகு வைக்கின்றனர். ஜனநாயகத்தைப் பாதுகாப்பது என்று சொல்லி பேரினவாதிகளுடன் கைகோர்க்கின்றனர். ஆனால், பாராளுமன்ற உறுப்பினர்களாகப் பதவி வகித்த கூட்டணியினரும், ஈரோசும் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் தமது பதவிகளை விட்டொதுங்கிய தால் போர் வீறு பெற்றது கண்கூடு. அன்றைய நிலைமைகளோடு ஒப்பிடும் போது மிக மோசமான இன்றைய சூழலில் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பதவி விலகுவதே போராட்டத்துக்கான பங்களிப்பாகும்.

போராட்டம் தனக்கான நியாயங்களைத் தானே வாதாடிக் கொள்ளும், போரில் ஈடுபட்டிருப்பவர்களுக்காக வாதாட யாரும் பாராளுமன்றம் செல்ல வேண்டியது அவசியமில்லை. தன்மானமும், இன உணர்ச்சியும் கொண்டவர்கள் வாழும் வரை போர் நீடிப்பதை எவரும் தடுத்து நிறுத்திவிட முடியாது. கடைசிப் போராளி இருக்கும் வரை போராட்டம் ஓயப்போவதில்லை. எந்த அடக்குமுறைச் சட்டங்களாலும் இன உரிமைப்போரை அடக்கிவிட முடியாது. எனவே, ஜனநாயக அரசியல் நீரோட்டம் என்பதன் பெயரால் பாராளுமன்ற நாற்காலிகளைப் பெற்றுக்கொண்டிருப்பவர்கள் தத்தம் பதவிகளைத் தூக்கி எறிந்து விடுதலைப் போரிற்கு ஊக்கம் கொடுக்க வேண்டும். சிங்கள பேரினவாதத்தின் அடக்குமுறைக்கு துணைபோகும் செயல்களை நிறுத்த வேண்டும். வீரம் செறிந்த விடுதலைப் போருக்கு உத்வேகம் ஊட்ட முன்வர வேண்டும். இந்த அறிவுரையை புறக்கணிப்பதால் ஏற்படும் பின்விளைவுகளால் கவலைப் படுவதற்கும் கூட உங்களுக்கு அவகாசம் இருக்காது என்பதையும் சுட்டிக்காட்டுகின்றோம். எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

### பதவி விலகத் தயார்

இவ் அறிவித்தல் பற்றி கருத்து வெளியிட்ட தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள், சங்கிலியன்படை அறிவித்திருந்தது உண்மையாகவே விடுதலைப் புலிகளின் அறிவிப்பாக இருந்தால் தங்கள் பதவிகளை இராஜினாமாச் செய்யத் தயாராக உள்ளதாக அறிவித்துள்ளனர். தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை வென்றெடுக்கும் நோக்கத்திலேயே தாங்கள் பாராளுமன்றப் பதவிகளை வகித்து வருவதாகவும் அப்பதவிகள் மூலம் அந்த அபிலாசைகளை அடைய முடியாது என்று தமிழ் மக்கள் கருதுவார்களாயின் எந்த வேளையிலும் தமது பதவிகளை தூக்கியெறியத் தயாராக இருப்பதாக பெரும்பாலான தமிழ்க் கட்சி பா.உ களும் தெரிவித்துள்ளர்.

ஆனால் இதேவேளை, சங்கிலியன்படை என்ற துண்டுப் பிரசுரத்துடனோ அல்லது சங்கிலியன் படை என்ற அமைப்புடனோ தமக்கு எவ்வித தொடர்பும் கிடையாது என விடுதலைப் புலிகள் மறுப்புத் தெரிவித்துள்ளனர். தமிழ்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களை பதவி விலகுமாறு எந்த துண்டுப்பிரசுர வாயிலாகவோ அல்லது வேறெந்த ஊடகத்தின் மூலமாகவோ தாம் வேண்டுகோள் விடுக்கவில்லை எனவும் விடுதலைப் புலிகள் தமது மறுப்பில் தெரிவித்துள்ளனர்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## ஜேர்மனியில்...

1995ம் ஆண்டு அல்ட்டன் பகுதிக்கு தமது மனைவி பிள்ளையுடன் வந்ததாகவும், பின்பு இன்னொரு குழந்தை அங்கு பிறந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. மனைவியையும் இரண்டு பிள்ளைகளையும் கனடாவுக்கு அனுப்பிவிட்டு இவர் தனிமையில் இருந்ததாகவும் தெரியவருகிறது.

இவரின் மரணத்தக்கான காரணம் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை என ரெக்லிங்கள் குற்றத்தடுப்புப் பொலிசார் தெரிவிக்கின்றனர். நடு இரவில் தலையில் பலத்த தாக்குதலுக்கு இலக்கான யோகேஸ்வரன் அதிகாலை 2.20 மணியளவிலேயே கண்டுபிடிக்கப்பட்டுள்ளார். வைத்தியசாலைக்கு எடுத்தச் செல்லப்பட்டபோதும் மரணமடைந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இம் மரணம் தொடர்பான உண்மையை கண்டறிவதற்கு தமிழர்கள் உதவவேண்டும் என எசன் நகர அரச தரப்பு சட்டத்தரணி கேட்டுக்கொண்டுள்ளார்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## பொ.ஐ.மு...

செய்தியை தான் எடுத்துச் சென்றதாக கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதர் ஆஸ்லி வில்ஸ் ஒத்துக் கொண்டுள்ளார்.

அரசியல் கட்சியொன்று தனது செய்தியை மற்றைய கட்சிக்குத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டதை அடுத்து, தான் அமெரிக்க அரசுடன் கலந்தாலோசித்த பின்னர் தூதுப்பணிக்கு இணங்கியதாக அமெரிக்க தூதர் கடந்த வெள்ளியன்று விடுத்த அறிக்கையில் தெரிவித்திருந்தார்

# காரைநகர் கடற்படை முகாமிற்கு அச்சுறுத்தல்

(27.08.01)

யாழ். காரைநகர் கடற்படை முகாம் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு எப்போதும் உள்ளாகலாம் என சிறீலங்கா புலனாய்வுப்பரிவு வழங்கிய தகவலையடுத்து, காரைநகர் கடற்படைத் தளம் பலப்படுத்தப்படுவதாக தெரியவருகிறது. அத்துடன் இப்பாதுகாப்புக்களையும் மீறி கடற்பகுதிக்குள் கடற்புலிகள் நுழைந்து தாக்குதலைத் தொடுக்கலாம் என்ற அச்சம் காரணமாக கடற்கலங்கள் அனைத்தும் தற்போது இரவு வேளைகளில் காங்கேசன்துறை துறைமுகத்திற்கு கொண்டுசென்று விடப்படுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## கடற்படையின்...

மிரல் தயா சந்தகிரி தனது உயர திகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடற்படையினருக்கு வான் பிரிவு ஒன்றை அமைப்பதற்கு இந்தியாவிடம் இருந்து பல கோடி ரூபா செலவில் கண்காணிப்பு உலங்குவானூர்திகள் தரையிறங்கும் வசதிகளுடன் கூடிய கப்பலை கொள்வனவு செய்திருந்தது. அத்துடன் அதில் பயன் படுத்தக்கூடிய உலங்குவானூர் திகளும் கொள்வனவு செய்யவும் இந்தியாவுடன் ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன. இவ் உலங்குவானூர்திகள் மிக்-24 ரக தாக்குதல் உலங்குவானூர்திகளை விட மிகவும் பெறுமதியானவை எனவும் தெரிவிக்கப்பட்டது. இதேவேளை, இதே ரக பாரிய கப்பல் ஒன்றும் கொள்வனவுக்காக முன்பதிவு செய்யப்பட்டதும் பின்னர் அது நிராகரிக்கப்பட்டதும் குறிபிடத் தக்கது.

அத்துடன் இப்பிரிவில் பணியாற்றுபவர்களும் வெளி நாடுகளுக்கு அனுப்பப்பட்டு விசேட பயிற்சிகள் வழங்கப் பட்டன. ஓய்வுபெற்றிருந்த சில இராணுவ அதிகாரிகள் இக் கடற்படை விமானப்படைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டனர். தற்போது இவர்கள் அனைவரையும் ஓய்வுபெறுமாறு அறிவித்துள்ளது.

கட்டுநாயக்கா விமானப் படைத் தளம் மீதான தாக்குதலினால் சிறீலங்காவின் வான் படை தனது பலத்தில் அரைவாசிக்கு மேல் இழந்துள்ளது. இந்நிலையில் கடற்படைக்கு என உருவாக்கப்பட்ட வான் படையும் மூடப்பட்டது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## பாவற்குளம்...

விட்டுத் திரும்பிக்கொண்டிருந்த இராணுவ அதிகாரியே, தாக்குதலுக்கு இலக்காகிப் பலியாகியுள்ளார்.




Siva Travel
Worldwide Travel Service

கொழும்பு, சென்னை சென்றுவர இந்திய வீசா வசதிகளுடன் மிகக் குறைந்த விலையில் விமானச் சீட்டுக்கள்!

பிரயாண காப்புறுதி! தமிழ் நாட்டு சுற்றுலா ஒழுங்குகள், மற்றும் விசா ஒழுங்குகளும் செய்து தரப்படும்

மிகக் குறைந்த விலையில் விமானச் சீட்டுக்கள்

Tel: 031 318 44 60
Natel 079 622 46 61
Fax: 031 318 44 61
Eamil: info@sivatravel.ch

SIVA TRAVEL AND
FINANCE (PVT) LTD
Spitalgasse- Passage 16,
3011 BERN



நித்தி வாகன சேவை

உங்களின் வீட்டுத் தளபாடங்களை பெரிய $20M^3$ வாகனத்தில் பாதுகாப்பாக ஒரே தரத்தில் ஏற்றி இறக்கவும் மற்றும் வேர்த், ஐரோப்பிய நாடுகளுக்குமான வாகன தேவைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.



நித்தி:
0148050214 / 0613342518
0607348051 / 0148385825



ERRANCES TRAVELS

Tel: 01 42 09 70 00
Fax: 01 42 09 53 39
55, Rue Louis Blanc,
75010 Paris.
M°: La Chapelle ou Louis Blanc

à partir de

| | | |
|---|---|---|
| Bombay | - | 3,900 Frs. |
| Delhi | - | 3,900 Frs. |
| Bangkok | - | 3,400 Frs. |
| Colombo | - | 3,900 Frs. |
| Singapour | - | 3,950 Frs. |
| Madras | - | 4,800 Frs. |
| Londres | - | 790 Frs. |
| New york | - | 2,300 Frs. |
| Montreal | - | 2,800 Frs. |
| Oslo | - | 2,010 Frs. |
| Toronto | - | 2,800 Frs. |
| Nepal | - | 4,820 Frs. |

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

Li: 075 95 01 37

(ADV)

# இலங்கையின் எந்தப் பகுதிக்கும் முன் அனுமதிபெற்றே செல்ல வேண்டும் – ஐ.நா.அறிவித்தல்

(26.08.01)

இலங்கையின் எந்தப் பகுதிக்கு பயணம் மேற்கொள்வதென்றாலும் முன் அனுமதி பெற்றே செல்ல வேண்டுமென ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் தனது சகல அதிகாரிகள், ஊழியர்கள், அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது. கடந்த 20ம் திகதி முதல் இந்த அறிவுறுத்தல் நடைமுறைக்கு வந்துள்ளது எனத் தெரிவித்து, இது தொடர்பான அறிவுறுத்தலை ஐ.நா.வின் பாதுகாப்பு விவகார இணைப்பதிகாரி ஐ.நா.வின் சகல முகவர் நிலையங்களுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

அதில், பாதுகாப்பு நிலவரத்தைக் கருதி இந்நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக ஐ.நா. இணைப்பதிகாரி குறிப்பிட்டுள்ளார். அதேசமயம், வடபகுதியிலுள்ள புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியை மூன்றாம் கட்டத்திலிருந்து நான்காம் கட்டத்திற்கு ஐ.நா.மாற்றியுள்ளதாகவும், முகவர் நிலையங்களுக்கு ஐ.நா. அறிவுறுத்தியுள்ளது. பயணம் செய்ய விரும்புவோர் பாதுகாப்பு முன் அனுமதி விண்ணப்பங்களை இரு வாரங்களுக்கு முன்பாக கொழும்பில் உள்ள யுனிசெவ் நடவடிக்கை அதிகாரி பிரேம் சுபாவிடம் சமர்ப்பிக்க வேண்டும். அதன் பிரதியை யுனிசெவ் பிரதிநிதி கொலின் கிளெனியிடம் கையளிக்க வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. ஐ.நா. ஊழியர்கள் இலங்கையில் குறித்தவொரு இடத்திற்கு செல்வதற்காக முன் அனுமதி கோரி அனுப்பும் விண்ணப்பங்களை யுனிசெவ் அலுவலகம் ஆராயும். அதன்பின் நியமிக்கப்பட்ட அதிகாரிக்கு அதனைச் சமர்ப்பிக்கும். பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்பதைப் பயணம் செய்ய விரும்புவோருக்கு யுனிசெவ் அலுவலகம் அறிவிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்தியன் எயார் லைன்ஸ் கொழும்பு செல்ல வாரம் ஒரு கோடி

(26.08.01)

இந்தியன் எயார் லைன்ஸ் விமானம் கொழும்பிற்கான தனது சேவையை மேற்கொள்ள வாரத்திற்கு காப்புறுதிக் கட்டணமாக ஒரு கோடி இந்திய ரூபாவை லொயிட்ஸ் நிறுவனத்திற்கு வழங்கி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தியன் எயார் லைன்ஸ் வாராந்தம் 9 சேவைகளை கொழும்புக்கு நடத்துகின்றது. இந்த மார்க்கத்தில் பயணம் செய்யும் பயணி ஒருவர் 100 டொலர்களை மேலதிமாகச் செலுத்தவேண்டிய நிலையேற்பட்டிருக்கிறது. இதனையடுத்து கொழும்புக்கு வந்துபோகும் விமானங்களிலுள்ள ஆசனங்களில் தலா ஒன்றுக்கு 40 டொலர்களை காப்புறுதி மேலதிகக் கட்டணமாக அறவிடுவதென இந்தியன் எயார் லைன்ஸ் தீர்மானித்துள்ளதாகவும் தெரியவருகிறது. ஓகஸ்ட் 16ம் பின்னரே இந்த நடைமுறை அமுலுக்கு வந்துள்ளது.

உண்மையிலேயே இக்கட்டணத்தை இரு மடங்காக அறவிடவேண்டும். ஆனால், சந்தை நிலைவரம் இதற்கு இடமளியாததாலேயே 40 டொலர்களால் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று இந்தியன் எயார் லைன்ஸ் வட்டாரங்கள் தெரிவித்ததாக செய்திகள் வெளியாகியுள்ளன.

## குருநகரில் இரு இளைஞர்கள் படையினரால் சுட்டுக்கொலை

(26.08.01)

யாழ். குருநகர் பகுதியில் உள்ள கேணியடியில் வைத்து இரு இளைஞர்கள் சிறீலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். கடந்த வியாழனன்று இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. சந்தேகத்துக்கு இடமாக நடமாடியதாலேயே இவர்களை சுட்டுக்கொன்றதாக இராணுவ தரப்பு தெரிவித்துள்ளதுடன் இவர்களிடம் இருந்து ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டதாகக் கூறியதுடன் உடல்களையும் அவ்விடத்திலேயே போட்டுவிட்டு சென்றுள்ளனர்.

இதேவேளை, இச் சடலங்களில் பலமாகத் தாக்கப்பட்டதற்கான அடையாளங்கள் காணப்படுவதுடன் கைகள் சிதைந்து போயுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அண்மைக்காலமாக சந்தேகம் என்ற பெயரில் சிறீலங்காப் படையினரால் இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டு வருவது யாழ். குடாவில் அதிகரித்துள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## விடுவிக்கப்பட்டவர்கள் வீடு செல்ல அனுமதியில்லை

(26.08.01)

சிறீலங்காப் படையினரால் தென்மராட்சியில் வைத்து கடந்த வருடம் கைது செய்யப்பட்டு பின்னர் யாழ்.நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்ட இருவர் தமது வீடுகளுக்கு செல்வதற்கு சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்காமையால், விடுவிக்கப்பட்ட பின்னரும் சிறையில் தங்கியிருக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

கடந்த மாதம் 31ம் திகதி விடுதலை செய்யப்பட்ட தோமஸ் இராஜ்குமார் (கற்சிலைமடு புதுக்குடியிருப்பு) கடந்த மாதம் 12ம் திகதி விடுதலை செய்யப்பட்ட ராமசாமி ரேணுகா (அக்கராயன் குளம், கிளிநொச்சி) ஆகியோரே சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாத நிலையில் யாழில் தங்கியுள்ளனர். இவர்களை விடுதலை செய்த யாழ். நீதிவான் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக அவர்களின் சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கும்படி உத்தரவிட்டார். ஆனால், இன்னமும் பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கவில்லை.

## பொருளாதார நெருக்கடியை தீர்க்க ரட்ணசிறி விக்கிரமநாயக்கா நியமனம்

(26.08.01)

சிறீலங்காவில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைக் கையாள்வதற்காக அந்நாட்டின் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தலைமையில் விசேட ஜனாதிபதிச் செயலணிப் பிரிவொன்று அமைக்கப்பட்டுள்ளது. கடந்த புதனன்று இடம் பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் மீன்பிடி, நீரியல்வளத்துறை அமைச்சர் மகிந்த ராஜபக்ஷ விசேட ஜனாதிபதி செயலணிப் பிரிவை அமைப்பது தொடர்பான யோசனையை முன்வைத்தபோது அதற்கு அமைச்சரவை அங்கீகாரமளித்தது. இதனையடுத்து கட்டுநாயக்கா விமான நிலையத் தாக்குதலையடுத்து எழுந்துள்ள பொருளாதாரப் பாதிப்பை நிவர்த்தி செய்வதற்காகவே இந்த விசேட செயலணிப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

## பாதுகாப்பை உறுதிப்படுத்த முடிந்தால் கப்பல் கட்டணத்தைக் குறைக்கலாம் – லொயிட்ஸ்

(26.08.01)

கட்டுநாயக்கா மீதான தாக்குதலையடுத்து கொழும்புத் துறைமுகத்திற்கு வரும் கப்பல்களின் காப்புறுதிக் கட்டணத்தை இலட்சக்கணக்கான டொலர்களால் இலண்டனில் உள்ள லொயிட்ஸ் நிறுவனம் அதிகரித்ததையடுத்து கொழும்பு வரும் கப்பல்கள் பல தமது பயணத்தை நிறுத்திக் கொண்டன. இதனால் பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்குண்டுள்ள சிறீலங்கா இதனை தடுப்பதற்கு பல வழிகளிலும் முயற்சிகளை மேற்கொண்டது. ஆனாலும் அவை பயனளிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மாதத்தில் கொழும்பிற்கு வரவேண்டிய 272 கப்பல்களில் 55 மாத்திரமே கொழும்பிற்கு வருவதாக உறுதி செய்துள்ளன.

இதேவேளை, இந்த நிலைமைக்குக் காரணமான அதிகப்படியான காப்புறுதிக் கட்டணத்தை நீக்கிவிடுமாறு சிறீலங்கா அரசாங்கமும், கப்பல் நிறுவனங்களும் இலண்டனிலுள்ள லொயிட்ஸ் நிறுவனத்தைக் கோரியுள்ளன. ஆயினும், துறைமுகத்தினதும், விமான நிலையத்தினதும் பாதுகாப்பை சர்வதேச மட்டத்தில் உறுதிப்படுத்த முடிந்தால் மாத்திரமே இந்தக் கட்டணத்தைக் குறைக்க அல்லது நீக்க முடியும் என அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

## போராளி வீரச்சாவு

கடந்த 20.08.2001 அன்று திருகோணமலை கன்னியா பகுதியில் சிறீலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலின் போது 2ம் லெப்.சுகந்தன் (செபமாலை ஜெயசுதன் - திருமலை) என்பவர் வீரச்சாவை தழுவிக் கொண்டார்.

## பதவியா ரோந்து அணி மீது தாக்குதல்

(26.08.01)

பதவியாக்குளம் சிறீலங்கா இராணுவ ரோந்து அணி மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஒரு சிப்பாய் கொல்லப்பட்டதுடன், படையினரின் ஆயுதங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன. கடந்த புதனன்று காலை ஆறு மணியளவில் இத்தாக்குதல் பதவியாக்குளத்திற்கும் பராக்கிரம குளத்திற்கும் இடையில் இடம்பெற்றுள்ளது. இதன்போது பெறுமதி வாய்ந்த ஏகே.எல்எம்ஜி ஒன்று உட்பட, ஏராளமான ரவைகள் மற்றும் இராணுவ பொருட்கள் என்பனவும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

GLENMORE PROPERTY SERVICES LTD
Sales | Lettings | Management | Mortgage advice
எல்லாவித மோட்கேஜ்களும் செய்து தரப்படும்
You have tried the rest, now come to the best
810 Harrow Road. Wembley, Middlesex HAO 3EL
Tel: 020 8904 5040
website: www.glenmoreproperties.co.uk
e-mail: rightmove@glenmoreproperties.co.uk
Fax: 020 8904 5220
your home is at risk if you do not keep up repayment on a mortgage or other loan(s) secured on it.

# யாழ்.பல்கலைக்கழக மாணவனின் அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரிக்க அனுமதி

(26.08.01)

யாழ்.பல்கலைக்கழக மாணவனான கிருஷ்ணசாமி திவ்வியன் படையினரால் கைதுசெய்யப்பட்டமை தொடர்பான அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணை செய்ய கொழும்பு உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. சட்டத்தரணி அப்பாத்துரை விநாயகமூர்த்தி மூலம் தாக்கல் செய்யப்பட்ட இம்மனு மீதான விசாரணைகள் கடந்த புதனன்று இடம்பெற்றன. இதன்போதே நீதிபதிகளால் இம் மனு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

தாக்கல் செய்யப்பட்ட அம் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கிருஷ்ணசாமி திவ்வியனின் கைதுக்கான காரணம் எதுவும் கூறப்படவில்லை. இவர் எந்தச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டார் என்பது தெரிவிக்கப்படவில்லை. தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த போது மிலேச்சத்தனமாக பொலிஸாரால் தாக்கப்பட்டுள்ளார். ஊரெழு இராணுவ முகாமில் வைத்து பாரிய சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டார். இவரது கைதும், தடுப்புக்காவலும் அரசியலமைப்பின் 11ஆம் சரத்துக்கு அமைய அடிப்படை மனித உரிமையை மீறியுள்ளது. உடல் ரீதியாகவும், உளரீதியாகவும் மனுதாரர் தாக்கப்பட்டுள்ளார். இந்த விசாரணையை தொடர்ந்தும் நடத்த நீதிமன்றம் அனுமதிக்க வேண்டும்.

அரசியலமைப்பின் 11 13(1), 13(2) சரத்துகளின் கீழ் இவரது கைதும், தடுத்து வைப்பும் அடிப்படை உரிமை மீறல் என்று நீதிமன்றம் பிரகடனம் செய்ய வேண்டும். யாழ்.சட்டவைத்திய அதிகாரியிடம் இருந்து மனுதாரர் தொடர்பான மருத்துவ அறிக்கை பெறப்பட வேண்டும். மனுதாரரை விடுதலை செய்ய உத்தரவு பிறப்பிக்க வேண்டும். நஷ்ட ஈடாக 2 இலட்சம் ரூபாவை அரசிடம் இருந்து பெற்றுத்தர வேண்டும் என அம் மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதில் சில கோரிக்கைகளை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது. இதனையடுத்து, மனுதாரர் தொடர்பான வைத்திய அறிக்கையை யாழ். சட்டவைத்திய அதிகாரியிடம் இருந்து பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. மேல் விசாரணை செப்டெம்பர் 30ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# மாகாண சபையில் நடந்த அடி தடி

(26.08.01)

மத்திய மாகாண சபையில் ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் அமைச்சருக்கு எதிராக ஏற்கனவே சபையில் சமர்ப்பிக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது சபையில் இடம்பெற்று வாக்குவாதத்தையடுத்து அடிதடி ரகளையாக மாறியுள்ளது. இதன்போது அம் மாகாண சபையின் அமைச்சர் தாக்கப்பட்டதுடன், எதிர்க்கட்சியினர் மூவர் படுகாயமடைந்தனர். கடந்தவாரம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மாகாண சபைத் தலைவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டுள்ள வேளையில் அவர் சபைக்குத் தலைமை தாங்குவது முறையல்ல. அந்த அதிகாரத்தை சபையின் பிரதித் தலைவருக்கு வழங்க வேண்டும் எனக் கோரப்பட்டதையடுத்தே இம் மோதல் மாகாணசபைக்குள் இடம்பெற்றுள்ளது. முதலில் வாக்குவாதங்கள் இடம்பெற்று முடிவில் கைகலப்புகள் மூண்டன. கையில் அகப்பட்ட பொருள்களையெல்லாம் அவர்கள் வீசி எறிந்து அடிபட்டுக்கொண்டனர். இம் மோதல் சுமார் அரை மணி நேரம் இடம்பெற்றுள்ளது.

# துரோகிகள் புலிகளுக்கு கூறிவிட்டனராம்! – திவயின கூறுகிறது –

(26.08.01)

அரசாங்கம் இரசாயன ஆயுதம் வாங்கியதை சில துரோகிகள் புலிகளுக்கு கூறிவிட்டனர் என சிங்கள இதழான திவயின கூறியுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

புலி பதுங்குகிறது பயத்தினால் அல்ல மீண்டும் பாய்வதற்கே, இவ்வாறு இராணுவப் புலனாய்வுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது. இரசாயனக் குண்டுகளை வடக்கு, கிழக்கு போர் முனைகளில் அரச படைகள் பயன்படுத்தினால் தாம் பதிலடி கொடுப்பதாக புலிகள் இயக்கம் எச்சரிக்கை விடுத்துள்ளதைச் சுட்டிக்காட்டி நீர் மின்சார உற்பத்தி நிலையங்கள், எரிபொருள் உற்பத்தி நிலையங்கள் ஆகியவற்றைப் புலிகள் தாக்குதல்களுக்காகக் குறிவைத்துள்ளனர் என இந்த புலனாய்வுத்துறை அறிவித்துள்ளது.

ரஷ்ய படைகள் செச்னியாவிலுள்ள பயங்கரவாதிகளைத் தாக்குவதற்குப் பயன்படுத்தும் இரசாயனக் குண்டுகளை நமது இராணுவம், இரகசியமாகத் தருவித்தது பற்றி துரோகிகள் புலிகள் இயக்கத்துக்குத் தெரியப்படுத்தியதை அடுத்து, புலிகள் அதைக் காரணம் காட்டி புதிய தாக்குதல்களை மேற்கொள்ளப் பார்க்கின்றனர் எனக் கூறியுள்ளது.

# யாழ். பொலிஸ் நிலைய பாதுகாப்பிற்காக வாகனங்கள் நிறுத்த தடை

(26.08.01)

யாழ். குடாவில் நிலைகொண்டுள்ள சிறீலங்காப் பொலிசாரின் நிலையத்துக்கு அருகில், போதனா வைத்தியசாலை முன்பாக வாகனங்கள் நிறுத்துவதற்கு பொலிசார் தடை விதித்துள்ளனர். இது குறித்து வாகன உரிமையாளர்களை யாழ்.மத்திய கல்லூரிக்கு அழைத்த பொலிசார், யாழ். போதனா வைத்தியசாலை முன்பாக வாகனங்கள் நிறுத்துவதால் போக்குவரத்துக்குத் தடை ஏற்படுவதாகவும், நோயாளிகளின் நலன்களுக்கும் பாதகம் ஏற்படுவதாகவும் தெரிவித்து வாகனங்கள் நிறுத்த வேண்டாம் எனக் கூறி அனுப்பியுள்ளனர்.

ஆனால், இங்கு நிறுத்தப்பட்டுள்ள வாகனங்களை மறைவாகக்கொண்டு யாழ். குடாவில் ஊடுருவி நிலைகொண்டுள்ள விடுதலைப் புலிகளின் அணிகள் தாக்குதலை நடாத்தலாம் என்ற அச்சம் காரணமாகவே பொலிசார் இவ் உத்தரவை இட்டுள்ளனர் என வாகன உரிமையாளர்கள் கூறுகின்றனர்.

# விமான சேவையை இஸ்ரேல் மீண்டும் ஆரம்பித்துள்ளது

(26.08.01)


கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் தாக்குதலுக்கு இலக்கானதைத் தொடர்ந்து சர்வதேச விமான நிலையங்கள் பல சிறீலங்காவிற்கான தமது சேவையை இடை நிறுத்திய போதிலும், இஸ்ரேலின் ஈஐ.ஏஐ. விமான நிறுவனம் தனது வழமையான சேவையை கடந்த வாரம் முதல் ஆரம்பித்துள்ளது. கட்டுநாயக்க தாக்குதலையடுத்து இலங்கையை ஒரு யுத்த அபாய நாடாக அறிவித்துள்ள பல நாடுகள், தங்கள் விமான சேவைகளை இடைநிறுத்திய அதேநேரம், வேறு பல நாடுகள் சேவையை வேகுவாகக் குறைத்துமுள்ளன. இந்த நிலையில் இஸ்ரேல் விமான நிறுவனம் தனது வாராந்த சேவையில் சரக்கு விமானங்களை ஈடுபடுத்த ஆரம்பித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# பாக்குநீரிணையில் வெளிச்சம்

(26.08.01)

இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பினுள் ஊடுருவுவதைத் தடுக்கும் நோக்கில், பாக்குநீரிணைக் கடற்பரப்பின் இந்திய எல்லையில் மிதக்கும் வெளிச்சங்கள் பொருத்தப்படவுள்ளதாக தமிழக நிதியமைச்சர் சி.பொன்னையன் தெரிவித்துள்ளார். தமிழக அரசின் வரவு செலவுத் திட்டத்தை சட்டசபையில் சமர்ப்பித்து உரையாற்றிய போதே அமைச்சர் பொன்னையன் இதனைத் தெரிவித்தார். இலங்கைக் கடற்பரப்பினுள் இந்திய மீனவர்கள் ஊடுருவும் போது சிறீலங்கா கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி 200ற்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததுடன் பெருமளவானோர் காயமடைந்துமுள்ளனர். பாக்குநீரிணையில் இந்தியக் கடல் எல்லை தெரியாததாலேயே பெரும்பாலும் தமிழக மீனவர்கள் இலங்கை கடல் எல்லைக்குள் ஊடுருவிச் சென்று மீன் பிடிப்பதாகவும் தமிழக அதிகாரிகள் கூறி வருகின்றனர். இந்த நிலையில் பாக்குநீரிணையில் இந்திய எல்லையை மீனவர்களுக்குத் தெளிவுபடுத்துவதற்காக வீதிப் போக்குவரத்து சமிக்ஞை போன்று பாக்குநீரிணையிலும் கடற்பரப்பில் மிதக்கும் வெளிச்சத்தை ஏற்படுத்தப் போவதாக தமிழக அரசு கூறியுள்ளது.

சக்தி குறூப் ஆதரவில்
தமிழர் விளையாட்டுக் கழகம் 78–95
முதன் முதலாக நடாத்தும்
தேனிசை மாலை
காலம்: 16-09-2001 பிற்பகல் 15.30 மணி
இடம்: L'Espace 'Champ de Foire', Route des Refuznicks, Sarcelles.
ஸ்ரார் இசைக்குழுவின் கான மழை
நகைச்சுவை நாடகம்
அவதாரம் நடனக்குழுவின் மேலைத்தேய நடனங்கள்
பரத நாட்டியம்
இன்னும் பல நிகழ்வுகளுடன்....
இந்நிகழ்வின் போது நுழைவுச்சீட்டு இலக்கங்களிற்கு நல்வாய்ப்பு பார்க்கப்படும்.
மேலதிக தொடர்புகட்கு: 06 09 32 63 83 / 06 22 28 70 43
www.ifrance.com/ast78et95



NÆRKØB TRAVELS Ltd
MONEY & TRANSFER
* Colombo
* Madras
* Singepor
* Canada
* London
இந்த நாடுகளுக்கு பயணம் செய்யும் எமது வாடிக்கையாளர்களுக்கு மிக மலிவான முறையில் விமானச் சீட்டு வழங்குகிறோம்.
★ உலகில் எப்பாகத்துக்கும் விமானச்சீட்டுக்களைப் பெற நாடவேண்டிய ஸ்தாபனம் NÆRKØB TRAVEIS LTD (15 நாட்கள் தங்குமிட வசதியுடன்)
★ சென்னை சுற்றுலா: வருடாவருடம் சென்னை சுற்றுலா விமானப்பயணம் ஒருவருக்கு 9.955 Kr (அண்ணளவாக)மட்டுமே. வருகிறவருடத்துக்கான ஆசனங்களை இப்பொழுதே பதிவுசெய்து கொள்ளுங்கள்.
★ NÆRKØB TRAVEIS LTD _ Korskervej. 104 _ 7000 Fredericia _ Danmark
★ தொலைபேசி _ 75 91 58 40 _ 75 91 58 05 / 75 91 58 41 _ 75 91 58 04 _ தொலைநகல்: 75 91 58 42




| NÆRKØB பேருந்துசேவை | ஒருவழி | இருவழி |
|---|---|---|
| Danmark _London | 540 Kr | 890 Kr |
| Danmark _Paris | 540 Kr | 865 Kr |
| Danmark _Hombrg | 205 Kr | 327 Kr |

பாரிசில் இருக்கும் டிஸ்னிலாண்ட் & லூட்ஸ் கோயில் புனித பயணத்திற்கும் பேருந்து விசேடமாக உள்ளது.

உடன் பணமாற்று சேவை
உலகில் எப்பாகங்களுக்கும் உடன் பணத்தை கொடுக்கவோ / எடுக்கவோ நாடவேண்டிய ஸ்தாபனம் NÆRKØB LTD
★ கொடுத்து 30 நிமிடங்களுக்குள் உங்கள் உறவுகள் கைக்குக் கிடைக்கும் என்பது நிச்சயம்.
Pub

# யாழ். குடாவை கைப்பற்ற படையினர் அனுமதிக்க மாட்டார்களாம்

## சிறீலங்கா இராணுவத் தளபதி கூறுகிறார்

(26.08.01)

யாழ். குடாவை கைப்பற்ற விடுதலைப் புலிகளை தமது படையினர் அனுமதிக்க மாட்டார்கள் என சிறீலங்காவின் யாழ்.குடாவிற்கான இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் எஸ்.ஜே.கே.விஜயசூரிய தெரிவித்துள்ளார். விடுதலைப் புலிகள் வெகுவிரைவில் யாழ்.குடாவை கைப்பற்றுவோம் என அறிக்கை வெளியிட்டதன் பின்னர் இராணுவத் தளபதி வெளியிட்ட அறிக்கையிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு அருகில் கடந்த வருடம் நிலைகொண்டிருந்த விடுதலைப் புலிகளை பாதுகாப்புப் படையினர் விரட்டியடித்துள்ளனர். யாழ்ப்பாண மக்கள் புலிகளுக்கு எதிராக செயற்படுவதால் இன்று புலிகள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளனர். இதன் காரணமாகத்தான் அவர்கள் மீண்டும் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவோம் என்று கூறிக் கொண்டு பொதுமக்களை அச்சுறுத்தி செயற்பட்டு வருகின்றனர். யாழ். குடாநாட்டு மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றிருப்பதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். இலங்கையின் பாதுகாப்புக்கும். உங்களின் உயிர்களுக்கும் புலிகளால் ஏற்படக்கூடிய அழிவுகளைத் தடுத்து நிறுத்துவதற்கும் தேவையான சகல திட்டங்களையும் முன்னெடுத்துச் செல்வேன். எனக் குறிபிட்டுள்ளதுடன், குடாநாட்டை ஒருபோதும் புலிகள் கைப்பற்றுவதற்கு பாதுகாப்புப் படையினர் அனுமதிக்கமாட்டார்கள் என்பதை நம்புங்கள். புலிகளின் தவறான பிர்சாரங்களைக் கேட்டு ஏமாறாமல் ஆழமாகச் சிந்தியுங்கள் எனவும் கூறியுள்ளார்.

# கைது செய்யப்படுபவர்கள் காணாமல் போகின்றனர்

## – மனித உரிமைகள் அமைப்பு கவலை –

(26.08.01)

வவுனியாவில் அண்மைக் காலங்களில் கைது செய்யப்படுபவர்கள் காணாமல் போகும் அவல நிலைமை குறித்து மனித உரிமைகள் அமைப்புகள் கவலை தெரிவித்துள்ளன. கடந்த மாதம் பாலமோட்டை பகுதியில் உள்ள குளம் ஒன்றில் மீன்பிடிக்கச் சென்ற நான்கு பேர் இதுவரை வீடு திரும்பவில்லை. இதனை விட வவுனியாவில் கைதான இருவர் காணாமல் போயுள்ளனர் என தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா அலுவலகம் தெரிவித்துள்ளது. பத்தினியார் மகிழங்குளத்தை சேர்ந்த கந்தையா கதிர்காமதாஸ் (23), கூமாங்குளத்தை சேர்ந்த நம்பித்தம்பி சிவகுமார்(29) ஆகியோரே காணாமல் போயுள்ளனர். இவர்கள் காணாமல் போனது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள் படை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டபோது இவ்வாறு பெயருடையவர்களைத் தாம் கைது செய்யவில்லை என்று தெரிவித்தனர்.

இதேவேளை, கடந்த 19ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மன்னாரில் பத்துப்பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க, கடந்த வாரம் மன்னாரில் 12 இளைஞர்கள் சிறீலங்காப் படையினரால் கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களை சந்தேகத்தின் பெயரில் கைது செய்துள்ளதாக படைதரப்பு தெரிவித்த போதும் இன்னும் அவர்களை விடுவிக்கவில்லை.

# மிக்-27 கறுப்புப் பெட்டி உக்ரேயின் சென்றது

(26.08.01)

கடந்தவாரம் வீழ்ந்து நொருங்கிய மிக்-27 ரக போர்விமானத்தின் விபத்துக்கான காரணத்தைக் கண்டறிய அதன் கறுப்புப் பெட்டி உக்ரேயினுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. உக்ரேயின் நாட்டிலுள்ள விமான தயாரிப்பு நிறுவனத்தின் பொறியியல் அறிஞர்களின் சோதனைகளின் பின்னர் விமானம் விபத்துக்குள்ளான காரணத்தை அறிந்துகொள்வதற்காகவே கறுப்பு பெட்டி அனுப்பப்படுவதாக விமானப் படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கறுப்புப் பெட்டியில் அடங்கியுள்ள விபரங்கள் ரஷ்ய மொழியில் பதியப்பட்டிருப்பதாலேயே அங்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. கறுப்புப் பெட்டியில் அடங்கியுள்ள விபரங்கள் இன்னும் இரண்டு வாரங்களுக்குள் தமக்கு கிடைத்துவிடும் என சிறீலங்கா வான்படை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# பலத்த பாதுகாப்புடன் நடந்த கிரிக்கட்

(26.08.01)

சிறீலங்கா, இந்திய அணிகளுக்கிடையேயான கிரிக்கட் போட்டிகள் கடந்த புதனன்று கண்டி அஸ்கிரிய மைதானத்தில் நடைபெற்றபோது என்றுமில்லாத அளவிற்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இப்பாதுகாப்பிற்காக மட்டும் சுமார் 500 இற்கும் மேற்பட்ட பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டதாகவும் இவர்களில் பலர் விளையாட்டு நடைபெற்ற மைதானப் பகுதியிலும் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மைதானத்திற்கு வெளியேயும், உள்ளேயும் பொலிஸ் மோப்ப நாய்கள் கொண்டு திரியப்பட்டதுடன் பார்வையாளர்களும் குண்டுகள் கண்டுபிடிக்கும் கருவிகள் மூலம் சோதனைக்கு உட்படுத்தப்பட்டே உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



# கிரானில் ராசிக் உறுப்பினர் சுட்டுக்கொலை

(26.08.01)

மட்டு. கிரான் வைரவகோயிலடிப் பகுதியில் சிறீலங்கா அரசின் கூலிக்குழுவான ராசிக்குழுவைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். கடந்த ஞாயிறன்று மாலை இவரைப் பிடித்துச் சென்ற சிலர், இவரைச் சுட்டுக்கொன்றுவிட்டு மின்கம்பம் ஒன்றில் கட்டிவிடப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இவரது சடலத்திற்கு அருகில், தளவாயைச் சேர்ந்த இவர் ராசிக் குழுவைச் சேர்ந்தவர். பல கொலை, கொள்ளை, காட்டிக்கொடுப்புச் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளார். இவருக்கு ஞாயிறு மாலை 6.10 மணிக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டதுடன் இவரிடமிருந்து கைத்துப்பாக்கியொன்றும் மீட்கப்பட்டுள்ளது என்று எழுதப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் இத் தண்டனையை வழங்கியவர்கள் யார் என்று அதில் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை.


உலகெங்கும் துரிதகதியில் உங்கள் பணத்தை உரியவர்கட்கு சேர்த்திட

World Wide Money Transfer

IITAG Holding/ Innovative Independent Trust AG

ஒரு மணித்தியாலத்திலிருந்து மூன்று நாட்களுக்குள் உங்கள் பணம் சேரவேண்டியவர்களிடம் அனுப்பிவைக்கவும், பிரயாண காசோலைகளை பெற்றுக்கொள்ளவும்; அனுமதிபெற்ற நிறுவனம். இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா, கனடா, பிரித்தானியா; ஜேர்மனி, சுவிற்சர்லாந்து, பிரான்ஸ், இத்தாலி, ஒல்லாந்து, டென்மார்க், முதலிய நாடுகளுக்கு சட்டபூர்வமாக அனுப்பிவைக்கவும், பெற்றுக்கொள்ளவும்...

தொலைபேசி இலக்கங்கள்: தலைமை அலுவலகம் சுவிற்சர்லாந்து 0041 81 354 99 11, 354 99 12. ஜேர்மனி 069 24 00 49 80

நீங்கள் உங்கள் இடங்களிலிருந்தே எங்கள் வங்கிக்கணக்கிற்கு பணத்தை செலுத்தி தபால்மூலமோ அல்லது தொலைநகல் மூலமோ பற்றுச்சீட்டையும் பணம் சேரவேண்டியவர்களினுடைய விபரங்களையும் அனுப்பிவைத்தால் குறித்த நேரத்தில் எங்கள் கிளைகளில் பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

Head office - New Address - Tele Phone and Fax

சில வங்கிகளின் விபரம், Swiss UBS AG Chur, 208-9290 16.06D, Germany: Commerzbank Frankfurt 6030043 00 BLZ 500 400 00, Postbank: 17279-604 BLZ 500 100 60

தொடர்புகட்கு: Iitag Holding/Innovative Independent Trust AG
7002 Chur-Switzerland http//:www/iitag.com, Email:iitag@iitag.com
Tel:++41 81 354 99 11, 354 99 12 Fax: ++ 41 81 354 99 10
அல்லது அந்நாடுகளிலுள்ள எமது கிளைகள் அல்லது பிரதிநிதிகளிடம் தொடர்பு கொள்ளவும்.

# உல்லாச விடுதிகளுக்கு பொருட்களை விற்ற நிறுவனங்களுக்கும் மூடுவிழா

## ஒரு இலட்சம் பேர் வரை வேலையிழப்பு

(26.08.01)

கட்டுநாயக்கா தாக்குதலால் முற்றுப்பெறாத ஒரு பொருளதார நெருக்கடிக்குள் சிறீலங்கா சென்று கொண்டிருப்பது தெரிந்ததே. இதன் ஒரு கட்டமாக தற்போது உல்லாசப் பயணிகளின் விடுதிகளுக்கு உணவுப்பொருட்கள் மற்றும் பல்வேறு பொருட்களை விநியோகித்து வந்த வர்த்தக நிறுவனங்கள் பலவும் மூடப்படும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன. ஏற்கனவே ஏராளமான உல்லாசப் பயணிகள் விடுதிகள் பல மூடப்பட்டுள்ளதுடன், தற்போது சிறீலங்காவில் தங்கியிருக்கும் சில உல்லாசப் பயணிகளும் பாதுகாப்பு கருதி ஒரு சில விடுதிகளுக்கு மட்டுமே செல்வதால் ஏனைய விடுதிகள் அனைத்தும் வெறிச்சோடியுள்ளதால் அவைகளும் மூடப்படும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. கட்டுநாயக்கா தாக்குதல் இடம்பெற்று ஒரு மாத காலத்திற்குள் சுமார் ஒரு இலட்சம் பேர் வரை தமது வேலைகளை இழக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. விடுதிகளில், உணவகங்களில், துறைமுகத்தில், விமான நிலையத்தில் மற்றும் உல்லாசப் பயணிகளுக்கான வழிகாட்டிகள் மற்றும் பயண முகவர்கள் நிறுவனம் (இவை வெளிநாடுகளில் உள்ளனவும் அடங்கலாக) என பல்வேறு நிறுவனங்களிலும் பணிபுரிந்தவர்கள் இக் கட்டுநாயக்கா தாக்குதலால் தமது வேலைவாய்ப்பை இழந்துள்ளதாகவும், இவ்வாறு வேலை வாய்ப்பை இழந்தவர்கள் ஒரு இலட்சம் பேர்வரை அடங்கும் என செய்திகள் வெளியாகியுள்ளன. தொடர்ந்தும் உல்லாசப் பயணிகளின் வருகை வீழ்ச்சியில் செல்லும் என்றால் இன்னும் பலர் தமது வேலை வாய்ப்புக்களை இழக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும் எனவும் அவதானிகளால் அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

# நோயில் இருந்து பாதுகாக்க தேயிலைக்கு பதிலாக பொன்னாவரசு

(26.08.01)

விஸ்வமடு பிரதேச உடையார்கட்டு வலயத்தில் இடைக்கட்டு கிராமத்தில் மூங்கிலாறு சமூக பொருளாதார வளர்ச்சி நிறுவன இணைப்பாளர் தலைமையில் கிராம தரிசிப்பு நிகழ்வு நடைபெற்றது. இங்குள்ள வறிய மக்களின் சுகாதாரம் பேணப்படும் நோக்கமாக சுகாதார திணைக்கள வன்னி வலய கூற்றியல் பிரிவைச் சேர்ந்த உத்தியோகத்தர் இராசதுரை அவர்கள் தரிசிப்பின் போது மக்களுக்கு மலேரியா நோய்களும் மனிதரின் உடலில் போசாக்கு குறைவால் தாக்குகின்றது எனவும் சத்தான உணவு கீரை வகைகள் உண்ண வேண்டுமெனவும் கூறியதுடன் மலேரியா நோய்த்தடுப்பு கிராமிய முறை பற்றியும் கூறினார். தேயிலைச் சாயத்துக்கு பதிலாக நாளாந்தம் தேனீர் வேளைகளில் பொன்னாவரசு ஒரு கைபிடி 5 கிராம், வேப்பமிலை ஒரு கைபிடி 5 கிராம், கொத்தமல்லி ஒரு கைபிடி 5 கிராம், நன்னாரி இலை மற்றும் தண்டு 5 கிராம், வேர்க்கொம்பு சிறு துண்டு, மிளகு 3 இவற்றைச் சேர்த்து வெயிலில் உலர்த்தி சாதுவாக வறுத்து இடித்து தேயிலைத் தூளுக்குப் பதிலாக பாவித்தால் மலேரியா நோய் வராது எனவும் கூறியுள்ளார்.

# வேலணையில் கரை ஒதுங்கிய சடலம்

(26.08.01)

வேலணை கிழக்கு கடற்கரைப் பகுதியில் மிகவும் உருக்குலைந்த நிலையில் சடலம் ஒன்று கரை ஒதுங்கி உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 5 மணியளவில் கரை ஒதுங்கிய இந்தச் சடலம் ஆணா, பெண்ணா என்று அடையாளம் காணமுடியாத அளவுக்கு சிதைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பிரேத பரிசோதனைக்காக சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

# மிதிவெடியில் மூன்று படையினர் படுகாயம்

(26.08.01)

யாழ்.குடாவிலும் மட்டக்களப்பிலும் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது மிதிவெடிகள் வெடித்ததில் மூன்று படையினர் படுகாயமடைந்ததாக சிறீலங்கா இராணுவ தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன. யாழ். அரியாலையில் இராணுவ காவலரண் பகுதிக்கு அண்மையில் புதைத்து வைக்கப்பட்டிருந்த மிதிவெடியிலும், மட்டக்களப்பு நாவலடிப் பகுதியில் புதைத்து வைக்கப்பட்டிருந்த மிதிவெடிகளிலும் சிக்கியே இவர்கள் காயமடைந்துள்ளனர். இதே நேரம், ஏழாலைக்கு வடக்கே மிதிவெடியில் சிக்கி குணசேகரன் குகேந்திரன் என்பவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# உலகத் தமிழர் பேரவை தலைவர் கொழும்பில் பொலிசாரால் விசாரணை

(26.08.01)

உலகத் தமிழர் பேரவைத் தலைவர் கலாநிதி இராஜனார்த்தனம் கொழும்பு கோட்டையில் கடந்த வெள்ளியன்று கைது செய்யப்பட்டு விசாரணைகளின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார். இவருடன் வந்த மேலும் இருவரும் பொலிசாரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர். தமிழக மேல் சபையில் கொறடாவாக இருந்த இவர், 1983ல் இலங்கையில் இடம்பெற்ற இனக்கலவரத்தில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் தமது பதவியை இராஜினாமாச் செய்தவர். உலகத் தமிழ் மன்றம், உலகத் தமிழர் பேரவை ஆகிய அமைப்புக்களின் முக்கியஸ்தரான இவர், அறிஞர் அண்ணாதுரையின் நாடகங்களை ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இராணுவம்–புளொட் கூட்டுத் தாக்குதல் பொது மகன் பலி

(26.08.01)

மட்டு. ஏறாவூர் ஐயன்கேணிப் பகுதியில் இராணுவத்தினரும், புளொட் அமைப்பினரும் கூட்டாக இணைந்து தேடுதல் ஒன்றை நடாத்தியதுடன், தாக்குதலையும் நடாத்தியுள்ளனர். இதன் போது பொதுமகன் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

கடந்த 19ம் திகதி ஞாயிறன்று இரவு 9 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதன் போது, ஐயன்கேணியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான சாமித்தம்பி ஜெயக்குமார் (38) என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

படம் பார்ப்பதற்காக பக்கத்து வீட்டுக்குச் சென்றபோதே அப்பகுதியில் பதுங்கியிருந்த படையினர் தாக்குதல் நடாத்தியதில் இச்சம்பவம் இடம்பெற்றதாக இவரின் மனைவி தெரிவித்துள்ளார்.

# பயணிகள் பேருந்து கண்ணிவெடியில் சிக்கியது

(26.08.01)

திருமலை நகரப் பகுதிக்கு வடக்கே 10 கிமீற்றர் தொலைவில் உள்ள பெரியகுளம் பகுதியில் பயணிகள் பேருந்தொன்று கண்ணி வெடியில் சிக்கியதில் 18 பேர் காயமடைந்துள்ளனர். கடந்த 22ம் திகதி புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. காயமடைந்தவர்கள் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

DURON 800 Mhz
CARTE MERE MATSONIC
SD RAM 128 Mo PC 133
DISK DUR 20 Go
CD ROM 52X
FLOPPY 1.44 Mo
CARTE VIDEO 16 Mo Intégré
CARTE SON AC3 Intégré
MODEM 56 Kbps AMR
BOITER MOYEN TOUR ATX
CLAVIER PS/2
SOURIS PS/2
HP 240 W
ECRAN 15 `` IMPRIMANTE CANON BJC
2100SCANNER ARTEC USB 36BITS

Garantie 2 ans

Prix 4900 FTTC

LUNE INFORMATIQUE
26 RUE PERDONNET, 75010 PARIS
TEL 0153267670 / FAX 0153260874
LUNE INFORMATIQUE@IFRANCE.COM



லண்டனில் தமிழர்கள் விரும்பிச் செல்லும் தனித்துவமான உணவகம்

சுவை அருவி

உங்கள் திருமண, பிறந்தநாள், மங்கலகரமான வைபவங்களுக்கு சுவைமிக்க உணவு வகைகள் குறித்த நேரத்தில் தயாரித்துக்கொடுக்கப்படும்.

ஒருமுறை விஜயம் செய்துபாருங்கள்!
மீண்டும் மீண்டும் வரத்தூண்டும் இடம்!!

Suvai Aruvi
96, High Street,
Colliers Wood
London SW19 2BT

Srilankan & South Indian Restaurant

Tel: 020 8286 6677/020 8543 6266

# பிந்துனுவெவ போல் களுத்துறைச் சிறைச்சாலையிலும் படுகொலை அபாயம்

## தமிழ் அரசியல் கைதிகள் சந்திரசேகரனுக்குக் கடிதம்

(26.08.01)

பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவம் போன்று களுத்துறைச் சிறைச்சாலையிலும் மோசமான சம்பவங்கள் இடம்பெறக் கூடிய சூழ்நிலை தோன்றி வருவதாகவும், உடனடியாகத் தங்களைக் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் கோரி களுத்துறைச் சிறைச்சாலை தமிழ் அரசியல் கைதிகள் தனக்குக் கடிதங்களை அனுப்பியுள்ளதாக மலையக மக்கள் முன்னணித் தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பெ.சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சிறைக் கைதிகள் தனக்கு அனுப்பியுள்ள கடிதங்களில், மட்டக்களப்பு, களுத்துறைச் சிறைச்சாலைகளின் பொறுப்பதிகாரிகள் தமிழ் அரசியல் கைதிகளுக்கு எதிராக மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் மீண்டும் படுகொலைகள் ஏற்படவே வழிவகுக்கக் கூடியவையாக அமைகின்றன. கடந்த மாதம் 15ம் திகதிக்கும் 31ம் திகதிக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் மட்டக்களப்பு நீதிமன்றத்திற்கு வழக்கு விசாரணைகளுக்கு அழைத்துச் செல்லப்பட வேண்டியவரை அங்கு அழைத்துச் செல்லவில்லை. மட்டக்களப்புச் சிறைச்சாலையில் கொலை, பாலியல் வல்லுறவுச் சம்பவங்களுடன் தொடர்புபட்ட ஆறு இராணுவத்தினர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு இங்குள்ள தமிழ் அரசியல் கைதிகளினால் பாதி-ப்பு ஏற்படக்கூடும் என்ற காரணத்தினாலேயே 30ற்கும் மேற்பட்ட தமிழர்கள் களுத்துறைச் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். இதனால் 45ற்கும் மேற்பட்ட அரசியல் கைதிகள் வழக்கு விசாரணைகளுக்காக மட்டக்களப்புக்குச் செல்ல முடியாத நிலையேற்பட்டுள்ளது.

மட்டக்களப்புச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகள் திடீர் திடீரென களுத்துறைச் சிறைச்சாலையிலிருந்து காலியிலுள்ள பூஸாவுக்கும், பூஸாவிலிருந்து களுத்துறைக்கும் மாற்றப்படுகின்றனர்.

மட்டக்களப்புச் சிறைச்சாலைப் பொறுப்பதிகாரி அரசியல் கைதிகளை எவ்விதக் காரணமுமின்றி அடிக்கடி தாக்கி வருகின்றார். இவர் களுத்துறையில் இரு-ந்து வழக்கு விசாரணைகளுக்காக கைதிகளை மட்டக்களப்புக்குக் கொண்டு செல்லாமல் சாக்குப் போக்குகளைக் கூறி வருகின்றார் என தமக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாக சந்திரசேகரன் கூறியுள்ளார்.

இது இவ்வாறிருக்க, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்க் கைதிகள் எட்டுப் பேர் நேற்று முதல் உண்ணாவிரதம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர். பத்திரிகை வாசித்தல், விளையாட்டு போன்ற செயற்பாடுகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டதை ஆட்சேபித்தே இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக உண்ணாவிரதிகள் தெரிவித்திருக்கின்றனர்.

## ரஷ்யா பணம் கொடுத்து அழிக்க முயன்றதை சிறீலங்கா பணம் கொடுத்து வாங்கியது

சென்ற வாரம், 'ஈழமுரசு', பேரினவாத சிங்கள அரசு, இரசாயன ஆயுதங்களை ரஷ்யாவிடம் இருந்து, உக்ரேன், இங்கிலாந்து மூலம் வாங்கி இருப்பதாகச் செய்தி வெளியிட்டது.

இந்த இரசாயன ஆயுதங்கள் பற்றி, பாரிசின் `Le Monde' கடந்த சனி 16.06.2001 இதழில், பக்கம் 6ல் சில ருசிகரமான தகவல்களை வெளியிட்டுள்ளது.

'1997இல் ஏற்கப்பட்ட அனைத்து நாடுகள் உடன்படிக்கையின்படி, ரஷ்யா சேமித்து வைத்திருக்கும் 40.000 டன் இரசாயன ஆயுதங்களை அழிப்பதற்கு, மேலும் பல வருடங்கள் தேவைப்படும் என்று தெரிய வருகிறது.

கடந்த 14.06.2001 இல், மொஸ்கோவில், ரஷ்யப் பிரதமர் ரிக்காயில் கசியாறோவ் இதுபற்றி சில மேலதிக விவரங்களை வெளியிட்டார்.

'இந்த ஆயுதங்களை அழிப்பதற்கு நிறையப் பணம் தேவைப்படுகிறது. இந்த இருக்கும் பணம் போதாத காரணத்தாலும், சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கும் வகையிலும், (இரசாயன ஆயுதங்கள் எரிக்கப்பட்டு அழிக்கப்படுகின்றன. இதனால், சுற்றுப் புறச் சூழலுக்கு ஆபத்து ஏற்படுகிறது), இந்த ஆயுதங்களை அழிப்பதற்குக் கால தாமதம் ஏற்படும்.

முறைப்படி, 2007இல், ரஷ்யா இந்த ஆயுதங்களை அழித்து, முடித்துவிட வேண்டும்.

இந்த 40.000 டன் இரசாயன ஆயுதங்களையும் அழிப்பதற்கு, 70 கோடி அமெரிக்க டொலர் தேவை. கனடாவும், அமெரிக்காவும், ஐரோப்பிய ஒன்றியமும் இப் பெருந்தொகையில் ஒரு பகுதியை அளிக்கின்றன.

ஆனால், இந்த அழிக்கும் வேலையை 2012 க்குள் முடிக்க, உலக நாடுகளிடம் இருந்து, ரஷ்யா மேலதிக உதவியை எதிர்பார்க்கிறது.'

இப்படிப்பட்ட நிலையில், பேரினவாத சிங்கள அரசு பல நூறுடன் இரசாயன ஆயுதங்களை வாங்க முன் வரும்போது ரஷ்யாவுக்குக் கசக்குமா? 1997இல் ஏற்கப்பட்ட அனைத்து நாடுகள் உடன்படிக்கையின்படி அழிக்க வேண்டிய ஆயுதங்களை விற்பதும், வாங்குவதும் தவறு.

மக்களின் உரிமைகளை மதிக்காத நாடுகள் இந்தத் தடையை மட்டும் மதிக்கப்போகின்றனவா

–சுகிர்தராஜ்

## பரவி வரும் வயிற்றோட்டம் ஒரு குழந்தை உயிரிழந்தது

(26.08.01)

சுண்டிக்குளம் பூனைத்தொடுவாய் பகுதியில் வயிற்றோட்டம் காரணமாக குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளதுடன் ஏராளமான மக்கள் வயிற்றோட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர். சுண்டிக்குளம் பகுதியில் குடிநீரினை மக்கள் பெற்றுக்கொள்ளும் நீர்நிலைகள் வற்றிக் காணப்படுவதுடன் இந்நீர் நிலைகளில் நன்னீர் உவர்நீராக மாறியுள்ளதாகவும் இதனால் குடிநீருக்கு தட்டுப்பாடு நிலவுவதாகவும் தெரிய வருகிறது. இக் குழந்தையின் இறப்பிற்கும் அதிகரித்துக் காணப்படும் வயிற்றோட்டத்திற்கும் சுத்தமான நீர்பாவனையின்மையே காரணமெனவும் அறியப்படுகிறது. சுண்டிக்குளம் பூனைத் தொடுவாய் பகுதியில் கடந்த புதன்கிழமை உயிரிழந்த குழந்தை ஒன்றரை வயதுடைய ஜெயக்குமார் குயின்ஸ்லின் பிறைடி என தெரியவருகிறது.

## புனர்வாழ்வுக் கழகத்தின் மருதமடு-நிலமகள்

(27.08.01)

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் பெண்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் நோக்குடன் வவுனியா மாவட்டத்தில் கனகராயன்குளம் பகுதியில் மருதமடு என்ற பெயரில் ஒரு விவசாயப் பண்ணையும், கிளிநொச்சி மாவட்டத்தில் முழங்காவில் பிரதேசத்தில் நிலமகள் என்ற பெயரில் ஒரு விவசாயப் பண்ணையும் பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்களுக்காக ஒவ்வொரு பண்ணை-க்கும் தனித்தனியாக 50,000 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. ஆரம்பகட்டமாக உப உணவு பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இராணுவத்தில் இருந்து தப்பியோடி கிணற்றில் தவறி விழுந்து பலி

(27.08.01)

சிறீலங்கா இராணுவத்தில் இருந்து தப்பியோடிய சிப்பாய் ஒருவர் கிணற்றில் தவறி விழுந்து பலியாகியுள்ளார். இராணுவத்தில் இருந்து தப்பியோடி தலைமறைவாக வாழ்ந்த இவர் கடந்த வாரம் வீதியால் சென்றுகொண்டிருந்த போது பொலிஸ் வாகனத்தை கண்டு பயத்தினால் ஓடியுள்ளார். இதன்போது சந்தேகமடைந்த பொலிசார் இவரைத் துரத்தவே, வேகமாக ஓடிய மேற்படி முன்னாள் சிப்பாய், தவறுதலாக கிணறொன்றுக்குள் வீழ்ந்து பலியாகியுள்ளார். இச் சம்பவம் ரத்கம பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இது இவ்வாறிருக்க, இராணுவச் சிப்பாய்கள், மற்றும் விமானப்படையினரின் இருபது அடையாள அட்டைகளுடன் ஓட்டோவில் பயணம் செய்த முன்னாள் இராணுவ சிப்பாய் ஒருவரை அத்துருகிரியப் பொலிசார் கைது செய்துள்ளனர். இவரும், இவரது இரண்டு நண்பர்களும் பயணம் செய்த ஓட்டோ வல்கம என்ற இடத்தில் வீதிச் சோதனையின்போது நிறுத்தப்பட்டபோது இவை கண்டுபிடிக்கப்பட்டன. அந்த முன்னாள் சிப்பாய் இராணுவ முகாம் ஒன்றில் இருந்து தப்பிவந்தவர் என்றும், மிரிகான பகுதியில் இடம்பெற்ற கொலைச் சம்பவம் ஒன்று தொடர்பாகப் பொலிசாரால் தேடப்பட்டு வருபவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

## ஓமந்தையில் தாக்குதல்

(26.08.01)

வவுனியா ஓமந்தைப் பகுதியில் கடந்த புதனன்று மாலை சிறீலங்காப் படையினரின் உழவு இயந்திரம் மீது புலிகள் நடாத்திய கிளைமோர் தாக்குதலில் இரு படையினர் கொல்லப்பட்டதுடன் 7 பேர் படுகாயமடைந்துள்ளனர். ஓமந்தைப் பகுதியில் காவல் கடமைகளில் ஈடுபட்டிருக்கும் படையினருக்கு உணவு மற்றும் குடிநீர் எடுத்துச்சென்ற உழவு இயந்திரம் மீதே புலிகள் கிளைமோர் தாக்குதலை நடத்தியுள்ளனர். இதனால், இரு படையினர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டதுடன், 7 படையினர் படுகாயமடைந்துள்ளனர். இதில் ஐவரின் நிலைமை கவலைக்கிடமாயிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.



# பசுமதி அரிசி காப்புரிமை அமெரிக்காவிடம் இந்திய பாராளுமன்றத்தில் மோதல்

பசுமதி அரிசியின் காப்புரிமையை அமெரிக்கா வாங்கிய தன் எதிரொலி கடந்த வாரம் இந்தியப் பாராளுமன்றத்தில் ஒலித்துள்ளது. இதனையடுத்து பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டது. இந்தியாவின் பூர்வீகமான பசுமதி அரிசியின் மூன்று வகைகளின் காப்புரிமையை அமெரிக்காவின் 'ரெஸ்டென்' என்ற நிறுவனம் வாங்கியுள்ளது.

கடந்த 21ம் திகதி பாராளுமன்றம் கூடியபோது பசுமதி அரிசியின் காப்புரிமையை அமெரிக்கா வாங்கியது தொடர்பான விவாதம் எழுந்தது. சமஸ்டி கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவர் இந்த விவாதத்தினை எழுப்பினர். இதன்போது, பசுமதி அரிசி விடயத்தில் இந்திய அரசு அலட்சியமாக இருந்துவிட்டதாக குற்றம் சுமத்தினார்கள். இதனையடுத்து பாராளுமன்றத்தில் அமளி துமளி ஏற்பட்டு சபையை ஒத்திவைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, பசுமதி அரிசியின் காப்புரிமை தொடர்பாக விளக்கமளித்த மத்திய வர்த்தகத் துறை இணைமந்திரி திக்விஜய் சிங்; பசுமதி அரிசி காப்புரிமை குறித்து அரசு போராடும். அதற்கு முன்பு உலகவர்த்தக கழக ஒப்பந்தப்படி இந்திய அரசுக்கு அதிகாரம் தரும் புவியியல் விளக்க மசோதாவை அமுல்படுத்த வேண்டும் என்றார். அதற்கு காங். எம்பியான கபில்சிபல் எதிர்ப்பு தெரிவித்தார். மசோதாவை நிறைவேற்றும் வரை நாம் காத்திருக்க தேவையில்லை. இந்திய அரசு இந்த விசயத்தில் நேரடியாக மோதலாம் என்று அவர் கூறினார்.

## இராணுவ இரகசியங்களை விற்ற கடற்படை அதிகாரி கைது

இராணுவ இரகசியங்களை பாகிஸ்தானுக்கு கடத்திச் சென்று விற்ற இந்திய கடற்படையின் லெப்டினன்ட் தர அதிகாரியான ராஜ்குமார் என்பவர் ஆந்திர மாநிலப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இராணுவ இரகசியங்களை கடற்படை உயரதிகாரி ஒருவர் கடத்துவதாக புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவலையடுத்து; விசாகப்பட்டினப் பொலிசார் மேற்கொண்ட புலனாய்வினையடுத்து, இக் கடற்படை அதிகாரியை கைதுசெய்துள்ளனர்.

இதன்பின்னர் மேற்கொண்ட விசாரணைகளில்;

நேபாள நாட்டின் தலைநகரில், 2 முறை பாகிஸ்தானின் இரகசிய உளவுப்பிரிவான ஐ.எஸ்.ஐ. அதிகாரிகளை அவர் சந்தித்திருப்பதும், முக்கிய ஆவணங்களை அவர்களிடம் கொடுத்திருப்பதும் தெரிய வந்தது. இதற்காக பல்வேறு வங்கிகளில், அவரது பெயரில் பணம் செலுத்தப்பட்டிருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேலும், வெளிநாட்டுக்கு கடத்தவிருந்த முக்கிய ஆவணங்களையும் காவல்துறையினர் கைப்பற்றியுள்ளனர் என தெரியவருகிறது.

## கருணாநிதி கைது- ஜெயலலிதா கோரிக்கையை மனித உரிமை ஆணையம் நிராகரிப்பு

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கருணாநிதி கைது விவகாரம் தொடர்பாக நடைபெற்று வரும் விசாரணையை நிறுத்துமாறு தமிழக அரசு விடுத்த கோரிக்கையை, தேசிய மனித உரிமை ஆணையம் நிராகரித்துள்ளது. தமிழக அரசு கருணாநிதி கைது தொடர்பாக விசாரணை ஆணையத்தை அமைத்துள்ளதால், தேசிய மனித உரிமை ஆணையகம் விசாரணை நடத்த வேண்டிய அவசியம் இல்லை என தமிழக அரசு கூறியிருந்தது. ஆனால் இதனை மறுத்த மனித உரிமை ஆணையம்; கருணாநிதி கைது செய்யப்பட்ட உடனேயே ஆணையம் தன்னிச்சையாக விசாரணைகளை மேற்கொண்டதாகவும் தமிழ்நாடு அரசின் கோரிக்கையை ஏற்க முடியாது எனவும் கூறியுள்ளது.



கடந்த 23ம் திகதி புதுடெல்லி வந்த பாலஸ்தீன அதிபர் யசீர் அரபாத் பிரதமர் வாஜ்பாயை சந்தித்து பேச்சுக்களை நடத்தினார். இதன்போது பாலஸ்தீனர்கள் மீதான இஸ்ரேலியர்களின் தாக்குதல்களை விளக்கியுள்ளார். இதன்பின்னர் எதிர்கட்சி தலைவி சோனியா காந்தி மற்றும் பல முக்கிய தலைவர்களையும் சந்தித்துப் பேசியுள்ளார். இந்தியப் பயணத்தை முடித்துக்கொண்டு பாகிஸ்தான் ஊடாக சீனா பயணமானார்.

## கேரளாவில் தமிழர்கள் மீது மீண்டும் தாக்குதல்


கேரளாவில் தமிழர்கள் மீது மீண்டும் தாக்குதல்கள் நடாத்தப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. கேரளா கண்ணூரில் தமிழர்கள் அதிகமாக வாழும் பகுதியில் இத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. இரு பகுதியினருக்கும் இடையில் ஏற்பட்ட சில முரண்பாடுகளால் அடிதடிகளில் இறங்கிய சிலர் பின்னர் அப் பகுதி தமிழர்கள் மீது கைக்குண்டுகளை வீசியதாகவும் இதன்போது ஐவர் படுகாயம் அடைந்ததாகவும் தெரியவருகிறது. இச் சம்பவத்தை அடுத்து அப் பகுதியில் பதட்டம் நிலவி வருவதாகவும், தமிழர்கள் வெளியே சென்று வருவதை தவிர்த்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.


# இந்தியச் செய்திகள்

## பேருந்து மோதி யானைகள் பலி

நாகலாந்து மாநிலம் திமாபூரில் உள்ள பாலம் ஒன்றின் ஊடாக சென்று கொண்டிருந்த யானைகள் மீது பேருந்து மோதியதில் இரு யானைகள் பலியானதுடன் பேருந்தின் சாரதியும் உயிரிழந்துள்ளார்.

பாலத்தை வேகமாக கடந்து செல்ல முயன்ற போதே கடந்த 23ம் திகதி இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதன்போது பேருந்தில் பயணம் செய்த பயணிகள் சிலரும் காயமடைந்துள்ளனர்.





## தாஜ்மஹால் விற்பனைக்கல்ல!

உலக அதிசயங்களில் ஒன்றான 'தாஜ்மஹால்' தனியார் வசம் ஒப்படைக்கப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது. தாஜ்மஹாலை தனியார் வசம் ஒப்படைக்க உள்ளதாக வெளியான தகவல்களையடுத்து பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கையில், மத்திய சுற்றுலாத்துறை அமைச்சர் ஆனந்தகுமார் இதனை மறுத்துள்ளார். அத்துடன் தாஜ்மஹால் மாசுபடுவதை தடுக்கவும் அதனைப் பராமரிக்கவும் வருடம் 21 இலட்சம் ரூபா ஒதுக்கப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.




# 'டெஹல்கா டொட் கொம்' பாலியல் தொழிலாளர்களை பயன்படுத்தியது

## - ஜோர்ஜ் பெர்னாண்டஸ் குற்றச்சாட்டு

இராணுவ அதிகாரிகளை மயக்கி தகவல்களை பெறுவதற்காக டெஹல்கா இணையத்தளம் பாலியல் தொழிலாளப் பெண்களை பயன்படுத்தியதாகவும் இதன் மூலம் இராணுவத்திற்கும், நாட்டிற்கும் எதிராகக் குற்றம் இழைத்திருப்பதாக முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

இதேவேளை இக் குற்றச்சாட்டை மறுத்துள்ள டெஹல்கா இணையத்தளம், பாலியல் தொழிலாளர்களை பயன்படுத்தியதை ஒத்துக்கொண்டுள்ளது. இது குறித்து கருத்து தெரிவித்த அவ் இணையத் தளத்தின் அதிகாரி;

தாங்கள் இந்த ஊழல் வெளிக்கொண்டுவருவதில் நேர்மையாகவே நடந்துள்ளதாக தெரிவித்ததுடன், தங்களது நோக்கம் பாலியல் அல்ல, ஊழலை வெளிப்படுத்துவதுதான். அதற்காகவே இதனை மேற்கொண்டதாகவும், சில விடயங்களை தெரிந்து கொள்ள சில அசாதாரண முறைகளை கையாளவேண்டி உள்ளது எனவும் கூறியுள்ளார்.

அகில இந்திய பாரதிய ஜனதா கட்சித் தலைவராக இருந்த பங்காருலட்சுமணன் ஆயுதபேர வியாபாரிகளிடம் இலஞ்சம் வாங்கியதாக டெஹ-ல்கா இணையதளம் ஆதாரத்துடன் கூடிய தகவலை வெளியிட்டது.

இதனால் இக் குற்றச்சாட்டுக்கு பொறுப்பு ஏற்று பாரதிய ஜனதா கட்சித் தலைவர் பதவியில் இருந்து பங்காரு லட்சுமணன் இராஜினாமா செய்தார்.

இந்த ஆயுதபேர ஊழலில் இராணுவ அதிகாரிகளுக்கும் தொடர்பு இருப்பதாக தகவல் வெளியானது. இதனால் அக் குற்றச்சாட்டுக்கு பொறுப்பு ஏற்று இராணுவ அமைச்சர் பதவியில் இருந்து ஜோர்ஜ் பெர்னாண்டஸ் இராஜினாமா செய்தார். இதனிடையே ஆயுதபேர ஊழல் குறி-த்து விசாரிக்க நீதிபதி வெங்கடசாமி தலைமையில் ஒரு ஆணையகம் அமைக்கப்பட்டது. இந்த ஆணையகம் விசாரணை நடத்திவருகிறது, என்பது குறிப்பிடத்தக்கது.

# மூட நம்பிக்கையான ஜோதிடக்கலை பல்கலைக்கழகங்களில் பாடமாக்க கூடாது

## - தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் கோரிக்கை

மூடநம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்ட ஜோதிடக் கலையை பல்கலைக் கழகங்களில் பாடமாக சேர்க்க தி.மு.க. கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. நாடாளுமன்றத்தில் இதுகுறித்து தி.மு.க. உறுப்பினர் பழனிமாணிக்கம் பேசியதாவது;

ஜோதிடத்தில் எப்படி கணி-ப்பு நிர்ணயிக்கப்படுகிறது? ஒருவருடைய ஜாதகம் எப்படி வரையப்படுகிறது? ஜாதகம் கணிக்க ஒருவர் எந்த நேரத்தில் பிறந்தார் என்பது ஆதாரமாகிறது. அதுவே இடத்திற்கு இடம், நேரத்திற்கு நேரம் வேறுபடுகிறது என்பது ஒரு பக்கம். இன்னொரு பக்கத்தில் இன்றைக்கு குழந்தை பிறப்பில் என்ன நடக்கிறது? பல தாய்மார்களுக்கு இப்போது இயற்கையாக குழந்தைகள் பிறப்பது இல்லை. இங்குள்ள தாய்மார்கள் என்னை மன்னித்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நல்ல நாள் எது, நல்ல நேரம் எது என்று ஜோதிடம் கேட்டு, அதன்படி செயற்கையாக சிசேரியன் ஆபரேஷன் மூலம் குழந்தைகள் பெற்றுக்கொள்கிற நிலைமையும் உள்ளது. அவர்கள் எதிர்பார்க்கிற நல்லவைகள் நடக்கும் என்று எவராவது உறுதியாகக் கூற முடியுமா? இல்லையானால் விளைவுகள் விபரீதமாக முடியக்கூடும். மூட நம்பிக்கைகளையும், விஞ்ஞான வசதிகளையும் ஒன்று சேர்த்து குழப்பக்கூடாது. எது நல்லது என்று சுயமாக சிந்திக்க வைக்கிற பகுத்தறிவுத் திறன் பாழாகக் கூடாது.

மூடநம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்ட விஞ்ஞான பூர்வமாக திரூபிக்கப்படாத ஜோதிடக் கலை போன்றவற்றை பாடமாக்கி மத்திய நூற்றாண்டுகள் என்று சொல்லப்படும் இருண்டகலம் நோக்கி, இளைஞர்களை இட்டுச் செல்லக் கூடாது. இது போன்றவற்றால், இளைஞர்களின் முயற்சியும், ஊக்கமும் குறைந்துவிடும். புதிய கல்வி முறையின் இந்த முயற்சி நாட்டுக்கு நன்மை பயக்காது. எனவே, ஜோதிடக்கலையும் பாடமாக்கப்பட வேண்டும் என்று நாட்டின் எல்லா பல்கலைக்கழகங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கையை அரசு திரும்பப் பெற வேண்டும் என்று தி.மு.க. சார்பில் கேட்டுக்கொள்கிறேன் என்றார் அவர்.

# நூறு விமானங்கள் வீழ்ந்து நொருங்கின

கடந்த ஐந்தாண்டு காலப் பகுதியில் 100 மிக் ரகத்தைச் சேர்ந்த போர் விமானங்களை பயிற்சியின்போது விமானப் படை இழந்துள்ளதாகவும், இத-ற்கு பதிலாக நவீன ரக பயிற்சி விமானங்களை கொள்வனவு செய்யுமாறு 126 பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதமர் வாஜ்பாயிடம் மனு ஒன்றை கையளித்துள்ளனர்.

அம் மனுவில் 126 பாராளுமன்ற உறுப்பினர்களும் கையெழுத்திட்டுள்ளனர். அதில் அவர்கள் தெரிவித்துள்ளதாவது;

இந்திய விமானப் படைக்கு அதிநவீன பயிற்சி விமானம் ஒன்றை வாங்குவது குறித்து கடந்த 15 ஆண்டுகளாக அரசு பரிசீலித்து வருகிறது. நவீன பயிற்சி விமானம் இல்லாததால் இந்திய விமானப்படை விமானிகள் சரியான முறையில் பயிற்சி பெற முடியவில்லை. சரியாக பயிற்சி பெறாத விமானிகளால் போர் விமானங்களை இயக்க முடியவில்லை. கடந்த 5 ஆண்டில் 100 நவீன மிக் ரக போர் விமானங்கள் தரையில் விழுந்து நொறுங்கி உள்ளன. 50க்கும் மேற்பட்ட விமானிகள் விபத்தில் பலியானார்கள். இனியும் இது போன்ற விமான விபத்து நடைபெறாமல் தடுக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். உடனடியாக நவீன பயிற்சி விமானத்தை அரசு வாங்கவேண்டும். இவ்வாறு அந்த மனுவில் கூறியுள்ளனர்.

# விஜயகாந்திற்கு இந்தியாவின் சிறந்த குடிமகன் விருது

தமிழக திரைப்பட நடிகர் விஜயகாந்திற்கு இந்தியாவின் சிறந்த குடிமகனுக்கான விருதை மத்திய அரசு வழங்கியுள்ளது. கடந்த 25ம் திகதி சனியன்று புதுடெல்லியில் நடைபெற்ற விழாவில் இவரது பொதுநல சேவையைப் பாராட்டி இவ் விருது வழங்கப்பட்டுள்ளது.

இவ்விருது கிடைத்தமை தொடர்பாக விருதினை பெறுவதற்கு முன்னர் விஜயகாந்திடம் செய்தியாளர்கள் கேட்டபோது, கூறியதாவது;

ஆந்திரா, கர்நாடகா, ஒரிசா, குஜராத் மராட்டியம் போன்ற மாநிலங்கள் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டபோதும், பூகம்பத்தால் நிலை குலைந்த போதும் நிதி உதவி அளித்தேன். கார்கில் போர் நடந்தபோது இந்தியாவைக் காக்க வேண்டும் என்ற நாட்டுப்பற்றோடு நிதி அளித்ததை இந்த நாடு அறியும். எந்த மாநிலத்திற்கு சோதனை வந்தாலும் நான் ஒரு இந்தியன் என்ற உணர்வோடு உதவி செய்த எனக்கு மதிப்பளித்து மத்திய அரசு இந்தியாவின் சிறந்த குடிமகன் என்ற விருதை வழங்க இருக்கிறது. இவ்விருது உங்கள் அனைவரின் அன்பாலும், ஆசீர்வாதங்களாலும், வாழ்த்துக்களாலும்தான் எனக்கு கிடைத்து



என்று சொல்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். அதை எனது பிறந்த நாளான ஒகஸ்ட் 25 அன்று பெறுவதில் அளவில்லா மகிழ்ச்சி அடைகிறேன். மேலும் இந்த விருது கிடைக்க தேர்வு செய்த அனைவருக்கும் எனது அன்பான நன்றியை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன் எனக் கூறியுள்ளார்.

# விநாயகருக்கு தடை நீக்கம்

சென்னையில் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு நடைபெறும் விநாயகர் ஊர்வலத்திற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை இறுதி நேரத்தில் தமிழக அதி.மு.க. அரசு அகற்றிக்கொண்டது. பல்வேறு இந்து அமைப்புக்கள் இத் தடை தொடர்பாக கண்டனங்களையும், ஆர்ப்பாட்டங்களையும் நடாத்தியதை அடுத்து இத் தடை நீக்கப்பட்டதாக தெரிய வருகிறது.

இத்தடை அகற்றப்பட்டமை குறித்து கருத்துத் தெரிவித்த தமிழக முதல்வர் ஜெயலலிதா; இந்து அமைப்புக்கள் சில விநாயகர் ஊர்வலத்தினை தடையை மீறி நடத்துவோம் என அறிவித்துள்ளன. இந்த அமைப்புக்களை காவல்துறை ஆணையாளர் அழைத்துப் பேசியுள்ளார்.

ஊர்வலத்தில் சட்ட ஒழுங்கு பிரச்சினை ஏற்படாது என்றும் அமைதியாக நடத்துவோம் என்றும் ஆணையாளரிடம் அவர்கள் உத்தரவாதம் அளித்துள்ளனர். இதனையடுத்து விநாயகர் சிலை ஊர்வலத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது எனத் தெரிவித்தார்.

ஆண்டுதோறும் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு நடாத்தப்படும் விநாயகர் ஊர்வலத்தில் பல்லாயிரக் கணக்கான சிலைகள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு கடலில் கரைக்கப் படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.


EURO MINI BUS வாகன சேவை

நீங்கள் உல்லாசப் பயணங்களை மேற்கொள்ள குளிரூட்டப்பட்ட சொகுசு வாகனசேவை.

தொடர்புகளுக்கு: 01 48 40 82 31
06 14 12 84 70
தொலைநகல்: 01 48 40 95 64



லூரட்ஸ் செல்லும் பக்தர்களுக்குத் தங்குமிட வசதிகள் செய்து தரப்படும்.


சந்தா

சந்தா தொடர்புகளுக்கு:


EELAMURASU S.A.R.L.
22, Rue Perdonnet,
75010 Paris,
FRANCE.
Tél: 00 33 (1) 40 37 63 63
Fax: 00 33 (1) 40 37 64 64
E.Mail-eelamurasu@noos.fr


தபாற் செலவுடன்

| நாடுகள் | ஆறு மாதம் | ஓர் ஆண்டு |
|---|---|---|
| பிரான்ஸ் | 225FR | 420FR |
| சுவிஸ் | 70SFR | 130SFR |
| ஜேர்மனி | 85DM | 160DM |
| பிரித்தானியா | £32 | £60 |
| ஏனைய நாடுகள் | 275FR | 520FR |

காசுக்கட்டளை, எனோலையை 'ஈழமுரசு' என்ற பெயருக்கு அனுப்பவும்.

## விண்ணப்பப் படிவம்

சந்தாக் காலம்: ஓர் ஆண்டு ☐ ஆறு மாதம் ☐

பெயர்:..............................................................

முகவரி:............................................................

.......................................................................

தொலைபேசி எண்: ...............................................

# உலகச் செய்திகள்

## மசிடோனியாவில் பிரித்தானிய படைவீரர் பலி

(27.08.01)

மசிடோனியா அரசிற்கும் அல்பேனிய தீவிரவாதிகளுக்கு மிடையே கடந்த சில மாதங்களாக நடந்துவந்த யுத்தத்தினை அடுத்து அப்பிராந்தியத்தில் அமைதியினை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை ஐரோப்பிய ஒன்றிய, ஐ.நா தலைவர்கள் மேற்கொண்டனர். கடந்தவாரம் அரசிற்கும் தீவிரவாதிகளுக்குமிடையே சமாதான ஒப்பந்தமொ -ன்று கைச்சாத்திடப்பட்டது. இதனையடுத்து அல்பேனிய தீவிரவாதிகளிடமிருந்து ஆயுதங்களை நேட்டோ தலைமையிலான இராணுவம் மீளப் பெற்றுக்கொள்ளும் என்றும் அறிவிக்கப்பட்டது. இதனைச் செயற்படுத்த 3500 வரையிலான இராணுவத்தினர் மசிடோனியாவிற்கு அனுப்பப்பட்டனர். இவர்கள் அல்பேனிய தீவிரவாதிகளிடமிருந்து 3000 முதல் 5000 வரையிலான ஆயுதங்களை மீளப்பெற்றுக்கொள்வார்கள் என அறிவிக்கப்பட்டது. இச்செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் வேலைத் திட்டத்தினை நேட்டோ படைகள் ஆரம்பித்தன. மசிடோனியாவின் வடக்கே ஆயுதங்களை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் இடம்பெற்றுக்கொண்டிருக்க தலைநகர் ஸ்கோப்பியேவிற்கு அருகே நேட்டோ படையில் அங்கம் வகிக்கும் பிரித்தானிய இராணுவ அணியின் அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். பிரித்தானிய ஒன்பதாவது பரசூட் அணியின் பொறியியலாளர்கள் கவச வாகனமொன்றில் சென்றுகொண்டிருந்தபோது பாலமொன்றிற்கு மேலே நின்றுகொண்டிருந்த இளைஞர்களால் கொங்கிறீற் கட்டிகள் உருட்டிவிடப்பட்டன. இதில் பல இராணுவத்தினர் காயமடைந்தனர். தலையில் காயமடைந்த நிலையில் ஒருவர் மருத்துவமனையில் இறந்துள்ளார்.

சிறுபான்மை அல்பேனிய மக்கள் நேட்டோவின் வருகையை வரவேற்றுள்ளவேளையில் பெரும்பான்மை மசிடோனியர்கள் வெளிநாட்டு படைகளின் அழுத்தத்தினை எதிர்த்து வருகின்றனர். மேலும் நேட்டோ கொண்டிருக்க, நேட்டோ படைகளுக்கு எதிரான செயற்பாடுகளும் மறுபுறம் இடம்பெறுகின்றன. தலைநகர் ஸ்கோப்பியேவில்




படைகள் சரியான முறையில் செயற்படுமா என்ற சந்தேகமும் இவர்களிடம் இருந்து வருகின்றது. மசிடோனிய ஜனாதிபதி இத் தாக்குதலை கண்டித்துள்ளார். இதனை ஒரு அர்த்தமற்ற வன்முறையே எனக் கூறி நேட்டோ துருப்புக்களின்மேல் திட்டமிட்ட தாக்குதலாக இதனை கருதக்கூடாது என்றும் கேட்டுக்கொண்டார்.

வடபகுதி நகரான குமணோவோவில் பிரஞ்சு மற்றும் அமெரிக்க உலங்கு வானூர்திகள் நேட்டோ படைகளை ஏற்றி இறக்கும் வேலைகளை மேற்கொண்டன. இங்குள்ள ஒட்ல்ஜா எனும் கிராமத்தில் அல்பேனிய தீவிரவாத தலைவர் ஒருவரால் 300 இற்கும் மேற்பட்ட ஆயுதங்கள் நேட்டோ படைகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஒரு புறம் ஆயுத பறிமுதல் நடந்து கடந்த ஞாயிறன்றும், திங்களன்றும் இரண்டு குண்டுகள் வெடித்துள்ளன. அத்துடன் நேட்டோவின் வருகையை அடுத்து கனரக ஆயுதங்களுடன் வெளியேற முயன்ற மசிடோனிய படைகளையும் ஆத்திரமடைந்த மக்கள் தடுத்து நிறுத்தினர். நாட்டின் இரண்டாவது பெரிய நகரான டெட்டோரவோவில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.


அல்பேனிய தீவிரவாதிகளிடம் 5000 வரையிலான ஆயுதங்களே உள்ளன என நேட்டோ அதிகாரிகள் கூறியுள்ளதை மசிடோனிய பிரதமர் மறுத்துள்ளார். அவர்களிடம் சுமார் 60,000 வரையிலான ஆயுதங்கள் உள்ளன என்றும், அவற்றை மீள ஒப்படைப்பதில் தீவிரவாதிகள் நேர்மையாக நடக்கமாட்டார்கள் என தான் நம்புவதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

## அமெரிக்க விமானத்தை சுட்டுவீழ்த்தியதாக ஈராக் அறிவிப்பு

(27.08.01)

ஈராக்கிற்கு மேலாக பறந்துகொண்டிருந்த அமெரிக்க கண்காணிப்பு விமானமொன்றினை தாம் சுட்டு வீழ்த்தியுள்ளதாக ஈராக் திங்களன்று அறிவித்துள்ளது. ஈராக்கிய பாதுகாப்பு அமைச்சு விடுத்துள்ள செய்தியொன்றில் குவைத் பிராந்தியத்திலிருந்து ஈராக்கிற்குள் நுழைந்த தன்னியக்க கண்காணிப்பு விமானம் ஒன்றினை தமது விமான எதிர்ப்பு அணியினர் சுட்டுவீழ்த்தினர் என்றும், இவ் விமானம் அதியுயர் தொழில்நுட்ப சாதனங்களைக் கொண்டிருந்ததென்றும் அறிவித்துள்ளது. தலைநகர் பாக்தாத்திற்கு தெற்கே 340 மைல் தொலைவில் பாஸ்ரா நகருக்கு அருகிலேயே மேற்படி விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டது. இதுவரை அமெரிக்காவின் பல விமானங்களை தமது விமான எதிர்ப்பு அணியினர் சுட்டுவீழ்த்தியதாக ஈராக் கூறிவந்த போதிலும் அதனை அமெரிக்கா ஏற்றுக்கொள்ளவில்லை. ஆதாரங்கள் அற்றவை என கூறி ஈராக்கின் கூற்றினை நிராகரித்தது. தற்போது நடந்த தாக்குதலைப் பற்றியும் ஆரம்பத்தில் எதுவுமே கூறாதிருந்த அமெரிக்க பாதுகாப்பு அமைச்சு இப்போது தங்களது வேகம் குறைந்த தாக்குதலுக்கு இலக்காகக்கூடிய கண்காணிப்பு விமானமொன்று காணாமல் போயுள்ளதாக கூறியுள்ளது.

ஐக்கிய அமெரிக்காவும், பிரித்தானியாவும் 1991-92ல் தென்பகுதியில் சியாட் முஸ்லீம் பிரிவினைவாதிகளை பாதுகாக்கவும் வடக்கே குர்திஷ் பிரிவினைவாதிகளை பாதுகாக்கவும் விமானப் பறப்பு தடைப் பிராந்தியத்தை அறிவித்தன. அதனை கண்காணிக்கும் ரோந்து நடவடிக்கைகளையும் அந்நாடுகள் மேற்கொண்டு வந்தன. ஆனால் இவற்றை ஈராக் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.



## தகவல் வலைக்கு ஆப்கானிஸ்தானில் தடை

(26.08.01)

ஆப்கானிஸ்தானின் ஆளும் தலிபான் ஆட்சியாளர்கள் சர்வதேச உதவி நிறுவனங்கள் தகவல் வலையினை பாவிப்பதை தடை செய்துள்ளனர். ஆப்கானிஸ்தானில் சரியான தபால் விநியோகங்கள் இல்லாத நிலையில், சரியான தொலைபேசி பரிவர்த்தனை இல்லாத நிலையில், தகவல் வலையின் மூலமே உதவி நிறுவனங்கள் தமது அலுவலகங்களுக்கிடையே செய்திகளை பரிமாறி வந்தன.

ஆளும் தலிபான் ஆட்சியாளர்களின் உயர் தலைவரான முல்லா முகமட் ஓமார் சனியன்று விடுத்துள்ள அறிவித்தலில் அரச திணைக்களங்கள் மற்றும் உள்ளூர் உதவி நிறுவனங்களும் கூட தகவல் வலையை பாவிப்பதை நிறுத்திக்கொள்ள வேண்டும் என கூறியுள்ளார். தகவல் வலையின் மூலம் கடிதங்கள் அனுப்புவதும் தடைசெய்யப்பட்டுள்ளது என்று கூறியுள்ள அவர் தென்பகுதி நகரான காண்டகாரில் மட்டுமே தகவல்வலைத் தொடர்பு இருக்கலாம் என்றுள்ளார். அங்கு அரசின் உயர் தலைவர்கள் நிலைகொண்டுள்ள காரணத்தினால் அங்கு தகவல் வலையின் அவசியம் உள்ளதெனவும் அவர் மேலும் கூறினார். தகவல் வலைக்கு விதிக்கப்பட்டுள்ள தடை அமுலுக்கு வந்துள்ளபோதிலும் அதனைப் பாவித்தால் எவ்வித தண்டனை வழங்கப்படலாம் என்பது குறித்து எதுவும் அறிவிக்கப்படவில்லை. இஸ்லாமிய சட்டத்தின் மூலம் தண்டனைகள் வழங்கப்படலாம் எனக் கூறப்பட்டுள்ளபோதிலும் தகவல் வலைத் தொடர்புகள் இஸ்லாமிய கோட்பாடுகளை எவ்வாறு மீறுகிறது என்பது பற்றி எதுவும் கூறப்படவில்லை.

மூன்று வாரங்களுக்கு முன் கிறிஸ்தவ உதவி நிறுவனமொன்றின் உறுப்பினர்கள் நாட்டில் கிறிஸ்தவத்தை பரப்புகின்றனர் எனக் குற்றம் சாட்டப்பட்டு கைதுசெய்யப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

புதிய முகவரியில்
கீபோட் வகுப்புகளின் ஆரம்பம்

ஆசிரியர் S.S. தில்லைச்சிவம்
22, Rue Chouveroux, 93000 Aubervilliers.
M°: Aubervilliers Quatre Chemins
Tel: 01 48 34 60 15 / 06 20 31 24 90

உங்கள் ஜாதக குறிப்புக்கள் கைவசம் இல்லையா? கவலையை விடுங்கள்

கம்பியூட்டரின் உதவியுடன் நாங்கள் அவற்றைக் கணித்துத் தருகிறோம்.
உங்கள் பிறந்த திகதி, பிறந்த நேரம், பிறந்த இடம் இவை மட்டும் இருந்தால் போதுமானது.
பிறந்த நேரம் தெரியாதவர்களுக்கு நியூமராலஜி மூலம் எதிர்காலப் பலன்கள் கணித்துத் தரப்படும்.
உங்கள் குழந்தைகளின் ஜாதகக்குறிப்புக்கள், ஜாதகபலன்களை கணித்துக் கொள்வதற்கு நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

Pega Star -Co Verleger
Mr. A. Thevaraj
Böblinger str. 87
D-70199 Stuttgart/ Germany
Tel: 0049 + 711 - 6157023
Fax: 0049 + 711-6157030
E-Mail: theva@t-online.de

ஜாதகக்குறிப்பு + ஜாதகப்பலன்கள் (15 பக்கங்கள்) கணித்துத் தருவதற்கு தபால் செலவு உட்பட தொகை 56 DM, 50 Swiss FR, 40 Ca $ மட்டுமே!
படிவத்தை நிரப்பி அனுப்பவும்

*Fullname:* ..................................
*Date of Birth:* .................. *Time of Birth:* ..............
*Place of Birth:* ..................................
*Address:* ..................................
..................................
*City/ Date:* ..................... ______________
*Signature*

Name: A. Thevaraj
Bank: Deutsche Bank Stuttgart
Konto Nr: 962056800 BLZ 60070024
Name: Antonippillai Thevaraj

Pub:Gr

# அகதிக் கப்பலுக்கு அவுஸ்திரேலியா அனுமதி மறுப்பு

(27.08.01)

அகதிகளுடன் பயணித்துக் கொண்டிருக்கும் நோர்வே கப்பலை தனது நாட்டிற்குள் வர அவுஸ்திரேலியா தடைவிதித்துள்ளது. மேற்படி கப்பல் இந்து சமுத்திரத்தில் மூழ்கிக்கொண்டிருந்தவேளை நோர்வே கப்பலான டம்பாவினால் அதிலிருந்த அகதிகள் காப்பாற்றப்பட்டனர். மூழ்கிக்கொண்டிருந்தது இந்தோனேசியர் ஒருவருக்கு சொந்தமான கப்பலெனச் சொல்லப்படுகிறது. மேற்படி கப்பலில் 483 அகதிகள் உள்ளதாயும் இவர்களில் பெரும்பான்மையானோர் ஆப்கான் பிரஜைகள் என்றும் இதில் சிறீலங்கா பிரஜைகளும் உள்ளனர் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவுஸ்திரேலியப் பிரதமர் ஜோன் ஹோவாட் இச் சம்பவம் பற்றித் தெரிவிக்கையில் தனது அரசு நோர்வே கப்பலின் கப்ரினுக்கு அவுஸ்திரேலிய கடற் பிராந்தியத்திற்குள் கப்பலைக் கொண்டுவர அனுமதி மறுக்கப்பட்டுள்ளதை அறிவித்துள்ளதாயும் கப்பல் பிரச்சினையை இந்தோனேசியாவும், நோர்வேயுமே தீர்த்துக்கொள்ளவேண்டும் என்றுள்ளார். ஆனால் நோர்வே இதனை வன்மையாகக் கண்டித்துள்ளது. அந்நாட்டின் வெளியுறவு அமைச்சர் கார்ஸ்டன் கிள-ப்ஸ் விக் இதனை ஒரு குழப்பகரமான செயற்பாடு என நாம் கணிக்கின்றோம். இப்பிராந்தியத்தில் உள்ள நாடுகள் பொறுப்பேற்றுக்கொள்ள மறுப்பதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது என்றார். இந்தோனேசியாவின் வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் வாகீட் சுப்பிரியாடி தமது அரசு அவ் அகதிக்கப்பலை ஏற்றுக்கொள்ளாது என்பதில் உறுதியாக உள்ளதாகத் தெரிவித்தார். அவுஸ்திரேலிய அரசு அவ் அகதிகளிடம் சரியான ஆவணங்கள் இல்லை என்ற காரணத்தினால் ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் அதனை நாம் அங்கீகரிக்க முடியாது. மேலும் இந்தோனேசிய கடற்பகுதியில் இருந்து அக் கப்பல் புறப்பட்டுச்சென்றுள்ளது என்ற குற்றச்சாட்டினையும் நாம் ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் உள்ளோம். அநேகமாக அகதிகள் சிறு சிறு படகுகளிலேயே புறப்பட்டுச் செல்வது வழக்கம் என்றார் அவர்.

நோர்வே சரக்குக் கப்பலான டம்பாவின் தலைமை மாலுமியான ஆர்ன் றின்னன் அவுஸ்திரேலியாவின் வானொலி ஒன்றிற்கு பேட்டியளிக்கையில் இந்தோனேசிய தீவான ஜாவாவில் இருந்து 220 மைல் தெற்கே அவுஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவிற்கு 12 மைல் தொலைவில் இந்தோனேசிய கப்பல் மூழ்கிக் கொண்டிருந்ததாயும் அதிலிருந்தே அகதிகள் மீட்கப்பட்டனர் என்றும் அவர்களில் இருவரது நிலை பற்றி தான் கவலைப்படுவதாயும் கூறியுள்ளார். இந்தோனேசிய கப்பலான கே.எம் பலாபா திங்களன்று அதிகாலை உதவி கேட்டு செய்திகளை அனுப்பியதை அடுத்து தனது கப்பல் அங்கு சென்று அகதிகளை மீட்டதாயும் அதில் உள்ளோர்களில் பெரும்பான்மையானோர் தாம் அவுஸ்திரேலியாவிற்கே செல்ல விரும்புவதாயும் இந்தோனேசியாவிற்கு தம்மைக் கொண்டுசெல்ல வேண்டாம் என்றும் கோரியதாயும் அக் கப்பலிலிருந்த ஐவர் தன்னை மிரட்டி கப்பலை கிறிஸ்மஸ் தீவிற்கு கொண்டுசெல்லுமாறு பணித்தனர் என்றும் அவர் கூறினார்.

மேற்படி கப்பலில் உள்ள அகதிகளுக்கு உணவு மற்றும் மருத்துவ, மனிதாபிமான உதவிகளை தமது நாடு புரியும் என்று அவுஸ்திரேலியப் பிரதமர் கூறியுள்ளார். அதேவேளை அவ் அகதிகள் மீண்டும் இந்தோனேசியாவிற்குச் செல்வதற்கான நிதி உதவியையும் தம்மால் செய்யமுடியும் எனவும் அவர் கூறினார்.

# அங்கோலா பேருந்துத் தாக்குதலில் 50 பேர் மரணம்

(27.08.01)

அங்கோலாவில் இடம்பெற்ற பேருந்துத் தாக்குதல் ஒன்றில் 50 பேர் வரையானோர் கொல்லப்பட்டும், பலர் படுகாயமடைந்தும் உள்ளனர் என்றும் அரச செய்திகள் தெரிவிக்கின்றன. இத் தாக்குதல் கடந்த வெள்ளியன்று இடம்பெற்றதாகவும், அதுபற்றிய செய்திகளை தாம் இப்போதே அறிந்துகொள்ள முடிந்துள்ளதாயும் கூறியுள்ள அரச அதிகாரியொருவர் இத் தாக்குதலுக்கு யுனிட்டா எனப்படும் அங்கோலா ஐக்கிய விடுதலை முன்னணியே காரணம் என்றும் கூறியுள்ளார். அங்கோலாவின் வடமேற்குப் பகுதியில் மெலாஞ்சே என்றும் நகருக்கு அருகே நெடுஞ்சாலையில் பயணித்துக்கொண்டிருந்த பேருந்து ஒன்றின்மேல் ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டதாயும் அதனை அடுத்து துப்பாக்கி ஏந்தியவர்கள் பயணிகள்மேல் தாக்குதல்களை நடாத்தியதாயும் பாதுகாப்பு வட்டாரங்கள் கூறியுள்ளன. இம் மாத ஆரம்பத்தில் அகதிகளை ஏற்றிவந்த தொடருந்து வண்டிமீது யுனிட்டா தீவிரவாதிகள் தாக்குதல் நடாத்தியதில் 250 பேர் கொல்லப்பட்டது தெரிந்ததே. 1975ம் ஆண்டு போர்த்துக்கேயரிடமிருந்து சுதந்திரம் பெற்றுக்கொண்ட அங்கோலாவில் தொடர்ந்து இடம்பெற்றுவரும் சிவில் யுத்தத்தினால் இதுவரை ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

# ஸ்பெயினின் விமான நிலையத்தில் குண்டுவெடிப்பு

(27.08.01)

ஸ்பெயினின் பிரதான விமான நிலையமான தலைநகர் மற்றிட்டின் பாராஜாஸ் விமானநிலையத்தில் கார் குண்டொன்று வெடித்துள்ளது. இத்தாக்குதலுக்கு பாஸ்க் பிரிவினைவாதிகளான எட்டா அமைப்பினர் காரணம் என பாதுகாப்புத் துறையினர் கூறியுள்ளனர். ஸ்பெயினில் உல்லாசப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ள இந்த கோடை காலத்தில் ஒரு மாதத்திற்குள் நடாத்தப்பட்ட மூன்றாவது தாக்குதல் இதுவாகும்.

இன்று காலை 8 மணியளவில் விமான நிலையத்தின் வாகனத் தரிப்பிடத்தில் குண்டு வெடித்துள்ளது. இக் குண்டு வெடிப்பு இடம்பெறுவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பாக வாகனம் ஒன்றில் குண்டு ஒன்று வைக்கப்பட்டுள்ளதாக அநாமதேய தொலைபேசி அழைப்பொன்று வந்துள்ளது. இதனையடுத்து மக்கள் அப் பகுதியில் இருந்து வெளியேற்றப்பட்டனர். இதனால் யாருக்கும் காயங்கள் ஏற்படவில்லை என்றபோதிலும் நூற்றுக்குமேற்பட்ட வாகனங்கள் சேதமடைந்தன. இதன் பின்னர் பொலிசார் அத் தரிப்பிடத்தில் கடுமையான சோதனைகளை மேற்கொண்டனர். அதன்போது மற்றுமொரு வாகனம் அவர்களால் குண்டுவைத்து தகர்க்கப்பட்டது. ஆனால் அதில் வெடிபொருட்கள் இருக்கவில்லை. கடந்தவாரம் ஸ்பெயினின் உளவுத்துறை அதிகாரிகளால் எட்டா அமைப்பின் முக்கிய உறுப்பினர்கள் பலர் கைதுசெய்யப்பட்டனர்.

இதன் பின்னர் எட்டா அமைப்பின் பிரதான கட்டமைப்பினை தாம் செயலிழக்கச் செய்துவிட்டதாக கூறிய பாதுகாப்பு படையினர் சுமார் 400 கிலோ வெடிபொருட்களையும் கைப்பற்றினர். இந் நடவடிக்கைகளுக்குப்பதிலாகவே விமானநிலைய குண்டுவெடிப்பு இடம்பெற்றுள்ளது எனக் குறிப்பிட்டுள்ள அரசியல் ஆய்வாளர்கள் எட்டா அமைப்பினர் இன்னமும் தங்களால் சுதந்திரமாக செயற்பட முடியும் என்பதனை இதன் மூலம் தெரியப்படுத்தியுள்ளனர்.

---


மோதல்கள் ஒருபுறம் உக்கிரமடைந்துவர ஜேர்மனியின் மத்தியஸ்தத்தில் மீண்டும் சமாதானப் பேச்சுக்கள் இடம்பெறலாம் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன. கடந்தவாரம் ஜேர்மனியின் வெளியுறவு அமைச்சர் இஸ்ரேலிய, பாலஸ்தீன அதிகாரிகளை சந்தித்து பேச்சுவார்த்தையை நடாத்தினார். இதனையடுத்து பாலஸ்தீன அதிகார சபையின் தலைவர் யாசீர் அரபாத் இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சர் சிமோன் பெரஸ் போன்றோர்களுக்கிடையிலான சந்திப்பொன்றினை ஏற்படுத்தும் முயற்சிகள் இடம்பெறுகின்றன என்றும் சண்டையின் போக்கு அமைதியானால் அடுத்தவாரம் இருவரும் சந்தித்துக்கொள்வார்கள் என இஸ்ரேலியப் பத்திரிகையொன்று செய்திவெளியிட்டுள்ளது.

# இஸ்ரேலியத் தாக்குதலில் பாலஸ்தீனத் தலைவர் கொல்லப்பட்டார்

(27.08.01)

பாலஸ்தீன விடுதலை அமைப்பில் அங்கம் வகிக்கும் பிரதான பிரிவொன்றின் தலைவர் இஸ்ரேலின் எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளார். பாலஸ்தீன விடுதலைக்காக போராடும் அமைப்புக்களில் மிக நீண்ட சரித்திரத்தைக்கொண்ட PFLP எனப்படும் பாலஸ்தீன விடுதலைக்கான மக்கள் முன்னணியின் தலைவர் அபூஅலி முஸ்தபா தனது அலுவலகத்தில் இருந்த சமயம் இஸ்ரேலிய உலங்கு வானூர்தியிலிருந்து ஏவப்பட்ட ஏவுகணை தாக்குதலில் கொல்லப்பட்டார். மேற்படி அமைப்பின் தலைவராக நீண்டகாலமாக இருந்த ஜோர்ஜ் ஹபாஷ் கடந்த வருடம் பதவியிலிருந்து விலக்கிக்கொள்ள, 64 வயதான அபூஅலி முஸ்தபா பதவியை பொறுப்பேற்றார். மேற்படி தாக்குதலை தாம் நடாத்தவேண்டிய அவசியத்தைக் கொண்டிருந்ததாக இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சு விடுத்துள்ள செய்தியொன்றில் கூறியுள்ளது. இஸ்ரேலின் பல பகுதிகளிலும் இடம்பெற்ற கார் குண்டுத்தாக்குதல்களின் பின்னணியில் மேற்படி அமைப்பே இருந்துள்ளது என இஸ்ரேல் குற்றஞ்சாட்டியுள்ளது.

கடந்த இரண்டு நாட்களில் ஏழு இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்ட சம்பவங்களுக்கு பதிலடியாக இஸ்ரேலிய விமானப்படை



மற்றும் உலங்குவானூர்திகள் கடுமையான தாக்குதல்களை பாலஸ்தீனப் பகுதிகளில் மேற்கொண்டது. அத்துடன் தாங்கிகளும் பல எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டன. இதன் ஒரு கட்டமாகவே மேற்குக் கரையில் றமல்லா நகரில் பாலஸ்தீன அமைப்பின் தலைவரது கொலையும் இடம்பெற்றுள்ளது.

கடந்த திங்களன்று இஸ்ரேலிய பாதுகாப்புத்துறை விடுத்த செய்தியில் பாலஸ்தீன பாதுகாப்பு நிலைகள் மீது தாக்குதல் நடத்துவது தொடரும் என்று பாலஸ்தீனர்கள் தங்களது வன்முறையை கைவிடும்வரை தமது இராணுவத்தினர் தாக்குதல்களை நடாத்துவதை தடுக்கமுடியாது என்றும் கூறியது. விடுமுறையில் சென்றிருந்த இஸ்ரேலிய அதிபர் இடைநடுவே திங்களன்று ரெல்அவிவிற்குச் சென்று முக்கிய அமைச்சர்களைச் சந்தித்தார். இதன்பின் அவரது பேச்சாளர் கூறுகையில் பாலஸ்தீன அதிகார சபையின் பாதுகாப்பு படைகளால் நடாத்தப்படும் தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. இதனால் இழப்புக்களும் கூடியுள்ளன. ஆகவேதான் அவர்களது தலைமைக் காரியாலயத்தை நாம் தாக்கவேண்டிய நிலை ஏற்பட்டது எனக் கூறினார்.

வோல்த்தம்ஸ் ரோவில் புதிய நகைமாளிகை

ATN Jewellery

37, Palmerston Road, Walthamstow E17 6PR

Tel: 020 8521 9767

வாரம் ஏழு நாட்களும் காலை 11.30 முதல் மாலை 7 மணி வரை திறந்திருக்கும்



தமிழர் தங்க நகைத் தேவைகளையும் உயர் ரக வேலைப்பாடுகளுடன் எண்ணம்போல் தெரிவு செய்ய நாடவேண்டிய இடம் ATN Jewellery. இங்கு உலக தரத்தின் சின்னமான 916 ATN பொறிக்கப்பட்ட உத்தரவாத தங்க நகைகள் கிடைக்கும். என்றும் உங்கள் எண்ணம்போல் தெரிவு செய்ய நாடவேண்டிய நிறுவனம் ATN!!

Pub.Lon.

GLOBAL TELECOM CALL ஆதரவில்

R.T.M. BROTHERS INTERNATIONAL வழங்கும்

# கலைத்தென்றல்

MEGA MUSICAL NITE 2001



'கவர்ச்சிக்கன்னி' பாபிலோனா – 'ஊஞ்சல் தொலைக்காட்சி புகழ்' பாப்துயின் ஷாலினி
'சபாஷ் புகழ்' திவ்வியா உன்னி – 'படையப்பா–மின்சாரப்பூவே' சீனிவாஸ்
'கட்டிபுடி கட்டிபுடிடா–சிட்டிசன்' வசுந்த்ராதாஸ் இவர்களுடன்

# லஷ்மன் ஸ்ருதி யின்

## மாபெரும் இன்னிசை இரவு

LAKSHMAN SRUTHI 100% MANUAL ORCHESTRA

**02.09.2001 ஞாயிறு மாலை 6.00 மணி**

## L.S.C. Espace Europeen

146, av. du Presedint Wilson - 92210 La Plaine Saint Denis

விழுது நடனக்குழுவினரின் நடன நிகழ்ச்சியும் இடம்பெறும்



தொடர்புகளுக்கு: 06 09 61 61 53 - 06 12 88 04 74

T.R.T. TAMIL OLI 01 48 30 44 55

SIVA 'IN' PHONE 2000 01 42 58 55 40

SINGAPORE SILK POINT 01 46 07 03 80

RESTAURANT ARISTO 01 44 72 91 02

TRISTAR ASSURANCE 01 42 09 05 63

J.S.G. TELECOM 01 40 35 14 13

WOODLANDS 01 40 37 08 20

L'OR INDIAN 01 42 05 63 89

SHRI BHARATHI 01 42 05 46 04

SHALINI COOL BAR 01 42 09 70 10

ERRANCES TRAVELS 01 42 09 70 00

SRUTHI PHOTO 01 40 35 16 10

RESTAURANT BRINDAVEN 01 40 34 20 90

VATHANI MAHAL 01 53 28 09 67

S.J. TELECOM 01 43 70 43 35

HIBISCUS FLEURS 01 53 56 07 81

JAFFNA BOUCHERIE 01 40 35 46 47


ஈழமுரசு
Eelamurasu Weekly
"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

# காலம் கடந்தாலும்


'அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்றறுக்கும்' என்று எங்கள் முதாதையர்கள் ஒரு பழமொழி சொல்வார்கள். தமிழ் மக்கள் மீது மாறி மாறி ஆட்சிக்கு வரும் சிங்கள அரசுகள், இனவாதத்தை கட்டவிழ்த்துவிட்டு, அவர்களை மனிதர்களாவே மதிக்காது, தான் வளர்த்தெடுத்த இனவாத சக்திகளின் மூலமும், தனது படையினர் மூலமும் மிகக் கொடூரமான வன்முறைகளை கட்டவிழ்த்து விட்டது. இன்னும் அதனை தொடர்ந்து மேற்கொண்டபடியேதான் இருக்கின்றது. அந்த வகையில் உலக நாகரிகமே வெட்கித் தலைகுனியும் மிகக் கேவலமான ஒரு செயற்பாடுதான் சந்திரிகா அரசின் படைகள் 1997 ஒகஸ்ட் 21ல் மேற்கொண்ட கோணேஸ்வரியின் படுகொலை என்பதை மனித நேயத்தை மதிக்கும் எந்த ஒரு சக்தியும் மறுக்காது.

தமிழ் மக்கள் என்றால் அவர்களை எவ்வாறு வேண்டுமானாலும் தாக்கலாம், படுகொலை செய்யலாம் பெண்கள் என்றால் அவர்களை வல்லுறவுக்கு உட்படுத்தலாம், படுகொலை செய்யலாம் யாரும் கேட்கப்போவதில்லை என்ற நோக்கத்துடனேயே சிறீலங்காவின் இராணுவம் செயற்பட்டு வருகின்றது. இதனை அந்நாட்டின் அரசு மட்டுமல்ல உலக நாடுகளும் பெரும்பாலும் கண்டுகொள்ளாமலே இருந்து வருகின்றமை அதன் செயற்பாட்டிற்கு இன்னும் உத்வேகத்தையே அளித்து வந்திருக்கின்றது.

இந்நிலையில் தான் நான்கு வருடங்களின் முன் படுகொலை செய்யப்பட்ட கோணேஸ்வரியின் நினைவாக பொறுமையாக நின்று இந்தப் பதிலடி கொடுக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு தாக்குதல் என்பதற்கு அப்பால், தமிழ் மக்கள் மீது தாம் மேற்கொண்ட ஒவ்வொரு தாக்குதலுக்கும் காலம் கடந்தாலும் கணக்குகள் தீர்க்கப்படும் என்பதை சிங்களத்திற்கு எச்சரித்துக் காட்டியுள்ள ஒரு நடவடிக்கையாகவுமே அமைந்துள்ளது.

ஆனால், யதார்த்த நிலைமைகளை சிங்களம் என்றுமே ஏற்றுக்கொண்டதில்லை. பேரழிவுகளைச் சந்தித்துக்கொண்டாலும் தனது வறட்டுக் கௌரவத்திற்காக இன்னும் பேரழிவுகளைச் சந்திப்பதற்காகவே தான் அது தயாராகிக்கொண்டிருக்கின்றது. இந்த நிலையில்தான் தனிச் சிங்கள ஆட்சி என்ற சொல் அண்மைக் காலமாக சிறீலங்காவின் ஊடகங்களிலும், அரசியல் விடயங்களிலும் மிகவும் விறுவிறுப்பாக பேசப்படும் விடயமாகியுள்ளது. இரு பிரதான சிங்களப் பேரினவாதக் கட்சிகளும் இதன் பேரப் பேச்சுக்களில் இறங்கியிருக்கின்றன. மூன்றாவதாக உள்ள ஜே.வி.பியும் இன்னொரு பக்கத்தால் அரசுடன் பேச்சுக்களில் இறங்கியுள்ளது. தமிழ்க்கட்சிகள் அனைத்தையும் ஓரம்கட்டி விட்டு, சிங்கள பேரினவாதக் கட்சிகள் ஒன்றிணைந்து ஆட்சியை பங்குபோட்டுக் கொண்டு தமிழர்களை ஒழிப்பது என்பதுதான் இதன் திட்டம் என்பது சாதாரணமாகவே அனைவருக்கும் விளங்கிவிடும்.

அடக்குமுறைகளுக்கு எதிராக அகிம்சை வழியில் போராடிய தமிழ் மக்களை, ஆயுதம் ஏந்திப் போராடுவதற்கு நிர்ப்பந்தித்த சிறீலங்காவின் ஆட்சியாளர்கள், தற்போது தனிச் சிங்கள ஆட்சியை ஏற்படுத்த முனைந்து நிற்கின்றனர். இது தமிழர்களும் தனித் தமிழ் ஆட்சியை ஏற்படுத்துங்கள் என நிர்ப்பந்திக்கும் ஒரு நடவடிக்கை என்பதைத்தவிர வேறில்லை.



# பார்வை

## குழப்பமான தேர்வு: சந்திரிகாவா? ரணிலா?

அரசியல் குழப்பம், பொருளாதார வீழ்ச்சி, இராணுவ தோல்விகள் என்பன சிறீலங்காவின் அத்திவாரத்தையே உலுப்பி வருகின்றது. இந்தச் சூழலில் மேற்குலக நாடுகள் தேர்வுக்கு ஆயத்தமாகிவிட்டன. சந்திரிகாவா அல்லது ரணிலா என்கின்ற கோணத்தில் இராஜதந்திர வட்டாரங்கள் தமது தேடலை நடாத்துவதாக கொழும்பு செய்திகள் தகவல் தருகின்றன. சந்திரிகாவை பலமான - தீர்க்க தரிசனமுள்ள தலைவியாக முன்பு பார்த்த பல நாடுகள் இன்று அவரது பலவீனமான இரட்டை வேட அரசியல் பரிதாபமான முடிவை நோக்கிச் செல்வதை மௌனமாக பார்த்திருக்க அமெரிக்க தூதுவர் சந்திரிகாவுக்கு இடைக்கால நிம்மதியை வழங்கக் கூடிய தீர்வைத் தர தான் முயல்வதாக பகிரங்கமாக அறிவித்தார். கொழும்பு வர்த்தக தலைமைகளும் அத்தகைய ஏற்பாடு தமக்கு ஏற்புடையன போன்று அறிவிப்புக்களை விடுத்தன. எனினும், அதிகாரப் போட்டிக்கான தேர்வில் முன்னேறிவரும் ரணில் சந்தர்ப்பத்தை விட்டுக் கொடுக்கத் தயாராகவில்லை. சாவடையும் சந்திரிகாவுக்கு உதவிட தாம் தயாரில்லை எனவும், சந்திரிகா பிரச்சனையே தவிர தீர்வல்ல எனவும் அறிக்கை விடுத்து அரசியல் அரங்கை ரணில் சூடேற்றிவருகின்றார்.

சந்திரிகாவும் தனது விசுவாசத்திற்குரிய மாமா ரத்வத்தை, கதிர்காமர் மற்றும் ஒருசில நண்பர்களுடன் இணைந்து காய்களை நகர்த்தி அதிகாரத்தை கைகளில் வைத்திருக்க படாத பாடு படுகின்றார். இந்த முரண்பட்ட சூழலில் மேற்குலக நாடுகள் தமக்கு ஏற்புடைய குதிரையை தேட முயல்கின்றன.

அடிப்படையில் இருவருமே மேற்குலக நலன்களுக்கு எதிரானவர்கள் அல்ல. ஆயினும், சந்திரிகாவிடம் வலுவான தலைமைக்குரிய சரக்கு இருக்கும் அதேவேளை ரணில் மேற்குலக வணிக நலன்களுக்கு ஏற்புடைய தலைமையை வழங்குவார் என்கின்ற முரண்பட்ட கருத்துக்கள் நிலகின்றது. சந்திரிகாவால் புலிகள் எதிர்ப்பு மற்றும் சிங்களப் பகுதிகளில் ஏற்படலாம் எனக் கருதப்படும் கலகங்களை கையாளும் வலுவான தலைமையை வழங்க முடியும் என சில நாடுகள் இன்னமும் நம்புவதாக கூறப்படுகின்றது. மறுபுறம், ரணிலினால் இத்தகைய போர்சூழலை கையாள முடியாது என்கின்ற பயம் பல தரப்பிடமும் காணப்படுகின்றது.

இச் சூழலில் சந்தரிகாவையும், ரணிலையும் இணைக்கும் முயற்சி கைகூடாத பட்சத்தில் இருவரது தலைமை ஆற்றல்களும் மோதி தீர்வைத் தேடும் வரை மேற்கு காத்திருக்கலாம் எனக் கூட கருதப்படுகின்றது.

* * *

## காப்புறுதிக் கப்பம்

சர்வதேச பயணங்களுக்கான காப்புறுதியை குறைத்து சிறீலங்காவின் பொருளாதாரத்திற்கு ஏற்பட்ட பின்னடைவை சரிசெய்யும் முயற்சியில் சிறீலங்கா ஒரு இணக்கத்திற்கு வந்துள்ளது. 50 பில்லியன் டொலர்களை முற்பணமாகக் கொடுத்து அதன் அடிப்படையில் காப்புறுதியை குறைத்துவிடும் உடன்பாட்டிற்கு சிறீலங்கா சம்மதம் தெரிவித்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. அதாவது சிறீலங்கா கொடுக்கும் 50 பில்லியனை தன்னகத்தே வைத்துக்கொண்டு சிறீலங்காவுக்கு போக்குவரத்துக்களை மேற்கொள்ளும் கப்பல்கள், விமானங்களுக்கு குறைந்த விலையில் காப்புறுதி செய்ய சர்வதேச காப்புறுதி நிறுவனங்கள் முன்வந்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. எனினும், இவ்விடைக்கால ஏற்பாடு சிறீலங்காவின் துறைமுகத்திற்கு சென்றுவரும் நம்பிக்கையை கப்பல் நிறுவனங்களுக்குத் தருமா என்கின்ற கேள்வி பெரிதாக எழுந்துள்ளது.

கடந்த வாரம் சிறீலங்காவின் தகவல் தொடர்பு மையம் வெளியிட்ட செய்தியொன்றில் கொழும்பின் முக்கிய மையங்களை புலிகள் தாக்க முயல்கின்றனர் என அவசர அறிக்கை விடப்பட்டது. இது கொழும்பில் இடம்பெறவிருந்த ஐ.தே.க. ஊர்வலத்தைக் குழப்பவிடுக்கப்பட்ட அறிக்கையாகும். எனினும், இதன் சர்வதேசப் பரிமாணம் பெரியது. புலிகளின் தாக்குதல்கள் எங்கும், எப்போதும் நிகழலாம் என்கின்ற பீதியை இது ஏற்படுத்தியது. இது கொழும்பு வணிகத்திற்கு மறைமுக பாதிப்பை ஏற்படுத்தியது. அதேபோன்று சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சு புலிகளை பயங்கரவாதிகள் என நிரூபிக்க காலத்திற்குக் காலம் விடுக்கும் பொய் எச்சரிக்கை அறிவிப்புக்கள் பீதியை கிளப்பும் என்கின்ற உண்மையை கொழும்பு ஏடுகள் அண்மைக்காலமாக சுட்டிக்காட்டி வருகின்றன.

எனவே, பெரும்தொகை பணத்தை கப்பம் கட்டி காப்புறுதியை குறைக்கும் சிறீலங்காவின் தந்திரோபாயம் வெற்றிபெறப் போவதில்லை என்றே நம்பப்படுகின்றது.

* * *

## திசையற்ற எழுத்துக்கள்!

சிங்கள இனவாதியான எல்.குணசேகர என்பவர் *கட்டுநாயக்க சாம்பலில் இருந்து எழுவோம்* என்கின்ற தலைப்பில் ஒரு இனவாதக் கட்டுரையை எழுதியுள்ளார். அதில் சிறீலங்காவின் இராணுவம் மீள வடிவமைக்கப்பட வேண்டும் என வலியுறுத்தும் அவர், சிறீலங்கா மீது பிற நாடுகள் பொருளாதார முற்றுகையை விதித்திருப்பதாக கூறுகின்றார். கட்டுநாயக்க தாக்குதலின் பின்னர் காப்புறுதிகள் உயர்த்தப்பட்டு பல கப்பல்கள் கொழும்பு செல்லாமல் தவிர்த்ததை அவர் முற்றுகை என்கின்றார். அவரது பிரதான வாதம், ஒரு சிங்கள ஆட்சியை இரு பிரதான கட்சிகளும் சேர்ந்து அமைத்தலேயாகும். அத்தகைய அரசே போரில் வெற்றிபெறத் தேவை என்கின்றார். கொழும்பு ஏடுகள் பல அவரது கட்டுரையை முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்துள்ளன. சிங்கள ஆணைக்குழுவின் அறிக்கை என்கின்ற பெயரில் சிங்கள பேரினவாதக் கருத்துக்களை பகுதி பகுதியாக *தி ஐலண்ட்* வெளியிட்டுவருவதும் இங்கு அவதானிப்புக்குரியது.

எனினும், அவர்களின் கருத்துக்கள் அனைத்துமே ஏற்கனவே சிங்களத்தால் பரிசீலிக்கப்பட்டு தோற்றுப் போன விடயங்களே என்பதை ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். தேசிய அரசுக்கு ஒப்பான அரசாக ஜே.ஆர் தலைமையிலான அரசு கொண்டிருந்தது. அதாவது தற்போதுள்ள பாராளுமன்றம் போன்று தமிழ் - முஸ்லீம் கட்சிகளில் இரு பிரதான கட்சிகள் தங்கியிருக்க வேண்டிய தேவை அப்போது இருக்கவில்லை. அதனையே இனவாதிகள் தேசிய அரசுக்கான மூலக் கருத்தாக கொண்டுள்ளனர். அக்காலகட்டத்தில் தமிழீழ விடுதலைப் போர் தீர்க்கமாக வளர்ச்சி கண்டிருந்தது. அதே போன்று சிறீலங்கா இராணுவம் பல்வேறு இடங்களில் பயிற்றப்பட்டு ஒரு தொழில்சார் இராணுவமாக மீள்கட்டுமானம் பெற்று பலவருடங்களாகின்றன. எனவே திரும்பவும் அதனை செய்வதால் புலிகளை தோற்கடிக்க முடியாது.

உண்மையில், சிங்களம் தனது திசையற்ற போக்கை மறைக்க பல வாய்களில் பேசுகின்றது!

- ராஜா

## பகிரங்கக் கடிதம்

# காகிதத்தில் கப்பல் செய்து கடல் நடுவே ஓடவிட்டேன்...



சந்திரிகா மேடம் அறிவது, அம்மணி!

ஒருவன் தன்னுடைய பெற்றோர், குடும்பத்தினர் நண்பர்கள் எவரது சொல்லையும் கேட்பதில்லை. மாறாக தனக்கு புத்திமதி சொன்ன அனைவரையும் அவன் வெட்டிக்கொன்றான். நீதிமன்றத்தில் அவனை நிறுத்தியபோது அவன் 'ஐயோ நான் அனாதை எனக்கு இரங்குவார் யாருமே இல்லையா' என்று அழுது புலம்பினானாம். அந்த நிலையில் தான் இப்போது நீங்கள் இருக்கின்றீர்கள். உங்களுக்கு இப்போது யார் எதிரி யார் நண்பன் என்பதே தெரிவதில்லை. உங்கள் அமைச்சர்களே உங்களுக்கு எதிராக கருத்துக் கூறுகின்றனர். ஆனாலும் நீங்கள் இப்போதும் உங்கள் தவறுகளை புரிந்து கொண்டதாக தெரியவில்லை. இன்னமும் எல்லாரையும் குறை சொல்வதிலேயே கவனமாக இருக்கின்றீர்கள். உங்களுக்கு தெரியாமலேயே உங்கள் அமைச்சர் ஒருவர் வன்னிக்கு சென்று புலிகளை சந்தித்ததாக கூறியிருக்கின்றார். அவர் வேறு யாருமல்ல அமைச்சர் பெர்னான்டோபுள்ளே தான்.

அவர் ஏற்கனவே உங்களுடன் முரண்பட்டிருந்ததால் அவரின் விஜயம் உங்களுக்கு தெரியாமல் நடந்ததாக பலரும் நினைக்கின்றனர். ஆனால் நீங்கள் தான் அவரை புலிகளை நோட்டம் பார்க்க அனுப்பியதாக எதிர்க் கட்சிகள் கூறுகின்றன. தவம் இருந்து மடுமாதாவிடம் சென்றவர், வரம் வாங்குவதற்காக புலிகளை நாடியிருக்கின்றார். பாவம் மூலஸ்த்தானத்திற்குள்ளேயே அவர் அனுமதிக்கப் படவில்லை. ஆனாலும் விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை என்ற கதையாக தான் புலிகளின் உள்ளூர் பிரதிநிதிகளை சந்தித்ததாக கதையளக்கின்றார். அவரின் வன்னி பயணத்தை உங்களது தொலைக்காட்சிகளும், வானொலிகளும்? பிரமாதப்படுத்திருந்தன.

ஏதோ ஒரு சமதான நடவடிக்கை ஒன்று நடைபெறுவதுபோல் பாவனை செய்தீர்கள். ஏனென்றால் இப்போது சர்வதேச சமூகத்திற்கு நாட்டில் சமாதானம் நிலவுவதாக ஒரு மாயையை தோற்றுவிக்கவேண்டிய நிலையில் நீங்கள் இருக்கின்றீர்கள். அப்போது தான் துறைமுகத்தில் தேங்கியிருக்கும் 50 கோடி ரூபா பெறுமதியான தேயிலை உட்பட பல சுதந்திர வர்த்தக வலைய பொருட்கள் ஏற்றுமதி செய்ய முடியும்.

நாட்டில் சமாதானம் நிலவுவதாக நீங்கள் காட்டிக் கொண்டால் மட்டுமே காப்புறுதி நிறுவனங்கள் காப்புறுதி கட்டுப்பணத்தை குறைக்கும், அதனைத் தொடர்ந்து கப்பல்கள் இலங்கைக்கு வரும். இல்லாவிட்டால் காகிதத்தில் கப்பல் செய்து கடல் நடுவே ஓடவிட்டேன். என்று காகித கப்பல்களை விடவேண்டியதுதான்.

நீங்கள் ஒரு விடயத்தை கவனித்திருப்பீர்கள். அமைச்சர் பெனான்டோ புள்ளையுடன் கதைக்க புலிகளின் பிரமுகர்கள் மறுத்துள்ளனர். அதேசமயம் காணாமல் போன படைமினரின் பெற்றோருடன் புலிகளின் அரசியல் பிரிவு பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் பேச்சுக்களை நடத்தியிருக்கின்றார். அதுமட்டுல்ல. அமைச்சர் பெனான்டோபுள்ளே மாவீரர் துயிலும் இல்லத்திற்கு சென்று பார்வையிட்டுள்ளார். ஆனால் அங்கு அவர் படம் எடுக்க விடுதலைப் புலிகள் அனுமதி மறுத்துள்ளனர். ஆனால் காணாமல் போன படைமினரின் பெற்றோருடன் நின்று வீடீயோ எடுக்க தமிழ்ச்செல்வன் அனுமதித்துள்ளார். அந்த வீடியோவை காணாமல் போன படைமினரின் பெற்றோர் சங்கத் தலைவர் கொழும்பில் பத்திரிகையாளர்களிடம் காட்டியுள்ளார்.

இது ஏற்கனவே உங்களிடமிருந்து விலகிச் செல்லும் சிங்கள மக்களை இன்னும் ஓரம்கட்டவைக்கப் போகின்ற ஒரு நடவடிக்கை.

அதேசமயம் நீங்கள் நல்லெண்ணத்துடன் எந்த அமைச்சரையோ, அரச பிரதிநிதிகளையோ அழைத்துவரலாம். உங்களுக்கு நாம் பாதுகாப்பு வழங்குவோம் என்றும் தமிழ்ச்செல்வன் குறிப்பிட்டதாக நாணயக்கார தெரிவித்தார். அதாவது அமைச்சர்களுடன் நீங்கள் வரவேண்டாம். உங்களுடன் யாராவது அமைச்சர்கள் வந்தால் அவர்களை வரவேற்போம் என்றும் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே 3 அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் வன்னி செல்லப்போவதாக அறிவித்துள்ளனர். அவர்களை விடுதலைப் புலிகள் வன்னி செல்ல அனுமதிப்பார்கள். ஆனால் அவர்களுடன் பேச்சுக்களை நடத்துவார்களோ என்பதே கேள்வி. அதுசரி அந்த 3 அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் வன்னி செல்வதாக கூறுகின்றனரே அவர்கள் உங்கள் அனுமதியுடன்தான் செல்கிறார்களோ அல்லது உங்களுக்கு எதிராகச் செல்கிறார்களோ? ஏனென்றால் இப்போதெல்லாம் நீங்கள் ஒருவர் நாட்டில் இருப்பதாக அமைச்சர்கள், மற்றும் தொழிலதிபர்கள், அரசியல் வாதிகள் கண்டு கொள்வதாகத் தெரியவில்லை. உங்கள் அமைச்சர்களே உங்களை எதிர்த்து போர்க்கொடி தூக்குகின்றனர். உங்களுக்கு தெரியாமல் புலிகளுடன் பேசப்போவதாக கூறுகின்றனர். பிரதமர் வேறு ஐக்கிய தேசிய கட்சியை நல்லிணக்க அரசு ஒன்றை அமைக்க அழைப்பு விடுத்துள்ளார். நிச்சயமாக அதனை ரணில் ஏற்றுக் கொள்ளமாட்டார். நீங்கள் நாட்டுக்காக அல்லாது உங்கள் சுயநலத்துக்காகவும், பதவியை தக்கவைத்துக் கொள்ளவுமே தேசிய அரசு அமைக்க அழைப்பு விடுகிறீர்கள் என்பதை ரணில் மட்டுமல்ல ஒரு குழந்தை கூட அறியும். நிற்க...

அம்பாறை பொலிஸ் நிலையம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலால் நீங்கள் கொஞ்சம் நிலை குலைந்திருப்பீர்கள் என்பது தெரியும். இருந்தும் தொடர்ந்தும் விமானத் தாக்குதல்களை நடத்தியிருக்கின்றீர்கள்.

ஏற்கனவே கண்ணாடி வீட்டுக்குள் நின்று கல்லெறிந்து வாங்கிக் கட்டிக்கொண்டீர்கள். உங்கள் கட்டுநாயக்கா கண்ணாடி வீட்டுக்குள் புகுந்து அடித்து உதைத்து துவம்சம் செய்ததன் பின்பும் நீங்கள் வீதியில் நின்று கல்லெறிவது சரியல்ல. சர்வதேச சமூகம் மட்டுமல்ல சிங்களவர்கள் கூட உங்களை ஒரு மாதிரியாகத் தான் பார்ப்பார்கள். அம்பாறையில் தாக்குதல் நடத்தியது கோணேஸ்வரியின் படுகொலை நினைவாகவே என்று செய்திகள் வெளிவந்தன. கறுப்பு ஜூலைக்காக விமானப் படைத்தளத்தை தாக்கிய புலிகள் தற்போது கோணேஸ்வரியின் கொலைக்கு எதிராக நடத்தப்பட்டதாகக் கூறுவது நீங்கள் செய்த அட்டூழியங்களை சர்வதேச சமூகத்திற்கு தெரியப் படுத்துவதால் உங்களை இன்னும் கொஞ்சம் இறக்கியே வைக்கும் என்பதை புரிந்திருப்பீர்கள்.


முன்னர் சமாதானத்திற்காக யுத்தம் என்று சர்வதேசத்திற்கு கூறிக் கொண்டு சண்டையை நடத்தியவர் நீங்கள். தற்போது இதனை விடுதலைப் புலிகள் செய்கிறார்கள். சமாதானத்திற்கு தயார். யுத்தத்தை நிறுத்தவும் தயார் என்று சொல்லிக் கொண்டு, நினைவு தினங்களுக்கு உங்கள் போர்த் தளவாடங்களை அழிக்கும் படலங்களை புலிகள் நடத்துவதும், சர்வதேச சமூகமே அவர்களை கண்டிக்கமுடியாதிருப்பதும் உங்களுக்கு பெரும் சிக்கலாகத்தான் இருக்கும். பெண்களை சித்திரவதைக்கும், பாலியல் வல்லுறவுக்கும் உட்படுத்தாத இராணுவ முகாமோ பொலிஸ் நிலையங்களோ வடக்கு கிழக்கில் இல்லை. இந்த நிலையில் புலிகள் எந்த முகாம்களைத் தாக்கினாலும் அதற்கொரு இரத்த வரலாறு இருக்கும். எனவே எந்த முகாம் இனி எந்தநேரம் தாக்கப்படும் என்று சொல்லமுடியாது. போதாக் குறைக்கு திலீபனின் நினைவுதினம், மாவீரர் தினம் என்று வேறு நெருங்கி வருகிறது. ஆனால் அடுத்த மடுமாதா திருநாள் அதற்கு பின்தான் வருகின்றது. எனவே அதுவரை மடியில் நெருப்பை கட்டிக்கொண்டு காகிதத்தில் கப்பல் செய்து விடவேண்டியதுதான்.

***இப்படிக்கு***
***வாசகன்***
***ரட்ணதுரை***

# நேட்டோவிற்கு மசிடோனியாவில் என்ன ஆகும்..?

வட அத்திலாந்திக் ஒப்பந்த நாடுகளின் அமைப்பின் இராணுவம் மீண்டும் பல்கன் பிராந்தியத்திற்குள் பிரவேசித்துள்ளது. கடந்த ஆறு வருடங்களுக்குள் பல்கன் பிராந்தியத்தின் அமைதி நடவடிக்கையில் ஈடுபட மூன்றாவது முறையாக நேட்டோப் படைகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. யூகோசிலாவிய கூட்டமைப்பின் முன்னாள் அங்கத்துவ நாடான மசிடோனியாவில் பூர்வீக அல்பேனிய மக்களின் உரிமைகளுக்கான போராட்டம் ஒன்று கடந்த சில மாதங்களுக்கு முன் எழுச்சி பெறத் தொடங்கியது நாட்டை பிரிப்பது தங்களது நோக்கம் அல்ல எனக்கூறும் தேசிய விடுதலை இராணுவம் எனும் அமைப்பு பூர்வீக அல்பேனியர்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதன் ஆயுத விநியோகம் கொசோவோவாகவோ அல்லது அல்பேனியாவாகவோ இருக்கலாம். ஆனால் அதன் செயற்பாடுகள் மசிடோனியாவிலேயே இடம்பெற்றது. யூகோசிலாவியாவின் கொசோவோவில் அல்பேனியர்களது உரிமைகளை உறுதிப்படுத்தும் வகையில் அங்கு நிலைகொண்ட நேட்டோ தலைமையிலான இராணுவம் இன்றுவரை அதனை செய்து முடிக்கவில்லை. மாறாக யூகோசிலாவிய இராணுவம் மீண்டும் கொசோவோவின் பல பகுதிகளிலும் நிலைகொள்ளத் தொடங்கியுள்ளது.

அல்பேனிய விடுதலை இராணுவம் எனும் பெயரில் அமெரிக்காவின் ஒத்துழைப்புடன் அமைக்கப்பட்டு கொசோவோவிற்கு அனுப்பப்பட்டவர்கள் பின்னர் நேட்டோ இராணுவத்திற்கே தலையிடியாக அமைந்தனர். கொசோவோவில் இருந்து யூகோசிலாவிய இராணுவத்தை நேட்டோ வெளியேற்றி அல்பேனிய தீவிரவாதிகளின் நடவடிக்கைகளுக்கு சுதந்திரம் வழங்கியது. அதேவேளை, யூகோசிலாவியாவின் மீது தாக்குதல்களை நேட்டோ நடாத்தியபோது அவற்றிக்கு பின்தளமாக அமைந்தது மசிடோனியாவே. நேட்டோவின் உலங்குவானூர்திகளும் விமானங்களும் மசிடோனியத் தளங்களில் இருந்தும் கொசோவோ மீது தாக்குதல் நடாத்தப்புறப்பட்டன. அதேபோல நேட்டோத் தலைமையிலான இராணுவ முகாம்களையும் அங்கு பல நாடுகள் அமைத்திருந்தன. அப்போது ஸ்லாவிய மக்களின் எதிர்ப்பினை பல வழிகளிலும் இவ் இராணுவம் எதிர்கொண்டது. கொசோவோவில் பெரும்பான்மை அல்பேனியர்களுக்காக நாட்டின் பூர்வீக ஸ்லாவிய மக்களை வேறு இடங்களை நோக்கி வெளியேற வைத்த நேட்டோவிற்கு மசிடோனியாவில் அதே ஸ்லாவிய மக்களால் எதிர்ப்புகள் ஏற்படுவது நியாயமானதே. கொசோவோ பிரச்சினை முடிவக்கு வர மசிடோனியாவில் நிலைகொண்டிருந்த இராணுவ அணிகள் வெளியேறி கொசோவோவில் நிலைகொண்டன. ஆனால், கொசோவோவில் அல்பேனிய மக்கள் அனுபவித்த சுதந்திரத்தை அங்கு சிறுபான்மை ஸ்லாவிய மக்கள் அனுபவிக்கவில்லை. தினமும் அச்சுறுத்தல்களுக்கும், பயமுறுத்தல்களுக்கும் இடையே வாழ்ந்து வந்தவர்களுக்கு நேட்டோப் படையினரால் சரியான பாதுகாப்பினை கொடுக்கமுடியவில்லை.




இதற்கிடையே யூகோசிலாவியாவில் ஆட்சி மாற்றம் ஏற்பட, கொசோவோவிலும் அதன் விளைவுகள் தோன்றின. மீண்டும் யூகோசிலாவிய இராணுவத்தை கொசோவோவிற்குள் அனுமதிக்க நேட்டோ தயாராகியது. இதற்கு யூகோசிலாவியாவில் புதிய அரசு மீது நேட்டோ கொண்டிருந்த நம்பிக்கை காரணமாக இருக்கவில்லை. தம்மால் பயிற்றுவிக்கப்பட்ட, வளர்க்கப்பட்ட அமைப்பு தங்களை மீறி பரந்த அல்பேனியா என்ற இலக்கு நோக்கி செயற்பாடுகளை விரிவாக்கிக்கொண்டதே காரணமாகியது. மொன்டினிகுரோவின் பல பகுதிகள் அல்பேனிய தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு உள்ளாகின. இங்கும் நேட்டோ தலைமையிலான இராணுவம் நிலைகொண்டிருந்த போதிலும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. அடுத்த கட்டமாகத்தான் மசிடோனியாவில் உரிமைகள் என்ற காரணத்தை கொண்டு புதிய இராணுவ நடவடிக்கைகள் தோற்றம் பெற்றன. இதனை ஏற்றுக்கொள்ளும் நிலையில் நேட்டோ இல்லை. கொசோவோ அல்பேனியர்களுக்கு சுதந்திரம் வழங்கப்படுவதையே நேட்டோ ஏற்றுக்கொள்ளவில்லை என்றால், மசிடோனியாவில் தாக்குதல் அதிகரித்து அது அல்பேனியா நோக்கி பரவுவதை இவர்களால் எவ்வாறு ஏற்றுக்கொள்ள முடியும்.

**தம்மால் பயிற்றுவிக்கப்பட்ட, வளர்க்கப்பட்ட அமைப்பு தங்களை மீறி பரந்த அல்பேனியா என்ற இலக்கு நோக்கிச் செயற்பாடுகளை விரிவாக்கிக்கொண்டதே காரணமாகியது.**

மசிடோனியாவில் எப்படியாவது அல்பேனியர்களது போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்பதில் நேட்டோ உறுதியாக உள்ள போதிலும் அவர்களால் அதனை நிறைவேற்ற முடியுமா என்பதே கேள்விக்குறி. தம்மால் வளர்க்கப்பட்ட அல்பேனிய விடுதலை இராணுவம் இப்போது வேறு பல பெயர்களில் செயற்பட்டு வருகின்றது. இப்போது ஏற்படுத்தப்பட்ட மசிடோனிய சமாதான ஒப்பந்தத்தின்படி அல்போனிய தீவிரவாதிகளிடம் இருந்து ஆயுதங்களை பெற்றுக்கொள்வதென்றும் அதேவேளை, மசிடோனிய அரசு அல்பெனிய மக்களுக்கான உரிமைகளை சரியான முறையில் வழங்க வேண்டும் என்றும் முடிவெடுக்கப்பட்டது. இவ்வளவும் முப்பது நாட்களுக்குள் நடந்து முடிய வேண்டிய விடயங்களாகும் இதற்காக 3500 வரையிலான இராணுவத்தை நேட்டோ மசிடோனியாவிற்கு அனுப்பியுள்ளது. இவ் இராணுவ அணிகள் அல்பெனிய தீவிரவாதிகளின் ஆயுதங்களை மீளப்பெற்றுக்கொள்ள வேண்டும். இங்குதான் வேடிக்கை, நேட்டோ கூறுகிறது... 3500 முதல் 5000 வரையிலான ஆயுதங்களே தற்போது தீவிரவாதிகளால் கையாளப்படுகின்றது என. ஆனால், தற்போது அவர்கள் கனரக ஆயுதங்கள் உட்பட 60,000 ஆயுதங்களை கொண்டுள்ளனர் என மசிடோனியா குற்றம் சாட்டுகிறது. 3500 ஆயுதங்களையே மீளப்பெற ஒரு மாதகாலம் போதாதென்றால் நேட்டோ மீண்டும் மூட்டை முடிச்சுக்களை கட்டிக்கொண்டு மசிடோனியாவில் இருந்து வெளியேறிக்கொள்ள வேண்டும். ஆனால், அது வெளியேறாது என்றே எண்ணத் தோன்றுகிறது. அல்பேனியத் தீவிரவாதிகள் தங்களது ஆயுதங்களை முழுமையாக ஒருபோதும் ஒப்படைக்க மாட்டார்கள். அதேபோல் ஸ்லாவிய பெரும்பான்மையைக் கொண்ட மசிடோனியா அரசும் நிரந்தரமான தீர்வுத் திட்டம் ஒன்றினை அல்பேனியர்களுக்காக முன் வைக்காது. ஆயுதங்களையும் மீளப்பெற முடியவில்லை, அதிகாரப் பரவலாக்கலும் குறுகிய காலத்தில் நடைமுறைப்படுத்த முடியாத நிலை. நேட்டோவிற்கு இப்போது இரண்டும் கெட்டான் நிலை என்றுதான் கூறவேண்டும். இன்னும் 30 நாட்களின் பின் என்ன நடக்கின்றது என்பதைத்தான் பொறுத்திருந்து பார்ப்போமே.

**- உதயன்**

# சித்திரவதை முறைப்பாடுகளை விசாரியாது தடுப்பதில்

## பொலிஸாரும்–படையினரும்–பேரினவாத வைத்தியர்களும்

இலங்கை மனித உரிமை ஆணைக்குழு சிறீலங்கா ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட மனித உரிமை பேணும் ஓர் அமைப்பாகும். யாழ்ப்பாணம், வவனியா, திருகோணமலை, கல்முனை என்று வடக்கு கிழக்கு மாகாணத்திலும் நாட்டின் சிங்களப்பகுதிகளில் பதுளை, கண்டி போன்ற இடங்களிலும் மனித உரிமை ஆணைக்குழுவின் பிராந்திய அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு பிராந்திய அலுவலகத்திற்கும் ஒரு பிராந்திய ஒருங்கிணைப்பாளர் நியமிக்கப்பட்டிருக்கின்றார். அந்தந்த பிராந்திய ஒருங்கிணைப்பாளருக்கு அந்தந்த மாவட்டங்களில் வாழும் மக்களிடமிருந்து கிடைக்கும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரித்து தக்க நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

பெரும்பாலான மாவட்டங்களில் குறிப்பாக தென்னிலங்கையில் உள்ள மனித உரிமை அலுவலக பிராந்திய ஒருங்கிணைப்பாளர்கள் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி செயல்படக் கூடியவாறு அந்தந்த மாவட்டத்தில் உள்ள பொலிஸ் அதிகாரிகள் மற்றும் வைத்திய அதிகாரிகள் பூரண ஒத்துழைப்பு வழங்கி வருகின்றார்கள். ஆனால் திருகோணமலையில் அவ்வாறான ஒத்துழைப்பு மனித உரிமை ஆணைக்குழுவிற்குக் கிடைப்பதாக இல்லை. திருகோணமலை மாவட்ட வைத்திய அதிகாரி தற்போது ஒரு சிங்களவர். அவர் முன்பு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பணியாற்றியவர். தற்போது திருமலை மாவட்ட வைத்தியசாலையின் வைத்திய அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். இதனால் இப்போது படையினரின் சித்திரவதைக்கு ஆளானவர்களை மனித உரிமை ஆணைக் குழுவினர் வைத்திய பரிசோதனைக்காக அனுப்பும்போது இம் மாவட்ட வைத்திய அதிகாரி சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டவர்களை சரியான முறையில் வைத்திய பரிசோதனை செய்யாது திருப்பி அனுப்பி விடுவதாக முறைப்பாடுகள் மேலிடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

**திருகோணமலை மாவட்ட வைத்திய அதிகாரி தற்போது ஒரு சிங்களவர். அவர் முன்பு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பணியாற்றியவர். தற்போது திருமலை மாவட்ட வைத்தியசாலையின் வைத்திய அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.**

இதேவேளை, திருமலை மாவட்ட மனித உரிமை ஆணைக் குழுவின் ஒருங்கிணைப்பாளரும் ஒரு சிங்களவர். இவர் அனுப்பி வைக்கும் நபரை அவர் சித்திரவதைக்கு ஆளாகவில்லை என்று சான்றிதழ் கொடுப்பார். இந்த நிலையில் தான், இம்மாவட்ட வைத்திய அதிகாரி வழங்கிய சான்றிதழ் தொடர்பாக கொழும்பில் மனித உரிமை ஆணைக் குழுவின் தலைமையகம் இவ் வாரம் விசாரணை ஒன்றை நடத்தவிருக்கின்றது. முருகேசு அசோக்குமார் என்ற 30 வயது இளைஞர், திருகோணமலையில் பாலையூற்றுப் பகுதியைச் சேர்ந்தவர். இவர் மூன்றாவது தடவையாக திருகோணமலைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். இதன்போது பொலிசாரின் கடும் சித்திரவதைக்குள்ளானார். தண்ணீரைச் சுட வைக்கும் மின்சாரக் கருவியினால் (வாட்டர் ஹீற்றர்) அவர் கடுமையாக சித்திரவதை செய்யப்பட்டார். அதனால் அசோக்குமாரின் முதுகில் ஏராளமான சூட்டுக்காயங்கள் காணப்பட்டன. திருகோணமலை மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழு பிராந்திய ஒருங்கிணைப்பாளர் இந்த இளைஞரை திருகோணமலை மாவட்ட வைத்திய அதிகாரியின் வைத்திய பரிசோதனைக்கு அனுப்பினார் அவர் பரிசோதனை செய்து விட்டு, இரண்டு வரியிலான வைத்திய அறிக்கை ஒன்றை அனுப்பினார். அந்த அறிக்கையில் இந்த இளைஞர் சித்திரவதை செய்யப்பட்டதாக ஒரு வார்த்தை கூட எழுதப்பட்டிருக்கவில்லை. இதே நேரம் அசோக்குமாரின் முதுகில் உள்ள காயங்களை மனித உரிமை அலுவலக ஒருங்கிணைப்பாளர் புகைப்படம் எடுத்து வைத்திருந்தார். (இதற்கிடையில் தன்னை மனித உரிமை ஆணைக்குழுப் பிராந்திய ஒருங்கிணைப்பாளர் பயமுறுத்தியதாக இம்மாவட்ட வைத்திய அதிகாரி திருகோணமலைப் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டதும் அது தொடர்பாக மனித உரிமை அதிகாரியை பொலிஸார் விசாரித்ததும் அது பற்றி மனித உரிமை ஆணைக்குழுத் தலைமையகம் விசாரணை ஒன்றை நடத்தி வருவதும் ஒரு தனிக்கதை)

திருமலை மாவட்ட வைத்திய அதிகாரியின் வைத்திய அறிக்கையில் திருப்தியடையாத மாவட்ட மனித உரிமை அதிகாரி, சித்திரவதைக்குட்படுத்தப்பட்ட அசோக்குமாரை வைத்திய பரிசோதனை செய்யப்படுவதற்காக கொழும்பு சட்ட வைத்திய அதிகாரியிடம் அனுப்பினார். கொழும்பில் அசோக்குமாரை கொழும்பு உதவிச் சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் ஜே.பி. திஸ்ஸநாயக்கா வைத்திய பரிசோதனை செய்தார். அசோக்குமாரின் உடலில் காணப்பட்ட காயங்கள் பற்றிய விவரமான அறிக்கை ஒன்றை கொழும்பு உதவி சட்ட வைத்திய அதிகாரி திருகோணமலை மனித உரிமை அலுவலக அதிகாரிக்கு அனுப்பி வைத்துள்ளார். அந்த அறிக்கையின்படி அசோக்குமாரின் முதுகுப்புறத்தின் முப்பது சதவீதமாக பகுதியில் வாட்டர் ஹீற்றரினால் சுட்டுச் சித்திரவதை செய்யப்பட்டதால் ஏற்பட்ட எரிகாயங்கள் காணப்பட்டன என்றும் மொத்தமாக 18 காயங்கள் காணப்பட்டன என்றும் கொழும்பு உதவி சட்ட வைத்திய அதிகாரி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். அவற்றில் 15 காயங்கள் வாட்டர் ஹீற்றரினால் சுட்டதினால் ஏற்பட்டவை என்றும் அவ்வைத்திய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ் வைத்திய அறிக்கை தற்போது கொழும்பில் உள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுத் தலைமையகத்தில் உள்ளது.

இச்சித்திரவதை சம்பந்தமான அசோக்குமாரின் முறைப்பாட்டை மனித உரிமை ஆணைக் குழுவின் ஆணையாளர் ஒருவர் நேரடியாக விசாரிக்க இருக்கின்றார். இதற்காக திருகோணமலை மாவட்ட வைத்திய அதிகாரியை கொழும்புக்கு வரும்படி ஆணைக்குழு உத்தரவிட்டுள்ளது. திருகோணமலை பொலிஸ் தலைமை அதிகாரியும் கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளார். இவ்வாரம் நடக்கவிருக்கும் இவ் விசாரணை சிறீலங்கா அரசின் மனித உரிமை ஆணைக்குழுவின் செயல்பாட்டை வெளிக்கொண்டு வரலாம் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

**– திருமலையில் இருந்து நாதன்**

# 110 கிலோ மீற்றர் பயணம் செய்து தமிழ்ச்செல்வனைச் சந்தித்தோம்

## 'எங்கள் இலக்கு பொருளாதாரத்தையும், படைபலத்தையும் செயலிழக்க வைப்பதே'

**– தமிழ்ச்செல்வன் தெரிவித்ததாக ஈ.பி.நாணயக்கார கூறுகிறார்**

கடந்த இரு வாரங்களின் முன்னர் மடுத் திருவிழாவில் வன்னி சென்ற காணாமல்போன படையினரின் உறவினர்கள் சங்கத் தலைவர் ஈ.பி.நாணயக்கார தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர் சுப.தமிழ்ச்செல்வனை சந்தித்து பேசியிருந்தார் என்பது தெரிந்ததே. இதே வேளை, கடந்த செவ்வாயன்று தமிழ்ச்செல்வன் அவர்களுடனான சந்திப்பில் பேசிய விடயங்கள் தொடர்பாக கொழும்பு நிப்பொன் விடுதியில் பத்திரிகையாளர் மாநாட்டை நடத்திய அவர், இச்சந்திப்பு தொடர்பாக விளக்கி கூறியிருந்தார். இதன்போது 14.08.2001 தமிழ்ச்செல்வனுடன் இடம்பெற்ற சந்திப்புத் தொடர்பாக எடுக்கப்பட்ட வீடியோ நாடாக்களையும் பத்திரிகையாளர்களுக்கு காட்டினார்.

இப் பயணம் பற்றி அவர் கூறுகையில், புலிகளின் சிறைகளிலுள்ள எமது பிள்ளைகளுக்காக பிரார்த்தனை செய்ய நாங்கள் மடுவுக்குச் சென்றோம். என்னுடன் வந்த குழுவில் உள்ளவர்கள் யாவரும் தமது பிள்ளைகளை நாட்டுக்காக அர்ப்பணித்தவர்கள். இவர்கள் தமது பிரார்த்தனைகளின் போது கதறி அழுது மன்றாடினர். பூஜை முடிந்து வெளியில் வந்ததும் புலிகள் அமைப்பினர் எம்மை ஒரு புறம் அழைத்துச் சென்று விசாரித்தனர். நாங்கள் யார் என்பதை அவர்களுக்குக் கூறினோம். சிறிது நேரத்தின் பின்னர் அங்கு வேறு சிலர் வந்து எம்மோடு கதைத்தனர். அப்போது தமிழ்ச்செல்வனைச் சந்திக்க முடியுமா என்று நாம் கேட்டோம். பதில் தருவதாகக் கூறி சில மணிநேரத்தின் பின்னர் எங்களை வாகனமொன்றின் மூலம் காட்டுப்பகுதியூடாக சுமார் 110 கிலோ மீற்றர் தூரம் பாதுகாப்பாக அழைத்துச் சென்றனர். இது சுமார் ஐந்தரை மணிநேரப் பயணமாக இருந்தது.

நாங்கள் சென்றடைந்தபோது அங்கிருந்தவர்களால் வரவேற்கப்பட்டோம். பின்னர் அங்கிருந்து தமிழ்ச்செல்வன் இருக்கும் இடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டோம். இச்சந்திப்பின்போது அவருடன் நான்கு மணித்தியாலங்கள் நாம் பேசினோம். இதன்போது தமிழ்ச்செல்வன் எங்களிடம் தெரிவித்ததாவது,

புலிகள் இயக்கமாகிய நாம் எமது இலக்கு, கொள்கை, எதிர்பார்ப்பு என்பனவற்றில் உறுதியாக உள்ளோம். சுயநிர்ணய உரிமைகளுக்காகப் போராடுகின்றோம். எமது போராட்டம் தோல்வியில் முடிவதைத் தமிழர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். வெற்றி கிடைக்கும் வரை ஓயமாட்டோம். அதையும் அமைதி வழியில் பெறவே முயற்சிக்கின்றோம். உரிமைகளைப் பெற போராட்டம் செய்ய வேண்டியுள்ளது. அது போராக இல்லாமல் இருக்கலாம். அதற்காக சமாதானக் கதவை திறந்து கொடுத்த பல சந்தர்ப்பங்கள் உண்டு. நான்கு மாதங்கள் யுத்த நிறுத்த கொள்கையைக் கடைப்பிடித்தோம். நோர்வேயின் முயற்சிகளுக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கினோம். நாம் சிறைப்பிடித்திருந்தவர்களை விடுதலை செய்தோம். ஆனால், அரசாங்கத்திடமிருந்து சாதகமான பதில் கிடைக்கவில்லை.

நாங்கள் யுத்த நிறுத்தத்திலிருந்த போது எம்மீது தாக்குதல் நடத்தப்பட்டது. அந்த நேரத்தில் பாரிய பின்னடைவுகள் ஏற்பட்டன. ஆனால், கொள்கைமாறாமல், எதிர்த்துப் போராடாமல் அமைதியுடன் எங்களைப் பாதுகாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டோம். நோர்வே தூதுவர் சிறந்த முறையில் சமாதான முயற்சிகளிலிறங்கி பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலையை உருவாக்கினார். ஆனால், அவரின் பங்களிப்பு உதாசீனப்படுத்தப்பட்டு சமாதான பேச்சுவார்த்தைகளுக்குத் தடைபோடப்பட்டது. நல்லெண்ண நோக்கத்துடன் கைதிகளை விடுவித்தோம். அதற்கு சாதகமான பதில் கிடைக்கவில்லை. வடபகுதி மக்களின் துயரங்களை நாம் எடுத்துக் கூற பத்திரிகையாளர்களுக்கோ, புத்திஜீவிகளுக்கோ, சமாதான விரும்பிகளுக்கோ எம்மைச் சந்திக்க முடியாமல் தடை விதிக்கப்பட்டுள்ளது.

எமது சமாதான முயற்சிகளை எங்களின் பலவீனமாகக் கருதியும், பேச்சுவார்த்தையென்ற போர்வையில் நாங்கள் எங்களைப் பலப்படுத்துவதாக கூறியும் வடபகுதி நிலைமைகளைத் திரிபுபடுத்தியும், தென்பகுதி மக்களுக்குக் கூறப்பட்டது. இதேவேளை எம்மீது மூர்க்கத்தனமான தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதன் பலா பலன்களை இன்று தமிழரும், சிங்களவரும் அனுபவிக்கின்றனர். எமது சிங்கள ஏழைச் சகோதரர்கள் யுத்த களத்தில் மடிகின்றனர், அதிகாரிகள் யுத்தம் மூலம் போர்க்கப்பட்டு வருகின்றனர். அதனால், அரசாங்கத்திற்கு யுத்தம் தோல்வியில் முடிகிறது. யுத்தத்தின் மூலம் எங்கள் இலக்கை அரசாங்கத்தினால் ஒரு போதும் வெல்ல முடியாது. இதை நன்கு தெரிந்து கொண்டும் யுத்தத்தை யுத்தம் மூலம் வெல்ல வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டிருப்பது அரசாங்கத்தின் இயலாமையை நன்கு தெளிவுபடுத்துகிறது.

எங்கள் போராளிகள் அர்ப்பணிப்புடனும், தெளிவுடனும் போரில் ஈடுபட்டு வெற்றிபெற்று வருகின்றனர்.

இதனை உலகத்திற்கு எடுத்துக் காட்டியுள்ளோம். அரசாங்கம் நவீன ரக ஆயுதங்களைக் கொள்வனவு செய்து புலிகளை அழித்தொழிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளப் பார்க்கிறது. ஆனால், அந்த ஆயுதங்களை எங்களிடம் போரின் போது பறிகொடுத்து விடுகிறார்கள். நாங்கள் சிங்களவருக்கு எதிரானவர்கள் அல்ல. படைவீரர்கள் தொழில் இன்றி படையில் சேர்ந்துள்ள விடயமும் எங்களுக்குத் தெரியும். யுத்தம் என்றால் இழப்புகளை இருதரப்பும் ஏற்றுக்கொள்ள வேண்டும். நாங்கள் பொறுப்புடன் போராடுகின்றோம். படையினர் சம்பளத்திற்காக தொழில் செய்கின்றனர். இதுதான் எமக்கும் படைக்கும் உள்ள வித்தியாசம்.

இப்போதைய எங்கள் இலக்கு பொருளாதாரத்தையும், படைபலத்தையும் செயலிழக்க வைக்கும் நோக்கிலேயே இருக்கிறது. அதனால், எமது சமாதான விருப்பத்தை அரசாங்கத்திடம் தெரிவியுங்கள். நாங்கள் கதவைத் திறந்து வைத்திருப்பதை தெளிவுபடுத்துங்கள். பேச்சின் மூலமே தீர்வுகிடைக்கும் என்பதை உணர்த்துங்கள். விரைவில் வன்னிக்கு வரச் சொல்லுங்கள். சமாதானம் நாட்டுக்கு என்று முழங்குங்கள். ஊடகங்கள் சமாதானத்திற்காக ஒலிக்க வேண்டும். வேற்றுமையை, பகைமையை, உணர்வுகளை விதைக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுங்கள். அமைதி கிட்ட அனைவரும் பிரார்த்திப்போம். இவ்வாறு தம்மிடம் தெரிவித்ததாக ஈ.பி.நாணயக்கார தெரிவித்துள்ளார்.

காணாமல் போன படையினர், உறவினர்கள் சங்க பிரதிநிதிகளின் வன்னி விஜயத்தின் போது விமானத் தாக்குதல்கள் மூலம் அழிக்கப்பட்ட கோவில்கள், பள்ளிக் கூடங்கள், வீடுகள், குண்டுத் தாக்குதலில் இறந்தவர்களின் மயானங்கள், மாவீரர் துயிலும் இல்லங்கள் ஆகியனவும் இவர்களுக்குக் காட்டப்பட்டுள்ளன.

இச்சந்திப்பின் போது புலிகளின் அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் உட்பட, அரசியல் பிரிவைச் சேர்ந்த தங்கன், ஜோர்ஜ், தொல்காப்பியன், புலேந்திரன் ஆகியோரும், காணாமல் போன படைவீரர்களின் உறவினர் சங்கம் சார்பில் தலைவர் ஈ.பி.நாணயக்கார, செயலாளர் திருமதி புளோரன்ஸ் வெத்தசிங்க, திருமதி சாந்தினி நாணயக்கார, திருமதி பராக்கிரம அபேரத்ன, திருமதி குணவர்த்தன, திருமதி மாகிரெட் நாணயக்கார, இந்திர கமகே பிரான்க் தபரேரா, கே.திபேஸ் ஆகியோரும் கலந்துகொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

# கொக்குத்தொடுவாய் ஊடறுத்து தாக்குதல்

**20 காவலரண்கள் தாக்கியழிப்பு**

## 13 படையினர் பலி, 24 பேருக்கு மேல் காயம், 10 படையினரைக் காணவில்லை

முல்லை. கொக்குத்தொடுவாய் மற்றும் ஜனகபுர பகுதிகளில் அமைந்துள்ள சிறீலங்கா படை முகாம்கள் மீது விடுதலைப் புலிகள் ஏககாலத் தாக்குதல் ஒன்றினை கடந்த 23ம் திகதி வியாழனன்று நடாத்தியுள்ளனர். இத் தாக்குதலின்போது 13 படையினர் கொல்லப்பட்டதுடன், அதிகாரியுட்பட 24 பேர் படுகாயமடைந்ததுள்ளனர் அத்துடன் பத்துப் படையினர் காணாமல் போயுள்ளதாகவும் சிறீலங்கா படைதரப்பு தெரிவித்துள்ளது.

திருமலை மாவட்டத்தின் புல்மோட்டைக்கு வட மேற்கே சுமார் 17 கிலோ மீற்றர் தூரத்தில் கொக்குத்தொடுவாய் படைமுகாம் அமைந்துள்ளது. கொக்குத் தொடுவாய்க்கு மேற்கே சுமார் 10 கிலோ மீற்றர் தூரத்தில் ஜனகபுர இராணுவ முகாம் அமைந்துள்ளது. இவ்விரு படைமுகாம்கள் மீதே கடந்த வியாழன்று அதிகாலை 3.30 மணியளவில் விடுதலைப் புலிகள் ஏககாலத் தாக்கதலை தொடுத்துள்ளனர். ஒரே நேரத்தில் இவ்விரு முகாம்கள் மீதும் பாரிய பீரங்கித் தாக்குதலை ஆரம்பித்த புலிகள், கொக்குத்தொடுவாய் முகாமின் முன்னரங்க காவலரண்கள் மீது பாரிய தாக்குதல் தொடுத்த அவற்றை ஊடறுத்துக்கொண்டு உள்ளே நுழைந்து இருபது வரையான தொடர் காவலரண்களையும் ஒரு மினி முகாமையும் தாக்கியழித்து கைப்பற்றினர்.

இத் தாக்குதல் இடம்பெற்றுக் கொண்டிருந்த அதேவேளை, விடுதலைப் புலிகளின் கிட்டு பீரங்கிப் படையினர் இம் முகாமின் அனைத்து பகுதிகளையும் நோக்கி கடுமையான எறிகணைத் தாக்குதலை நடாத்தியுள்ளனர். இதனையடுத்து இம் முகாமிற்கு பாதுகாப்பாக புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளை நோக்கி சிறீலங்கா கடற்படையினர் கடுமையான பீரங்கித் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

எனினும் காவலரண்களை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த புலிகளின் அணிகள் அங்கிருந்த ஆயுத தளவாடங்களை கைப்பற்றியதுடன், கொல்லப்பட்ட ஏழு படையினரின் சடலங்களையும் கைப்பற்றியுள்ளனர்.

### கைப்பற்றப்பட்டவை

பிகே.எல்எம்ஜி துப்பாக்கி 1, ஏகேஎல்எம்ஜி 1, ஆர்பிஜி 1, ரி56-2 ரக துப்பாக்கிகள் 07, ரி-56 ரக துப்பாக்கிகள் 3, 40மி.மீ எறிகுண்டு செலுத்தி 1, பிகே இணைப்பிகளுடன் ரவைகள் 1800, பிகே பரல் 2, பிகே பைபோஸ் 1, நடுத்தர ரவைகள் இணைப்பிகளுடன் 2400, ஏகேஎம்எல்ஜி ரம் ரவைக்கூடுகள் 2, ஏகே ரவைக்கூடுகள் 20, கைக்குண்டுகள் 2, 60மி.மீ எறிகணைகள் 21, ஆர்பிஜி எறிகணைகள் 8, புராப்லர்கள் 3 மற்றும் ஏராளமான இராணுவப் பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

## காணாமல் போன 9 படையினர்

## செஞ்சிலுவையிடம் சிறீலங்கா உதவி கோரியது

கொக்குத்தொடுவாய் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் ஒன்பது படையினர் காணாமற் போயுள்ளதாக தெரிவித்துள்ளது சிறீலங்கா விசேட ஊடகத் தகவல் நிலையம். தாக்குதல் நடைபெற்ற பகுதியில் படையினர் தேடுதல் நடத்திய போதும் இவர்களை கண்டுபிடிக்க முடியவில்லை என்றும் தெரிவித்துள்ள தகவல் நிலையம், மறுநாள் காலை வரை அவர்கள் முகாமுக்குத் திரும்பாததை அடுத்து, அவர்களைக் கண்டுபிடிக்க செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் உதவியை படையினர் நாடியுள்ளதாக தெரியவருகிறது. இத் தாக்குதலின் போது தம்மால் ஏழு படையினரின் சடலங்கள் கைப்பற்றப்பட்டதாகவும் அவற்றை படையினர் வசம் ஒப்படைக்க முயற்சிகள் மேற்கொண்டிருப்பதாகவும் புலிகள் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 6 போராளிகள் வீரச்சாவு

கொக்குத்தொடுவாய் மற்றும் ஜானகபுர படைத்தளங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் நான்கு போராளிகளும் இரு துணைப்படை வீரர்களும் வீரச்சாவை தழுவிக் கொண்டனர். மேஜர் நாயகன்(பேரம்பலம் யோகேஸ்வரன் – யாழ்.), மேஜர் பாண்டிமுத்து (பாலசுந்தரம் பிரதீபன் யாழ்), 2ம் லெப். இளங்கீரன் (முருகன் நாகரூபன் – மன்னார்), 2ம் லெப். மாதவன் (செல்வராசா நந்தகுமார் – கிளிநொச்சி), தேசிய துணைப் படை வீரரான லெப். காந்தரூபன் (சபாரத்தினம் காந்தரூபன் – முள்ளியவளை). சுதாகரன் (வேலாயுதம் சுதாகரன் முள்ளியவளை) ஆகியோரே வீரச்சாவை தழுவிக்கொண்டுள்ளனர்.

# நான்கு வருடங்களின் பின் தீர்க்கப்பட்ட கணக்கு!

மூன்று பிள்ளைகளின் தாயாரான கோணேஸ்வரி என்பவரை 1997ம் ஆண்டு ஆகஷ்ட் மாதம் 21ம் திகதி அம்பாறை மத்திய முகாம் பொலிசார் கூட்டாக பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய பின்னர் அவரது பிறப்புறுப்பில் கைக்குண்டை வெடிக்க வைத்து படுகொலை செய்ததன் நான்காம் ஆண்டு நினைவாக, அந்த அம்பாறை மத்திய முகாம் விடுதலைப் புலிகளால் முற்றாக தாக்கியழிக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு-அம்பாறை எல்லைப் பகுதி தமிழ் மக்கள் வாழ்ந்த பிரதேசமாகும். கல்லோயா குடியேற்றத் திட்டத்தின் கீழ் குடியமர்த்தப்பட்ட சிங்கள மக்களின் பாதுகாப்புக்காக மத்திய முகாம் பகுதியில் இந்தப் பொலிஸ் நிலையம் அமைக்கப்பட்டது. 1977ம் ஆண்டு கலவரத்திற்குப்பின்னர் இப் பகுதியிலிருந்து தமிழர்கள் வெளியேற்றப்பட்டு சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டனர். தமிழர்களின் நெல்வயல்களில் சிங்கள குடியேற்றவாசிகளே பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ளனர். சிங்கள குடியேற்ற கிராமங்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கே இப்பொலிஸ் நிலையம் அமைக்கப்பட்டு அங்கு பொலிஸாரும் சிங்கள ஊர்காவல் படையினரும் அமர்த்தப்பட்டனர். இங்கிருந்தே அயலில் உள்ள தமிழ் கிராமங்களுக்கு சென்று தமிழ்ப் பொதுமக்கள் மீது வன்முறைகளையும் தாக்குதல்களையும் படையினரும் பொலிசாரும் இணைந்து நடாத்தி வந்தனர்.

இந்நிலையில் கடந்த 21ம் திகதி அதிகாலை விடுதலைப் புலிகள் இந் நினைவுநாள் தாக்குதலை நடாத்தியுள்ளனர். இதன்போது 20ற்கும் மேற்பட்ட பொலிசார் கொல்லப்பட்டதுடன் 18 பேர் படுகாயமடைந்து சுமார் ஒன்பது பேர் வரை காணாமல் போயுள்ளதாக இராணுவத் தரப்பு செய்திகள் மூலம் தெரியவருகிறது.

நள்ளிரவுக்கு பின் அதிகாலை 12.30 மணியளவில் தாக்குதலை ஆரம்பித்த போராளிகள் அதிகாலை 2.30 மணியளவில் முகாமை முழுமையாக தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளனர். முகாமை முற்றாக தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்த போராளிகள், காலை 6.30 மணிவரை சுமார் நான்கு மணிநேரமாக முகாமில் தங்கிநின்று, அங்கிருந்த அனைத்து ஆயுத தளவாடங்கள், வாகனங்கள் மற்றும் ஏனைய பொருட்களையும் கைப்பற்றியதுடன் முகாமையும் முற்றாக தகர்த்து அழித்துள்ளனர். இத் தாக்குதலில் இரு போராளிகள் வீரச்சாவை தழுவிக் கொண்டுள்ளனர்.

மட்டக்களப்பில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளின் மீது பாரிய தாக்குதல்களை நடாத்தப் போவதாகவும், மக்களை இரண்டு மாதங்களுக்கு தேவையான உணவைச் சேகரித்து வைக்குமாறும் படையினர் எச்சரித்திருந்த ஒரு வார காலத்திற்குள் இத் தாக்குதல் நடாத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## 7 உழவு இயந்திரங்களில் வந்திறங்கிய புலிகள்

நள்ளிரவு 12 மணியளவில் 7ற்கும் மேற்பட்ட உழவு இயந்திரங்களில் வந்த புலிகள், பொலிஸ் நிலையத்திற்கு பாதுகாப்பாக நான்கு திசைகளிலும் அமைக்கப்பட்டிருந்த காவலரண்களை சுற்றிவளைத்து தாக்கியதாகவும், அத்துடன் பொலிஸ் நிலையத்திற்கான தொலைபேசி இணைப்பை துண்டித்ததுடன், முகாமிற்கு மின்சாரம் வழங்கும் மின்மாற்றியையும் தாக்கியழித்துள்ளனர் என உயிர் தப்பிய பொலிசார் தரப்பு செய்திகள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, பொலிஸ் நிலையத்தைச் சுற்றியுள்ள நான்கு பாரிய காவலரண்களும் தாக்கியழிக்கப்பட்ட பின்னர், பொலிஸ் நிலையத்தைச் சுற்றி அமைக்கப்பட்டிருந்த பாதுகாப்பு வேலிகளை தகர்த்துக் கொண்டு போராளிகள் உள்நுழைந்து முகாமை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர். இதே வேளை இவர்களின் முன்னேற்றத்திற்கு உதவியாக கிட்டு பீரங்கிப் படையினரும் பல திசைகளில் இருந்தும் பொலிஸ் நிலையம் மீது எறிகணைத் தாக்குதல்களை நடாத்தியுள்ளனர்.

## காட்டுப்பகுதி நோக்கி எறிகணைத் தாக்குதல்

தாக்குதலை வெற்றிகரமாக முடித்துக்கொண்டு போராளிகள் திரும்பியதன் பின்னர், காலை 7 மணி முதல் 8.30 மணி வரை, புலிகள் திரும்பிச்சென்ற பகுதிகளை நோக்கி கடுமையான எறிகணைத் தாக்குதலை படையினர் நடாத்தியுள்ளனர். இத் தாக்குதலின் போது ஏற்பட்ட பாரிய சத்தங்கள் பத்து மைல் தூரத்திற்கு அப்பால் உள்ள கல்முனை, காரைதீவு, நிந்தவூர் பிரதேசங்களிலும் கேட்டதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.



## மக்கள் இடம்பெயர்வு

இத்தாக்குதலை அடுத்து பழிவாங்கும் நோக்கத்துடன் பொது மக்கள் மீது தாக்குதல் நடாத்துவார்கள் என்ற அச்சம் காரணமாக மத்திய முகாமை அண்டிய, 4ம் கொலனி, 13ம் கொலனி கிராமங்களைச் சேர்ந்த தமிழ் மக்கள் அங்கிருந்து இடம்பெயர்ந்து நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, பாண்டிருப்பு, துறைநீலாவணை மற்றும் மண்டூர் பகுதிகளில் தஞ்சமடைந்தனர். இதனால் படையினரின் தாக்குதல்களில் இருந்து இவர்கள் தப்பித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

## இரு போராளிகள் வீரச்சாவு

இத் தாக்குதலில் மேஜர் கோகுலம் (நாகராஜா நவநீதன் - அம்பாறை), வீரவேங்கை பவித்திரன் (கோகுலநாயகம் கவிதாசன் - அம்பாறை) ஆகிய இரு போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டுள்ளனர்.

இதேவேளை கொல்லப்பட்ட விசேட அதிரடிப் படைப் பொலிசாரின் நான்கு உடல்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டது. பின்னர் அவ் நான்கு பொலிசாரின் சடலங்களும் 22ம் திகதி மாலை சர்வதேச செஞ்சிலுவைக்குழு மூலமாக மட்டக்களப்பு பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

இத் தாக்குதலில் கைப்பற்றப்பட்ட ஆயுத தளவாடங்களின் விபரங்களை விடுதலைப் புலிகள் வன்னியில் வெளியிட்டுள்ளனர். மூன்று 60மி.மீ. மோட்டார்கள், இரண்டு ரி.கே.எஸ்.எம்.ஜி. துப்பாக்கிகள், மூன்று ஆர்.பி.ஜி.எல்.எம்.ஜி.எறிகணைச் செலுத்திகள், ஒரு ரம்.எல்.எம்.ஜி., இரண்டு 40மி.மீ. கைத்துப்பாக்கி, ஒரு ஜி.3.ஏ.3, மற்றும் தானியங்கித் துப்பாக்கிகளும் எறிகணைகளும் ஆயிரக்கணக்கான ரவைகளும் கைப்பற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## பெண் புலிகளே தாக்கியழித்தனர்

*– உயிர்தப்பிய பொலிசார் கூறுகிறார் –*

அம்பாறை மத்திய முகாம் மீதான தாக்குதல்களில் பெருமளவில் பெண் போராளிகளே கலந்துகொண்டதாக இத் தாக்குதலின் போது கிணற்றுக்குள் குதித்து உயிர் தப்பித்துக்கொண்ட பொலிசார் ஒருவர் தெரிவித்துள்ளார். இத் தாக்குதல் குறித்து அப் பொலிசார் கூறியதாவது...


சம்பவதினமான 21ம் திகதி இரவு 11வது மைல் கல்லில் அமைந்துள்ள பொலிஸ் முகாமில் நான் வேறு இரு பொலிஸாருடன் கடமையில் இருந்தேன். இரவு 12.30 மணியளவில் எமது முகாமை நோக்கித் தாக்குதல் இடம்பெற்றது. அதேநேரம், 12ம் மைல்கல், பொலிஸ் முகாம், மத்திய முகாம் என்பவற்றின் மீதும் விடுதலைப் புலிகள் தாக்குதலை நடத்தினர். எமது முகாமை அவர்கள் தாக்க நாமும் பதில் தாக்குதல் நடத்தினோம். ஆனால், இறுதியில் நாம் பின்வாங்கினோம்.

தாக்குதலின்போது புலிகள் என்னைப் பிடித்து எனது காலில் துப்பாக்கியால் தாக்கிவிட்டு இருவரிடம் என்னை ஒப்படைத்தனர். நான் ஒருவாறு அவர்களிடமிருந்து தப்பி இருளில் ஓடிவந்துவிட்டேன். அவர்கள் என்னைத் துரத்தி வந்தனர். இருளில் நான் கிணறு ஒன்றில் தவறி விழுந்துவிட்டேன். அதில் தண்ணீர் குறைவாக இருந்தது. அதிகாலை அப்பகுதிக்கு வந்த அதிரடிப்படையினர் என்னை மீட்டு எடுத்தனர். முகாமைத் தாக்கிய பின்னர் புலிகள் இரு உழவு இயந்திரங்கள், பாரவண்டி என்பவற்றில் முகாமில் இருந்த பொருட்கள் அனைத்தையும் ஏற்றிச் சென்றனர். முகாமில் இரு கட்டடங்களை அவர்கள் தீ வைத்துக் கொளுத்தி அழித்தனர். இவற்றை நான் கிணற்றுக்குள் இருந்தபடி அவதானித்தேன். விடுதலைப் புலிகளின் பெண் உறுப்பினர்களே இத்தாக்குதலில் அதிகமாக ஈடுபட்டனர். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## தூக்கி எறியப்பட்ட முகாம் பொறுப்பதிகாரி

அம்பாறை-மத்திய முகாம் பொலிஸ் நிலையம் மீது விடுதலைப் புலிகளின் தாக்குதலையடுத்து அங்கு பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய பொலிஸ் அதிகாரி உடனடியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இந்த முகாம் புலிகளினால் தாக்கப்பட்டு அழிக்கப்பட்டதற்கும் பல பொலிசார் பலியானதற்கும் இந்த அதிகாரியின் கவனக்குறைவே காரணமென ஆரம்ப விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. இதனையடுத்தே இவர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இந்த அதிகாரி வேறு பொலிஸ் நிலையத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டாலும் இத்தாக்குதல் தொடர்பான விசாரணை தொடர்ந்து நடைபெறும் எனவும், இவருக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சிறிலங்கா பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்கான இப்பொலிஸ் நிலையம் தற்பொழுது திருத்தியமைக்கப்பட்டு வருவதுடன் அங்கு பதில் பொறுப்பதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டு முன்னரை விட அதிகமான பொலிசார் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.





இவ் வாரம் தமது பிறந்த தினத்தைக் கொண்டாடும் செல்வி சாம்பவி உதயகுமாரன், செல்வன் டன்சன் வசந்தன் ஆகியோரை பல்கலையும் கற்றுச் சிறப்புடன் வாழ்கவென குட்டி மாமாவும் மற்றும் சிறுவர் முற்ற சகோதர சகோதரிகளும் வாழ்த்துகிறோம்.

## உங்கள் கைவண்ணம்

### ஆன்மேரி தோமஸ்

**இடம்:** 78510 Triel Sur Seine, France.
**வயது:** 08 (23.03.1993)
**தமிழ் பாடசாலை:** பாரிஸ் தமிழர் கல்வி நிலையம்
**பொழுதுபோக்கு:** தொலைக்காட்சி பார்த்தல், படம் வரைதல், கணினி விளையாடுதல்
**உறுப்பினர் எண்:** F-138






### தோமஸ் பிறயன்

**இடம்:** 78510 Triel Sur Seine, France.
**வயது:** 06 (26.02.1995)
**தமிழ் பாடசாலை:** பாரிஸ் தமிழர் கல்வி நிலையம்
**பொழுதுபோக்கு:** அக்கா தம்பியுடன் விளையாடுதல், தொலைக்காட்சி பார்த்தல், படம் வரைதல், கணினிவிளையாடுதல்.
**உறுப்பினர் எண்:** F-139






## மணிமொழிகள்

★ அறத்தின் வழி நில். அஞ்சவேண்டாம். உன் இலட்சியமெல்லாம் உன் நாட்டை, உழைப்பை, உண்மையை பற்றியதாகவே இருக்கட்டும்

*- சேக்ஸ்பியர் -*

★ ஒரு நல்ல புத்தகமானது நீ உண்ணுகின்ற வேளையிலும் கூட உனது இன்னொரு கையில் வைத்த வண்ணம் உன்னைப் படிக்கத் தூண்டும்.

*- ஜோன்சன் -*

★ பணம் தலை குனிந்து பணியாற்றும்,அல்லது தலைகுப்புறத் தள்ளிவிடும்.

*- அலிவர் கேம்ஸ் -*

★ பலவானின் பலத்தைக் குறைப்பதால் பலவீனமானவனை பலவானாக்க முடியாது.

*- ஆபிரகாம் லிங்கன் -*

★ உண்மையான அடக்கமே எல்லாவித குணங்களுக்கும் மூல காரணமாயிருக்கின்றது.

*- முகமது நபி -*

★ பிறர் நம்மை புகழும் புகழ்ச்சி பூவைப்போன்றது. நாம் அதன் வாசனையை நுகரலாம். ஆனால் அதை அப்படியே விழுங்கிவிடக்கூடாது.

*- ஸ்பெக்டேட்டர் -*

## கதை முற்றம்

# 'ஊதல்'

நான் ஆறுவயதுச் சிறுவனாய் இருந்த போது, ஒரு விழா நாள் அன்று என் சட்டைப் பை நிறைய காசுகள் இருந்தன.

நான் விளையாட்டுப் பொருள்கள் விற்கும் கடைக்குப் போனேன். வழியில் ஒரு சிறுவனைச் சந்தித்தேன்; அவன் ஓர் ஊதல் வைத்திருந்தான்; அது எனக்கு மிகவும் பிடித்தது; உடனே என் பையிலிருந்த காசுகளை எல்லாம் அவனிடம் கொடுத்தேன்; அவற்றுக்குப் பதிலாக அந்த ஊதலை வாங்கிக் கொண்டேன். ஊதலை வாங்கியதில் எனக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டது, அதை ஊதிக்கொ -ண்டே இருந்தேன்; என் குடும்பத்தினர் அனைவருக்கும் அந்த ஒலியைக் கேட்க எரிச்சலாய் இருந்தது.

அந்த ஊதலை வாங்க என்னிடமிருந்த காசுகளை எல்லாம் கொடுத்தேன் என்று அறிந்தனர் என் வீட்டிலுள்ளவர்கள். அந்த ஊதலின் விலையைவிடப் பத்து மடங்கு அதிகம் கொடுத்து நான் அதை வாங்கியதாகக் குறை கூறினர்.

நான் யோசித்து இருந்தால் என்னிடமிருந்த காசுகளைக் கொண்டு இன்னும் நிறைய பொருள்கள் வாங்கியிருக்கலாமே என்ற எண்ணம் எனக்குத் தோன்றியது. நான் என் அறியாமையை எண்ணி அழுதேன்.

ஊதல் எனக்குத் தந்த மகிழ்ச்சி நான் சிந்தித்தபோது அதிக வருத்தத்தை ஏற்படுத்தியது.

இந்தச் சிறு நிகழ்ச்சி என் வாழ்க்கையில் பயனுள்ளதாக அமைந்துவிட்டது. இது எப்போதும் என் நினைவில் இருக்கும்.

தேவையில்லாத பொருள் ஒன்றை நான் வாங்க எண்ணினால் எனக்கு ஊதலின் நினைவு வரும்? நான் வீண் செலவைக் குறைத்து சேமிப்பேன் அல்லவா?

*– பிராங்கிளி(ன்)*

## கண்டுபிடியுங்கள்

### கடந்த வார விடை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மா | லை | ம | தி | | |
| ம | ல் | லி | கை | | |
| ம | லை | ம | க | ள் | |
| ம | ல | ர் | வி | ழி | |
| ம | ல | ர் | ம | தி | |
| ம | ல | ர் | ம | க | ள் |
| ம | யி | லி | | | |

பின்வரும் சதுரங்களில் உள்ள எழுத்துக்களின் துணைகொண்டு தூய தமிழ்ப் பெயர்களைக் கண்டு பிடியுங்கள். முடியாது விட்டால் விடை அடுத்தவாரம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ம | | த | | | லி |
| ம | | தி | | | |
| ம | | | த | | ணி |
| ம | | | | ள் | |
| ம | | மே | | லை | |
| ம | | | | ள் | |
| ம | | க் | | டி | |

## அறிந்துகொள்ளுங்கள்

★ சீனாவில் பெரும்பாலான நதிகளில் ஆறு மீட்டர் நீளமுள்ள மிதக்கும் படகு வீடுகள் அதிகம் உள்ளன. ஒவ்வொரு குடும்பத்தினரும் அவர்களது உறவினர்களும் நதியில் அருகருகே இப்படி வீடுகட்டி வசிக்கிறார்கள்.

★ 1300 ஆண்டுகளுக்கு முன் கிரேக்க நாட்டினர் இறந்தவர்களுக்கு தங்கத்தால் ஆன முகமூடிகளை அணிவித்துப் புதைத்து இருக்கிறார்கள். அவை இன்றும் எதென்ஸ் நகரத்து அருங்காட்சியகங்களில் காட்சிப் பொருள்களாக இருக்கின்றன.

★ பரத நாட்டியம் பற்றி பலர் பலவித கருத்துக்களை சொல்லியுள்ளார்கள். அதில் ஒரு கருத்து பரதநாட்டியம் ஆடுவதும் யோகாசனம் செய்வதும் ஒன்றுதான். நாட்டியத்தில் அநேக ஆசனங்கள் அடங்கி இருக்கின்றன. ஆடத்தெரியாதவர்கள் ஆசனம் செய்யுங்கள் என்கிறார் சுந்தாரணந்தா.

## வினா-விடை முற்றம்

### கடந்தவார விடைகள்:

1. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு.
2. எக்ஸ்ரே கண்டுபிடிக்கப்பட்டபோது முதலில் அது என்ன என்பதை அறியாததால் அதை X என்று குறிப்பிட்டனர்.
3. சிம்பஞ்சிக் குரங்கு.
4. இரத்தக் குழாய்கள்.
5. ஐக்கிய அமெரிக்கா.
6. கூவுதல்- கோழி, கனைத்தல்- குதிரை; ஊளையிடுதல்-நரி.

### இவ்வார வினாக்கள்

1. மாட்டுச் சண்டை விளையாட்டு எந்த நாட்டில் பிரபல்யமானது?
2. மனித உடலில் பித்தத்தை சுரக்கும் உறுப்பு எது?
3. ஆகாய விமானங்களில் இருந்து குதிப்பதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணம் எது?
4. இலங்கையில் உள்ள உயரமான மலையின் பெயர் என்ன?
5. பனிக்கட்டிக்கு ஏன் மரத்தூள் போட்டு வைக்கிறார்கள்?
6. பூச்சிகளுக்கு ஏன் இரு கொம்புகள் உள்ளன?

அடுத்தவாரம் விடைகளை சரிபார்த்துக்கொள்ளவும்.

— நாற்று —

ஜேர்மனி பட்மறியன்பேர்க்கில் வசித்துவரும் 15 வயது நிரம்பிய செல்வி செ. சுஜா அவர்கள் எழுதி அனுப்பியுள்ள சிறுகதை இது. எழுத்துத் துறையில் புதிதாக அறிமுகமாகும் இவரை வாழ்த்தி வரவேற்பதுடன், நாற்று பகுதியில் இவரது ஆக்கத்தை பிரசுரித்து, இம் முயற்சிக்கு ஊக்கமளிக்கின்றோம்.

-ஆ.ர்.

சிறு கதை

# பெற்றமனம்...

செந்தமிழும், சைவமும் சேர்ந்து மணம் பரப்ப, ஏனைய மதங்களும் இணைந்து வழி நடத்த சீரோடும், பார்புகழும் பேரோடும், வள்ளிமணாளன் தேரோடும் ஊராகிய நல்லூரிலேயே கந்தசாமியும் அவரது மனைவியார் செல்லம்மாவும் வாழ்ந்து வந்தார்கள். அந்த ஊரையே தாக்கிய மலேரியா செல்லம்மாவையும் விட்டு வைக்கவில்லை. பசி, பட்டினியுடன் மலேரியாவும் அவளைப் பாடாய்ப்படுத்தியது.

'என்னங்க... குமாரிட்டை ஒருக்கா சொல்லி அனுப்புங்க, நாங்கள் பெற்ற குற்றத்திற்காவது ஏதாவது வந்து செய்வான் தானே' என கணவனிடம் வேண்டிய செல்லம்மா மீண்டும் போர்வையை இழுத்து மூடிக்கொண்டு சுருண்டு படுத்தாள். 'செல்லம்மா எனக்கு அவன் வருவான் என்ற நம்பிக்கை இல்லை என்றாலும்; உன்னுடைய விருப்பத்தை நான் ஏன் மறுப்பான். சரி சொல்லிவிடுகிறேன்!' என்று கூறி கந்தசாமி யாரோ படலையை திறந்து வருவதை நோக்கினார். அங்கே அயல்வீட்டு மங்கம்மா தேநீருடன் வந்துகொண்டிருந்தாள்.

'ஆர் மங்கம்மாவோ... ஒருக்கா பிள்ளை உன்ரை இளைய மகனை விட்டு செல்லம்மா வருத்தத்திலை கிடக்கிறதை என்னுடைய மகனுக்கு சொல்லிவிடு. எனக்கு அவனுக்கு சொல்ல விருப்பமில்லை. செல்லம்மா தான் சொல்லிவிடச்சொல்லி அடம்பிடிக்கிறாள்.' என்று கூறிக்கொண்டு கந்தசாமி அருகிலிருந்த சில்வர் பேணியை எடுத்து மங்கம்மாவிடம் நீட்டினார். 'அப்பு, நான் நேற்று உங்களுடைய மருமகளை சந்தையிலை கண்டு கதைத்தனான். அப்ப அவ சொன்னா, உங்கட மகனுக்கு நேரமில்லையாம். நேரம் இருந்தால் வருவாராம். வேணுமெண்டால் இன்னொருதரம் சொல்லி அனுப்புகிறேன்.' என்று சொல்லிக்கொண்டு... தேநீரை வார்த்து கந்தசாமியிடம் நீட்டினாள் மங்கம்மா.

கந்தசாமி செல்லம்மா குடும்பம் பெரிய செல்வந்தராக இருந்தது. அவர்களின் ஒரே மகனாக குமார் பிறந்தான். குமாரை செல்வத்தின் செல்வமாக ஒரு குறையும் இல்லாது வளர்த்தனர். கந்தசாமியின் வியாபாரத்தில் ஏற்பட்ட நட்டம், தொடர்ந்தும் ஏற்பட்டதால் கந்தசாமி குடும்பம் கொஞ்சம் கொஞ்சமாக ஏழ்மை நிலையை அடைந்தது. இப்படி இருந்த போதும் தனது பிள்ளைக்கு



கல்விச் செல்வம் வேண்டுமென்ற காரணத்தால் கந்தசாமி கடன்பட்டுக்கூட மகனை படிப்பித்தார். குமார் கல்வியில் சிறந்து உயர் பதவியையும் பெற்றான்.

இருபத்தைந்து வயதை எட்டிப்பிடித்த மகனுக்கு நல்ல இடமாய்ப் பார்த்து தங்களுடைய சொந்தத்திலேயே திருமணம் செய்துவைக்கவேண்டுமென்று கந்தசாமியும், செல்லம்மாவும் எண்ணினார்கள். அந்த ஊரிலுள்ளோர் நான் முந்தி நீ முந்தி என்று குமாருக்கு பெண்கொடுக்க சம்மதித்து தூதனுப்பினார்கள். ஆனால் குமாரோ தான் விரும்பிய வேறு இடத்துப் பெண்ணையே திருமணம் செய்தான். அதையும் தாயும் தந்தையும் எதிர்க்கவில்லை.

நாட்கள் விரைந்தன. தாய் தந்தையிடம் வருவதை குமார் குறைத்தும் கொண்டான். ஆனால் பெற்றோரா அவன் வீடு தேடிச் சென்றார்கள். நாட்டுப்புற மாமன் மாமி தன்வீட்டை வருவதை மருமகள் விரும்பவில்லை. கணவனிடம் கூறினாள். மனைவி சொல்லை மந்திரமாக மதிக்கும் குமாருக்கு பெற்றோர் பெரிதாகத் தெரியவில்லை. ஒருநாள் குமார், 'ஆச்சி, அப்பு! உங்களுக்கு ஒன்று சொல்லுகிறேன். இங்கே எத்தனையோ பெரியவங்கள் வருகிற இடம். எனவே நீங்கள் இங்கே வருவதை மனைவியும் விரும்பவில்லை. எனக்கும் விருப்பம் இல்லைதான் எனவே இங்கே வரவேண்டாம். உங்களுக்குத் தேவையான பணத்தை நான் கொண்டுவந்து தருகிறேன்' என சாதுரியமாக கூறினான். குமார் கூறிய வார்த்தை அவர்கள் இருவரையும் ஆயிரம் ஊசி கொண்டு குற்றியதுபோல உணர்ந்தார்கள். இருந்தபோதும் மகன் தானே சொல்கிறான் என ஆறுதல் அடைந்தனர்.

குமாருக்கு சம்பளம் உயர்ந்து கொண்டே சென்றது. ஆனால் அவன் பெற்றோருக்கு வழங்கும் பணத்தை மட்டும் குறைத்துக்கொண்டே வந்தான். அத்தோடு கொடுக்கும் பணத்திற்கு கணக்கு கேட்பான். சிக்கனம் இல்லையென சீறிப்பாய்வான். புகையிலை, வெற்றிலை, பாக்கு பாவிப்பது உடலுக்கு தீங்கு என்று முதலைக் கண்ணீர் வடிப்பான். காசு செலவு செய்யும்போது கட்டுப்பாடு தேவையென்று கட்டளை இட்டான். பித்துப் பிடித்த பெற்ற மனங்கள் பிதற்றிக்கொண்டன, 'அவன் சொல்வதெல்லாம் நன்மைக்குத்தானே' என்று.

குமாருக்கு நான்கு பிள்ளைகள் பிறந்தன. தங்களது பேரப்பிள்ளைகள் என்று தூக்கிக் கொஞ்ச கந்தசாமியோ, செல்லம்மாவோ கொடுத்து வைக்கவில்லை. அவர்கள் பேரர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு குமாரோ, மனைவியோ சொல்லி வைக்கவில்லை. இந்நிலையில் குமாரின் மனைவி ஒருநாள், 'நீங்கள் ஒரு பொறுப்பற்ற மனிதராய் உங்கள் அப்பா, அம்மாவுக்கு இப்பவும் பணம் கொடுத்துக் கொண்டு இருக்கிறியன்' என சீறிப்பாய்ந்ததோடு, 'எங்களுக்கும் இப்ப நான்கு பிள்ளைகளுக்கும் பாடசாலை செலவு என்ன என்று தெரியும்தானே! அத்தோடு பிள்ளைகளின் எதிர்காலத்திற்காவது ஏதாவது சேர்த்து வைக்கிறியளே?' எனக் கேட்டாள். மனைவி கூறுவதே மந்திரம் எனக் கொள்ளும் குமாரும், தனது பெற்றோருக்கு கொடுக்கும் தொகையையும் சிறிது சிறிதாகக் குறைத்து முற்றாக நிறுத்திக்கொண்டான்.

செல்லம்மாவை மலேரியா காய்ச்சல் மிகவும் கடுமையாகப் பாதித்திருந்தது. மகனைப் பார்க்கவேண்டும், பேசவேண்டுமென்ற அவாவுடன், 'அவனைக் கூட்டி வாருங்கள்' என மன்றாடினாள். கந்தசாமியும் தனது மனைவியின் கடைசி ஆசையை தீர்ப்பதற்காக மகன் குமார் வீட்டை நோக்கி ஓடினார். ஆனால் அவருடைய மருமகளோ 'அவர் இப்ப. இங்க இல்லை. வந்தால் சொல்கிறேன்' என வேண்டா வெறுப்புடன் கூறினாள். செல்லம்மாவும் மகனைக் காணாமலே மேலுலகம் சென்றுவிட்டாள்.

செல்லம்மா இறந்து பல மாதங்கள் கழிந்தன. குமாருக்கு சிறுநீரகத்தில் பாதிப்பு ஏற்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டான். அவன் உயிர் வாழ்வதாயின் சிறுநீரக மாற்றுச் சிகிச்சை உடனே செய்தாக வேண்டும். யாராவது தமது சிறுநீரகம் ஒன்றை தானம் செய்வதால் அது மாற்றமுடியும் என்று வைத்தியர் கூறினார். குமாரின் மனைவியோ, அவளது சொந்தக்காரரோ தங்களால் இயலாது எனக் கைவிரித்தனர். இச்செய்தி கந்தசாமியின் காதுகளுக்கு எட்டியது. கந்தசாமியால் அதனை தாங்கமுடியவில்லை. பெற்ற மனம் அல்லவா!

தன் மகனை காப்பாற்றிவிட முடியும் என்ற நம்பிக்கையுடன் வைத்தியசாலையை நோக்கி நடக்கத் தொடங்கினார்.

செ. சுஜா

# சுவிசில் நட்சத்திர இரவு

ரீ.ரீ.என் – ஐ.பி.சி. – சுவிஸ் மில்லேனியம் இணைந்து நடாத்திய நட்சத்திர இரவு கடந்த 25.08.2001 சனியன்று சுவிஸ் நாட்டின் ஒல்ரன் நகரில் ஆயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் நடைபெற்றுள்ளது. இந் நட்சத்திர இரவில் ரீ.ரீ.என் தொலைக்காட்சி மற்றும் ஐ.பி.சி. வானொலியின் கலைஞர்கள் பலரும் கலந்துகொண்டு கலை நிகழ்வுகளை வழங்கியுள்ளனர். இந்நிகழ்வில் இருந்து சில காட்சிகள்.

















IITAG

REISEGARANTIE
Member of Gurantiefund

IATA
Member of International Transport Asisotion

Member of Travelers Sociaty Switzerland

We are the direct Agent of the following Air Lines:
Swissair, Lufthansa, Air France, Britisch, SAS,
Quantas, Singapure, Srilankan, Emirates, Gulf,
Kuwait, Malaysia, Cathy Pacific, Thai, Air India,
Delta, Canada, American.

நியாய விலையில்
உங்கள் பிரயாணத்திற்கு

Reisebüro
IITAG Travel

★ உலக நாடுகள் முழுவதற்குமான விமானச் சீட்டுக்கள்
★ ஐரோப்பா முழுவதற்குமான புகையிரத சீட்டுக்களும் ஆசன பதிவு செய்தலும்
★ விசா ஒழுங்குகள்
★ விடுமுறை பிரயாண ஒழுங்குகள், தங்குமிட வசதிகளுடனும் இல்லாமலும்
★ குழுக்களாகப் பிரயாண ஒழுங்குகள்
★ யாத்திரை ஒழுங்குகள்
★ பிரயாணத்திற்கான அனைத்து காப்புறுதிகள்

அனைத்துத் தொடர்புகளுக்கும்:

IITAG Travel
Reichgasse 61, 7002 Chur
Tel: 081 250 59 90.
Fax: 081 250 59 91.
Email: Travel@iitag.Com
http//: www.iitag.com

தமிழில் விளம்பரங்களுக்கு
081 354 99 12

புதிய நிர்வாகத்தின் கீழ்
AMIRTHAAM



முற்பணமாக £20 செலுத்துபவர்கட்கு
ஒரு நேர உணவு ஏழு நாட்களுக்கும்.

OPENING HOURS:
Monday-Thursday - 12 noon- 3.00 pm 6.00 pm 11.00 pm
Friday/Saturday - 12.00 noon- 12.00 midnight
Sunday - 12.00 noon - 11.00 pm

200B Alexandra Avenue, South Harrow, Middlesex HA2 9BU,
Tel: 020 8423 9666/ 020 8864 3636

Palm Beach
RESTAURANT
10%OFF
ALL TAKE
AWAY ORDERS

P.Sivarupan
Proprietor


Finest South Indian & Sri Lankan Cuisine

17 Ealing Road,
Wembley
Middlesex HA0 4AA
Tel: 020 8900 8664
Mobile: 079 3958 7338
Home: 020 8900 1990

சீலன்ஸ்
இலங்கை, இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட உடன் மரக்கறி, கடலுணவு, பல சரக்குகள் நியாயமான விலைகளில் பெற்றுக்கொள்வதோடு, மிகக்குறைந்த விலையில் தொலைபேசி அட்டைகளையும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.
Seelans
332 & 334. High Street North
East Ham, London E 12-6Ph
Tp & Fax- 020 8471 5733

SML
Royal Jewellery



287. High Street North
East Ham.
Manor Park,
London E12 6SL
Tel - 020 8472 5500 -
Fax - 020 8472 5687

TRAVEL AIR
உங்கள் பிரயாணத் தேர்வுகளை உங்கள் வசதிக்கேற்றவாறு கணினி வலையூடாக தேர்வு செய்யலாம்.
www.travel-air.de
LUISEN STR-46, 42103 WUPPERTAL.
Tel: 0202/4936921/0202/2443104-05
Fax: 0202/2443106
Handy: 0173-2850638

டென்மார்க்கில்
முதன் முறையாக
ஈழமுரசு
நடாத்தும்



இசை முரசு 2001
சிறந்த பாடகர் தெரிவுப் போட்டி

காலம்: 08.09.2001 சனிக்கிழமை
நேரம்: மாலை 4.30 மணி
இடம்: Petersminde Hallen
Petersminde Vej-25
7100 Vejle.
தொடர்புகளுக்கு: 97 21 76 49

NÆRKØB REJSER
M. Anton Raj
Korskervej. 104, 7000 Fredericia
Tel: 75 91 58 40
Fax: 75 91 58 42
E-mail: nærkøb-travels@post.tele.dk

PRIMA FOOD
டென்மார்க்கில் ஆசிய உணவுப் பொருட்களின் தாயகம்
Prima Food Import/Export
Ibæk strandvej 11, 7100 Vejle.
Tel: 75828941 Fax: 75828852
Mobil: 28 11 88 41

FRED ASIA HOUSE
உங்களின் அனைத்து நகைத் தேவைகளுக்கும் Fred Asia House
Gothers gade30, 7000 Fredericia.
Tel: 75914182 Fax: 75914162
Mobil: 21608225
E-mail: fahouse@get2not.dk

NØRRE AABY RADIO & TV
OSTRE GADE 37
5580 NØRRE AABY

# என் சதுரங்கம் - 02

★ மேலுள்ள சதுரங்களில், மேலிருந்து கீழாகவோ அல்லது இடமிருந்து வலமாகவோ அல்லது மூலைப் பக்கமாகவோ கூட்டி வரும் தொகை 74 ஆக இருக்க வேண்டும்.

★ நீங்கள் இடும் இலக்கங்கள் அனைத்தும் 26 இற்குள் மட்டுமே அமைந்திருக்க வேண்டும்.

★ ஒரு இலக்கத்தை ஒருமுறை மாத்திரமே உபயோகிக்க வேண்டும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 74 | 74 | 74 | 74 | 74 | 74 | 74 |
| 74 | | | | | | 74 |
| 74 | | | | | | 74 |
| 74 | | | | | | 74 |
| 74 | | | | | | 74 |
| 74 | | | | | | 74 |
| 74 | 74 | 74 | 74 | 74 | 74 | 74 |

சரியான விடையெழுதியவர்களில் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து வாசகர்களின் விபரங்கள் வருமாறு.

1) வாசுகி ராஜரட்ணம்
Northampton, UK. NN1 5JP.
2) திருமதி ஜெயந்தி கனகராஜா
60486 Frankfurt, Westgermany.
3) திருமதி கலாராணி சதானந்தகுமார்
93230 Romainville, France.
4) திரு. எஸ்.சிவதாசன்
Eastham E6 2NQ, UK.
5) வசந்தி நாராயணபிள்ளை
93000 Bobigny, France.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 113 | 113 | 113 | 113 | 113 | 113 | 113 | |
| 113 | 39 | 01 | 19 | 21 | 07 | 05 | 21 | 113 |
| 113 | 25 | 07 | 13 | 13 | 11 | 09 | 35 | 113 |
| 113 | 17 | 15 | 29 | 19 | 09 | 11 | 13 | 113 |
| 113 | 03 | 17 | 21 | 23 | 25 | 09 | 15 | 113 |
| 113 | 05 | 09 | 07 | 33 | 27 | 17 | 15 | 113 |
| 113 | 01 | 33 | 15 | 01 | 23 | 27 | 13 | 113 |
| 113 | 23 | 31 | 09 | 3 | 11 | 35 | 01 | 113 |
| | 113 | 113 | 113 | 113 | 113 | 113 | 113 | |

இவர்களுக்கு *Lune International* நிறுவனத்தினரால் பெறுமதி மிக்க நூல்கள் அனுப்பி வைக்கப்படும்.

LUNE
12, Rue Perdonnet,
75010 Paris.
Tel: 01 42 09 21 43

தயாரிப்பு: சவேயூ சவுந்தரராஜா

என் சதுரங்கம் - 02 இற்கான சரியான விடையும், என் சதுரங்கம் - 03ம், 13 - 19 செப்டெம்பர் 2001 ஈழமுரசில் வெளிவரும்.

என் சதுரங்கம் - 02 இற்கான விடைகள் வந்துசேர வேண்டிய கடைசி நாள்: 07.09.2001 (போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)

விடைகள் அனுப்ப வேண்டிய முகவரி:

என் சதுரங்கம், Eelamurasu, 22, Rue Perdonnet, 75010 Paris, France.

பெயர்: ..............................................................

முகவரி (ஆங்கிலத்தில்): ..............................................................

..............................................................


பிறந்த நாள்: .............................. சந்தாதாரராயின் சந்தா எண்: ..............................

# குப்பைக்குள் இருந்து ஒரு குட்டி



தமிழக திரைக் குப்பைக்குள் இருந்து அவ்வப்போது குண்டுமணிகளும் வருவதுண்டு என கடந்தவாரம் புத்திசிகாமணி குட்டி படத்தைப் பற்றி குறிப்பிட்டிருந்தார். தமிழகத் திரைப் படங்கள் பற்றிய பார்வையை இப் பகுதியில் கடந்த காலங்களில் எழுதி வந்திருக்கிறேன். ஆனால் பாரதிக்கு பின்னர் வெளிவந்த படங்களில் சொல்லிக்கொள்ளக் கூடியதாக எந்தவொரு படமும் வந்துவிடவில்லை, எல்லாம் வழமைபோலவே... இதில் இருந்து மாறுபட்டு அண்மையில் அமைதிய தமிழக திரையுலகில் வெளிவந்திருக்கிறது, இன்றைய குழந்தைத் தொழிலாளர்களின் வாழ்வை மையப்படுத்தி 'குட்டி' என்ற படம்.

சிவசங்கரியின் நாவல் ஒன்றுக்கு உயிரோட்டம் கொடுத்து திரைப் படமாக்கியிருக்கிறார் ஒரு பெண் இயக்குநரான ஜானகி விஸ்வநாதன். தந்தையின் அரவணைப்பில் பாசத்தோடு வளர்க்கப்பட்ட ஒரு பத்து வயது நிரம்பிய சிறுமி, அந்தத் தந்தையை இழந்தபோது ஏற்படும் வறுமையில் சிக்குண்டு, கிராமப்புறத்தில் இருந்து நகரப் பகுதி ஒன்றுக்கு வீட்டு வேலைக்காக அனுப்பி வைக்கப்படுகின்றாள். தனது உறவுகளைப் பிரிந்து நகரம் வரும் அந்தப் பிஞ்சு, அந்த நகர வாழ்க்கையில்.... மனித நேயங்களைத் தொலைத்துவிட்ட சில மனிதர்களுக்கு மத்தியில் அதன் மனம் படும் நரக வேதனைகள் மனதை நெருடும் காட்சிகளாக நகர்கின்றன. சில நாட்களிலேயே அந்த பிஞ்சு மனதின் ஏக்கங்கள், எதிர்பார்ப்புகள் எல்லாம்



சிதைக்கப்பட்டு தன் தாயிடமே திரும்பிப் போய்ச்சேர்ந்துவிட வேண்டும் என்ற ஆவலோடு வெளியேறும்போது, படத்தை பார்ப்பவர்களின் மனங்களும் அந்தக் குழந்தை தன் தாயிடம் போய்ச் சேர்ந்துவிட வேண்டும் என்றே ஏக்கத்தோடு எதிர்பார்க்கின்றன.

ஆனால், தீராத இந்த மனிதக் கொடுமைகளுக்குள் மானுடம் விற்கப்படும்போது ஏனோ இனம் புரியாத வலியொன்று மனதை நெருடிய படி படம் முற்றுப் பெறுகிறது. படம்தான் முடிந்ததே தவிர குட்டியாக வரும் அந்த பிஞ்சின் எதிர்காலம் கேள்விக்குறியாக இன்னொரு திரைப்படத்திற்கான ஆரம்பத்தை தந்துவிட்டுச் செல்கின்றது. இன்றைய யதார்த்த நிலையும் அதுதான் போலும்.

வீட்டில் வைத்த செல்லப்பெயர் 'கண்ணம்மா' போய், வேலைக்காரி 'குட்டி'யாக படத்தின் காட்சி முழுவதும் மிரளும் விழிகளுடன் வந்து சென்றபோதும் பார்வையாளர்களுக்குச் சலிப்புத் தட்டாது நடித்துள்ள அல்லது அந்தக் கதாபாத்திரமாக மாறிவிட்டிருந்த குழந்தை நட்சத்திரமான ஸ்வேதா, தந்தையாக நாசர், குழந்தையை வேலைக்கு அமர்த்தியிருக்கும் குடும்பமாக ரமேஷ் அரவிந்த, கௌசல்யா தம்பதிகள், வேலைக்காரர்கள் என்றால் நாயைவிடக் கேவலமாக, தரக்குறைவாக நடத்த வேண்டும் என்ற எண்ணம்கொண்ட எம்.என்.ராஜம் என நடிகர்கள்... இதற்குள் நகைச்சுவையை விட்டு குணச்சித்திரபாத்திர



மாக மாறியுள்ள விவேக், எழுதவும் தெரியாமல், முகவரியும் தெரியாமல் தன்னை இந்தக் கொடுமைகளில் இருந்து விடுவிக்க, தன்னுடைய தாயை வந்து அழைத்துச் செல்லுமாறு கடிதம் எழுதித்தருமாறு குழந்தை கூறும்போது, விவேக் படும் வேதனை மனதைத் தொடுகின்றது. இத்தனையையும் பதிவாக்கியுள்ள தங்கர்பச்சானின் ஒளிப்பதிவு காட்சிகள் மனதைவிட்டு அகலாது நிழலாய் தொடர்கின்றன. இத்தனைக்கும் மகுடமாய் '*தங்கச்சி... தங்கச்சி... எங்கே போகிறாய்...*' என மீண்டும் பின்னணியில் இசையில் முன்னணியில் நிற்கும் இளையராஜா என படம் சிறியதாக இருந்தாலும் மனதில் நிறைவாய், எதிர்காலத் தலைமுறையின் வாழ்நிலையின் புரிதலாய் அமைந்து விட்டது.

பாரதிக்கு பின்னர் ஒரு தரமான படத்தை பார்த்த திருப்தி மட்டும் மனதில்...

*- செந்தூரன்*

# தமிழீழ வரலாறு கண்ட வீரப் பரம்பரை

→ 08

அரசியல் தந்திரம் ஒருபுறம், போர்த்திறம் மறுபுறம். ஆக இருமுனைச் செயற்பாடுகளையும் திட்டமிட்டுச் செயற்படுத்துவதிலேயே பிரபாகரனுடைய வெற்றிகள் தங்கியுள்ளன. 1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23ம் திகதி திருநெல்வேலியில் அவர் தமது சகாவான செல்லக்கிளியின் தலைமையில் சென்று ட்றக்கில் வந்த பதின்மூன்று சிங்களச் சிப்பாய்களைப் பிணமாக வீழ்த்திய சாகசம் மகத்தானதாகும்.

'1983 இல் தமிழ்க் கலாச்சாரத்தின் காவலரணாய் அமைந்த யாழ்ப்பாணத்தில் இலங்கை அரசின் இராணுவத்தின்மீது பேரச்சமூட்டும் வகையிலே அவர் பதுங்கல் தாக்குதல் ஒன்றை நடத்தினார். கதை கதையாய்ப் பேசுதற்குரிய இந்தத் தாக்குதல் இலங்கையரசினை அதன் முள்ளந்தண்டுவரை நடுங்க வைத்தது. இதனால் விறைத்துச் செயலற்றுப்போன அரசு, எதிர் நடவடிக்கை எடுக்க முன்பே, சிங்களக் குண்டர்கூட்டம் இதற்குப் பழிவாங்கும் வகையிலே கொழும்பில் தமிழருக்கு எதிரான கலகத்தில் இறங்கியது. இந்தத் தாக்குதல், சிங்களவரின் அறிவை மயக்கி அதிரவைத்தது தெளிவு.' பிரபாகரன் போர்க் கலையில் தேர்ந்தவர். குறிபார்த்துச் சுடுவதில் ஈடில்லாத திறமைசாலி. ஆயுதங்கள் பற்றிய தேர்ந்த அறிவு அவருக்கு உண்டு.



## 'சங்கிலி' முதல் 'பிரபாகரன்' வரை



இன்று தமிழ் ஈழ விடுதலைப் புலிகள், கெரில்லாப் போர்முறையையும் கடந்து, நேரடி மோதல்களிலும் தலைசிறந்து விளங்குகின்றனர். நெல்லியடி இராணுவமுகாம் அழிப்பும், கோட்டையைக் கைப்பற்றியதும், மாங்குளம் முகாமைப் பிடித்ததும் புலிகளின் போராற்றலுக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாய் விளங்குகின்றன. இவை பிரபாகரனின் போர்த் திட்டத்துக்கும் திறனுக்கும் கட்டியம் கூறுகின்றன. மாவீரர்கள்தம் சாவைத் தூசெனக் கருதும் உளப்பாங்கிற்கும், திட்டம் வகுத்திடும் திறனுக்கும் வீரசாகசங்களுக்கும் பிரபாகரனின் பின்னணி ஊக்குவிப்பும் வழிகாட்டலும் துணைநிற்கின்றன.

குண்டுவீச்சு விமானங்களின் குண்டுப் பொழிவு ஒருபுறம், கடற்பீரங்கிகளினதும் ஷெல்களினதும் தாக்குதல் இன்னொரு புறம், ஹெலியின் அடாவடித்தனம் மற்றொருபுறம் என்று பலமுகத் தாக்குதலுக்கு ஈடுகொடுத்து எதிர்த்து நிற்பதும், எதிரிகளை, அவர்களின் மூலபலங்களை அழித்தொழிப்பதும் சாதாரண விடயங்கள் அல்ல. உலகப் போர்களின் வரலாற்றில் பிரபாகரனைத் தலைவராய் ஏற்ற விடுதலைப் புலிகளின் சாதனைகள் தனி அத்தியாயத்தைப் படைத்துக்கொண்டிருக்கின்றன. உலகம் அடிக்கடி காணமுடியாத அற்புதம் இது என்று கூறலாம். இந்த அற்புதத்தின் மூலநாயகன் பிரபாகரன்.

### முடிவுரை

பேரினவாதத்தினை எதிர்த்து ஈழத் தமிழ் மக்கள் தங்கள் மண்ணை மீட்கும் போராட்டம் இன்னும் சில ஆண்டுகள் தொடர்ந்து நிகழலாம். ஆனால் வெற்றி ஒரு நாள் நிச்சயம் கிட்டும். அந்த வெற்றிப் பிரவாகத்துக்கு மத்தியில் பிரபாகரனின் நாமம் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் என்பதற்கு ஐயமில்லை.

இரண்டாம் உலகப் போரிலே ஜேர்மனிய சர்வாதிகாரியான ஹிட்லர், யூதரை இலட்சக்கணக்கிலே கொன்று குவித்தான். முதியோர், இளைஞர், பெண்கள், குழந்தைகள் என்ற வேறுபாடின்றி அழித்தொழித்தான். உலகின் எந்த மூலையிலும் யூதர் என்ற சாதியார் இல்லாது முற்றாகத் துடைக்கப்பட்டனர் என்றே உலகம் நம்பியது. ஆனால் யூதசங்காரத்துக்குத் தப்பிப் பிழைத்த சிலர், பலராகி அவர்களின் ஆதிவதிவிடமான இஸ்ரேலில் அவர்களின் தனியரசு உருவாகி விட்டது. அது உலகின் சவால்களுக்கு அஞ்சாது முகம்கொடுத்து வருகிறது.

போலந்தில் இரண்டாவது உலகப் போரின்போது யூதர்களில் பெரும்பாலான குடிமக்களை அழித்துவிட்டு எஞ்சியோரை 'கெட்டோ' என்ற யூதர்சேரியில் ஜேர்மனியர் குடியேற்றினர். அதனோடும் விடாது அவர்கள் தங்கியிருந்த வீடுகளிலிருந்தும் அவர்களை அப்புறப்படுத்தித் தொழில் முகாம்களில் அடைத்தும், தேசப்பிரஷ்டம் செய்தும் சித்திரவதை செய்தும் வருத்தினர். இத்தகைய வெளியேற்ற நாடகம் ஒன்றில் அலிசியா என்ற யூதச் சிறுமியும், அவள் தமையன்மாரும், தாயும் ஜேர்மனிய பொலிசாரினால் சுற்றி வளைக்கப்பட்டு வீட்டிலிருந்து வெளியேற்றப்படுகின்றனர். அந்தவேளையில் துயரமும், கோபமும் கண்ணீருமாக நின்று கலங்கிய அலிசியாவை நோக்கி அவள் தமையன் கூறிய வாசகங்கள் இவை:

'போர் முடிவுற்றதும் நாங்கள் ஒருநாள் வீட்டுக்குத் திரும்புவோம். இந்த அவலம் நீடிக்கப்போவதில்லை.' தமிழனுக்குத் தனிநாடு இல்லாத பழி துடைக்கப்படும். துன்பக்கடலிலும் அச்சப்புயலிலும் அகப்பட்டுச் சீரழிவோர் தமது நலம் மறந்து, இனநலமும் மண்பற்றும் மிக்கவர்களாய்ச் சீறி எழுந்து போராட்டத்தில் பங்காளர்களாய் மாறுவர்; மாறியாக வேண்டும். அன்று தமிழ் ஈழத்திலே பிரபாகரன் தலைமையிலே சுதந்திரப் புலிக்கொடி பட்டொளிவீசிப்பறந்திடும். இந்த மண் எங்களின் சொந்தமண்.

[முற்றும்]

– க. சொக்கலிங்கம் (சொக்கன்)

# சூரிய விமானம்



சூரிய ஒளியில் இயங்கும் விமானம் ஒன்றைத் தயாரித்து அதனை வெற்றிகரமாக பறக்க விட்டுள்ளது நாசா விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம். 15 பில்லியன் டொலரில் தயாரிக்கப்பட்ட இவ் விமானம், 14 இயந்திரங்களுடன் இயங்குகின்றது. ஹெலியாஸ் (Helios) என பெயரிடப்பட்டுள்ள இவ் விமானம் இப்பறப்பின் மூலம் ஒரு சாதனையையும் படைத்துள்ளது. அதாவது, உலகத்தில் அதிக உயரத்தில் பறந்த விமானம் என்ற பெயரையும் இது பெற்றுள்ளது. இது பறந்த உயரம் 96,500 அடியாகும். இதற்கு முன்னர் 1966ல் லொகிட் எஸ்.ஆர்.-71 என்ற விமானமே 85,068 அடி உயரத்தில் பறந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# பலதும் பத்தும்

## தக்காளித் திருவிழா



*ஸ்பெயினில் வருடம் தோறும் நடைபெற்றுவரும் தக்காளித் திருவிழா கடந்த 22ம் திகதி ஸ்பெயின் கிழக்கு பகுதியான பூனோல் என்ற இடத்தில் மிக விமர்சையாக நடைபெற்றுள்ளது. சுமார் 30,000 பேர் கலந்துகொண்ட இத் தக்காளித் திருவிழாவில் 130 தொன் தக்காளிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இத் தக்காளித் திருவிழா ஸ்பெயினில் 1940ம் ஆண்டு முதல் நடைபெற்று வருகிறது.*

## சுதந்திரச் சிலையில் மாட்டினார்!



அமெரிக்காவின் சுதந்திரச் சிலையின் கையில் உள்ள சுடருக்குள் இறங்குவதற்காக பரசூட்டில் பறந்து சென்ற பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஒருவர் தனது முயற்சியில் தோல்வியிடைந்து சுதந்திரச் சிலையின் கையில் சிக்கிக் கொண்டார். இவரை மீட்டெடுத்த அமெரிக்கப் பொலிசார், அனுமதியின்றி இம் முயற்சியில் இறங்கியதாகக் குற்றம்சாட்டி அவரைக் கைது செய்துள்ளனர்.

உங்கள் வீடுகள், வர்த்தக நிலையங்களில் சகல விதமான திருத்த வேலைகளுக்கும் காத்திருக்கின்றார்கள்

VICTOR SARL

கட்டட, மின்சார, தண்ணீர், கழிப்பறை திருத்த வேலைகளை மிகக் குறைந்த கட்டணத்துடன் திறமையான தொழிலாளர்களைக்கொண்டு அமைத்துக்கொள்ள

VICTOR SARL - 25bis, Rue des Chaufourniers, 75019 Paris. Tel: 01 42 06 59 19 Fax: 01 42 06 61 19

# உலகில் இவ்வாரம்

## ஓகஸ்ட் 26 முதல் 1 செப்டெம்பர் வரை

**26**

1743 நவீன இரசாயனத்தின் தந்தை என்று கருதப்பட்டு வரும் பிராண வாயுவைக் கண்டுபிடித்தவருமான, பிரான்ஸ் நாட்டு இரசாயன நிபுணர் அன்டர்ய்ன் லாவோய்சியர் பிறந்தார். பிரெஞ்சு புரட்சியாளர்களால் 1779ம் ஆண்டு கொல்லப்பட்டார்.

1883 ஜாவாவிற்கும், சுமாத்ராவிற்கும் இடையே உள்ள க்ராகாடோயா தீவில் ஏற்பட்ட எரிமலை வெடித்துச் சிதறியதில் 36,000 பேர் கொல்லப்பட்டனர். தீவின் 3ல் 2 பாகம் சேதமடைந்தது.

1896 கான்ஸ்டான்டி, ளோடியாவில் உள்ள ஆட்டோமான் வங்கியை ஆர்மீனிய புரட்சியாளர்கள் தாக்கியதையடுத்து, தொடர்ந்து 3 நாள் போரில் 6000 ஆர்மீனியர்கள் கொல்லப்பட்டனர்.

1920 அமெரிக்க அரசியலமைப்புச் சட்டத்தில், 19வது சட்டத்திருத்தம் கொண்டுவரப்பட்டதன் மூலம், பெண்களுக்கான வாக்குரிமை அளிக்கப்பட்டது.

1944 இரண்டாம் உலகப் போரின்போது, பல்கேரியா போரிலிருந்து விலகுவதாக அறிவித்து, அந்நாட்டில் முகாமிட்டிருந்த ஜெர்மன் படைகள், ஆயுதங்களை ஒப்படைக்கவேண்டும் என்று ஆணையிட்டது.

1976 நெதர்லாந்து ராணி ஜூலியானாவின் கணவர், இளவரசர் பெர்னார்ட், லாக்ஹீட் ஊழல் குற்றச்சாட்டை தொடர்ந்த, தனது பதவிகளை ராஜினாமா செய்ய ஒப்புக்கொண்டார்.

1996 முன்னாள் தென்கொரிய அதிபர் சுன்டு ஹவான் 1979 ஆட்சிக் கவிழ்ப்புச் சதித் திட்டத்தில் பங்கேற்றதற்காக நீதிமன்றம் அவருக்கு மரணதண்டனை அளித்து தீர்ப்பளித்தது.

1997 தென் ஆபிரிக்காவின் கடைசி வெள்ளை அதிபர், எஃப், டபிள்யு, டி.கிளார்க், எதிர்க்கட்சியான தேசிய கட்சியின் தலைவர் பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்தார்.

**28**

1914 முதலாம் உலக யுத்தத்தில், வடக்கு கடலில், இங்கிலாந்துக்கும் ஜெர்மனிக்கும் இடையே நடந்த கடல் சண்டையில், ஜெர்மனியின் 4 கப்பல்கள் அழிக்கப்பட்டன. ஆயிரம் கடற்படை வீரர்கள் கொல்லப்பட்டனர்.

1916 ருமேனியாவுக்கு எதிராக ஜெர்மனி போர்ப் பிரகடனம் செய்தது. ஜெர்மனிக்கு எதிரான யுத்தத்தை இத்தாலி அறிவித்தது.

1922 முதன் முதலாக வானொலியில் விளம்பரம் ஒன்று ஒலிபரப்பானது. நியூயோர்க்கில் உள்ள வீப் வானொலி நிலையம் 'குயின்ஸ்போரோ ரியால்ட்டி கார்ப்பரேஷனின்' 10 நிமிட சொத்து விளம்பரத்தை அது ஒலிபரப்பியது.

1944 2ம் உலகப் போரில் ஜெர்மனியின் கடைசி துருப்புக்கள் மார்சீல்ஸ் நகரில் சரண் அடைந்தன.

1963 அமெரிக்காவின் கறுப்பர் இனத்தலைவர் மார்ட்டின் லூதர்கிங் 2 லட்சம் மனித உரிமை ஆர்ப்பாட்டக்காரர்கள் மத்தியில் 'எனக்கு ஒரு கனவு இருக்கிறது' என்ற புகழ் பெற்ற பேச்சை பேசினார்.

1983 இஸ்ரேல் பிரதமர் மெனா சிம்பெகின் பதவியை ராஜினாமா செய்தார்.

1990 ஆக்கிரமிப்புக்கு உள்ளான குவைத்தை, ஈராக்கின் 19வது மாகாணமாக ஈராக் அறிவித்தது.

1996 இளவரசர் சார்லஸ்– டயானா திருமணம் விவாகரத்து மூலம் முறிந்தது.

1997 வெனிசுலா நாட்டு சிறையில் ஏற்பட்ட மோதலில் 29 கைதிகள் கொல்லப்பட்டனர்.

**29**

1350 நூறாண்டு யுத்தத்தில், விண்செல்சீ என்ற இடத்தில் நடந்த போரில், ஆங்கிலேயர்களால், ஸ்பெயின் நாட்டின் கப்பல் படை முழுவதுமாக அழிக்கப்பட்டது.

1475 ஆண்டுக்கு ஒரு முறை கப்பமும், தங்கமும் தருவதாக பிரான்ஸ் ஒப்புக்கொண்டதையடுத்து, பிக்குக்னி சமாதான உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டு இங்கிலாந்து மன்னன் நான்காம் எட்வர்டு தனது படைகளை வாபஸ் பெற்றுக்கொண்டான்.

1792 தண்ணீர் அளவிற்குச் சற்றுக் கீழே ஏற்பட்ட பழுதைச் சரிசெய்யும் முயற்சியின்போது பிரிட்டனின் 'ராயல் ஜார்ஜ்' கப்பற்படையைச் சேர்ந்த கப்பல், 900 மாலுமிகளுடன் மூழ்கியது.

1825 முதாம் பெட்தொவின் கீழ், பிரேசில் நாட்டின் சுதந்திரத்திற்கு, போர்ச்சுகல் அங்கீகாரம் அளித்தது.

1842 முதலாம் ஒப்பியப் போரை முடிவிற்குக் கொண்டு வந்த, நான்கிங் ஒப்பந்தம் கையெழுத்தானது. இதன்படி, ஹாங்காங் தீவை, பிரிட்டனிடம் சீனா ஒப்படைத்தது.

1871 பிரான்சின் 14வது ஜனாதிபதியாக 1932 முதல் 40 வரை பதவி வகித்த ஆல்பர்ட் லெப்ருன் பிறந்தார். மூன்றாவது குடியரசின் கடைசி ஜனாதிபதியாக இருந்த அவர், 1940ம் ஆண்டு முதலாம் உலகப் போரின்போது, மார்ஷல் பிடெய்ன் என்பவரிடம் தனது அதிகாரங்களை ஒப்படைத்தார்.

1882 ஆங்கில மண்ணில் நடந்த கிரிக்கெட் போட்டியில் ஆஸ்திரேலியாவிடம், இங்கிலாந்து தோற்றது. இந் நிகழ்ச்சியை 'ஸ்போர்டிங் டைம்ஸ்' என்ற பத்திரிகை, பிரித்தானிய கிரிக்கெட் செத்துவிட்டதாகவும், அதன் அஸ்தி ஆஸ்திரேலியாவிற்கு பேழையில் எடுத்துச் செல்லப்படும் என்றும் இரங்கல் செய்தியில் கிண்டலாக வெளியிட்டு இருந்தது. அதனைத் தொடர்ந்து இவ்விரு நாடுகளுக்கிடையே நடக்கும் போட்டிகள், இந்த அஸ்திக்காகவே நடத்தப்பட்டன. ஜெர்மனியைச் சேர்ந்த டெய்ம்லர் கோட்லியெப் என்பவரால் உலகின் முதல் மோட்டார் சைக்கிளுக்கான உரிமம் பதிவு செய்யப்பட்டது.

1916 முதலாம் உலக போரின் போது ஜெர்மன் நாட்டின் முப்படைக்கு தளபதியாக ஜெனரல் ஹிண்டன்பர்க் நியமிக்கப்பட்டார்.

1945 இரண்டாம் உலகப் போரின் முடிவில், ஜப்பான் சரணடைந்ததைத் தொடர்ந்து அமெரிக்கப் படைகள் அங்கு முகாமிட்டன.

1949 சோவியத் யூனியன் தனது முதல் அணுகுண்டை வெடித்துச் சோதனை செய்தது. அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் கனடா அதற்கான ஆதாரம் தங்களிடம் இருப்பதாகக் கூறியதைத் தொடர்ந்து, செப்டம்பர் மாதம் 22ம் திகதி அந்தச் செய்தியை ரஷ்யா ஒப்புக்கொண்டது.

1966 கலிபோர்னியாவின், காண்டில்ஸ்டிக் பூங்காவில், 25,000 ரசிகர்கள் கலந்துகொண்ட நிகழ்ச்சியில் புகழ்பெற்ற பாப் இசைக்குழுவான 'பீட்டில்ஸ்' தனது கடைசி இசை நிகழ்ச்சியை நடத்தியது.

**30** *(30 கி.மு)*

உலகப் பேரழகிகளில் ஒருவராகக் கருதப்பட்ட, எகிப்து நாட்டு மகாராணி கிளியோபாட்ரா, கொடிய விஷப் பாம்பு ஒன்றை தன் மார்பில் கடிக்கவிட்டு, தற்கொலை செய்துகொண்ட நாள்.

1797 ப்ராங்கென்ஸ்டீன் என்ற இரட்டை குணங்கள் கொண்ட மனிதனைப் பற்றி நாவல் எழுதி உலகப் புகழ்பெற்ற ஆங்கில நாவலாசிரியையும், கவிஞர் பெர்ஸி பிஸ்ஸி ஷெல்லியின் மனைவியுமான மேரி ஷெல்லி பிறந்தார்.

1916 ரோமானியா மீது துருக்கி போர் தொடுத்தது.

1918 சோவியத் ரஷ்யாவின் புதிய தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட விளாடிமிர் லெனின் மாஸ்கோவின் தொழிற்சாலை ஒன்றில் பேசிவிட்டு வெளியே வந்தபோது, சமூகச் சீர்திருத்தக் கட்சியைச் சேர்ந்த, பெண் உறுப்பினர்களான ஃபான்யா காப்ளான் மற்றும் அவரது சகோதரி போராவால் சுடப்பட்டு, படுகாயமடைந்தார்.

1928 பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுதலை பெற இந்தியச் சுதந்திரக் கட்சியை ஜவஹார்லால் நேரு நிறுவினார்.

1945 ஜப்பான் சரணடைந்ததை ஏற்றுக்கொள்ள பிரிட்டிஷ் கப்பல்படைத் தளபதி செசில் ஹார்கோர்ட்டின் கீழ் கப்பற்படை விக்டோரியா துறைமுகத்தில் நுழைந்ததையடுத்து, ஹாங்காங் விடுதலை பெற்றது.

1970 பாலஸ்தீனியர்களுக்கும், அரசுக்கும் உறவில் ஏற்பட்ட விரிசலைத் தொடர்ந்து, அம்மானில் இருந்த தீவிரவாதிகள் மீது ஜோர்டான் இராணுவம் தாக்குதல் நடத்தியது.

1981 ஈரான் அதிபர் முகமது அலி ரஜாய் மற்றும் பிரதமர் முகமது ஜாவத் பஹோனார் ஆகிய இருவரும் டெஹ்ரானில் உள்ள பிரதமரின் அலுவலகத்தில் ஏற்பட்ட வெடி குண்டு விபத்தில் கொல்லப்பட்டனர்.

1983 சாலஞ்ஜர் கலத்தில், விண்ணுக்குச் சென்ற ஐந்து பேர்களில் ஒருவராகவும், முதல் ஆபிரிக்க, அமெரிக்காவும் லெப்டினண்ட் கர்னல் குயான் ப்ரூபோர்ட் புகழ்பெற்றார்.

1991 சோவியத் யூனியனிலிருந்து, அசர்பெய்ஜான் சுதந்திரமடைந்தது.

**31**

1876 மூளைக் கோளாறினால் பாதிக்கப்பட்ட சுல்தான் ஐந்தாம் முராத் பதவியிலிருந்து நீக்கப்பட்டு, அவரது சகோதரர் இரண்டாம் அப்துல் ஹமீது துருக்கியின் சுல்தானானார்.

1888 உலகப்புகழ் பெற்ற தொடர் கொலைகாரன் 'ஜாக் தி ரிப்பரின்' முதல் இரையான, பாலி என்றழைக்கப்பட்ட, மேரி ஆன் நிக்கல்சின் சடலம் லண்டன் நகரில் கண்டெடுக்கப்பட்டது.

1907 பிலிப்பைன்ஸ் நாட்டின் அதிபராக 1953 முதல் 57 வரை பதவி வகித்த ராமோன் மக்சஸே பிறந்தார். நோபல் பரிசுக்கு நிகரான மக்சஸே விருது, அவரது பெயரில்தான் நிறுவப்பட்டது.

1920 அமெரிக்காவின் மிச்சிகன் மாகாணத்தில் உள்ள டெட்ராய்ட் நகரிலிருந்து, உலகின் முதல் வானொலி நிகழ்ச்சி ஒலிபரப்பப்பட்டது.

1944 இரண்டாம் உலகப் போரின் கடைசி கட்டத்தில், மக்களின் பெரும் வரவேற்புக்கிடையே, ரஷ்யத் துருப்புக்கள், புகாரெஸ்ட் நகரில் நுழைந்து, அதை ஜெர்மன் படைகளிடமிருந்து மீட்டது.

1957 காமன்வெல்த் நாடுகளின், உறுப்பினராக, சுதந்திரமடைந்த மலேயா தன்னை இணைத்துக்கொண்டது.

1983 படுகொலை செய்யப்பட்ட பிலிப்பைன்ஸ் நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் பெனிக்னோ அகீனோவின் உடல், தலைநகர் மணிலாவில் புதைக்கப்பட்டது.

1986 பின்லாந்து நாட்டின் அதிபராக 1956 முதல் 82 வயதுவரை பதவி வகித்த யுர்ஹோ கெக்கோனென், தனது 85 வயதில் காலமானார்.

1991 உஸ்பெக்கிஸ்தானும், கிர்கிஸ்தானும், சோவியத் யூனியனிலிருந்து பிரிந்து, சுதந்திர நாடாக தங்களை அறிவித்துக்கொண்டன.

1994 ரஷ்ய அதிபர் போரிஸ் எல்ட்சின் மற்றும் ஜெர்மானிய அதிபர் ஹெல்முட்கோல் ஆகியோரின் முன்னிலையில் நடைபெற்ற பிரியுபசார விழாவில் 50 ஆண்டுகளாக ஜெர்மன் மண்ணில் முகாமிட்டிருந்த ரஷ்யப் படைகள் வெளியேறின.

1997 பிரிட்டிஷ் இளவரசி டயானாவும், அவரது காதலன் டோடி அல்ஃபயத்தும், பாரிஸ் நகரில் நடந்த கார் விபத்தில் மரணமடைந்தனர்.

**01 செப்டெம்பர்**

1159 போப்பாண்டவர் நாலாம் ஏட்ரியன் இறந்தார். 1154ம் ஆண்டு போப்பாக தேர்வான இவர்தான் அப்பதவி வந்த ஒரே ஆங்கிலேயர் என்பது குறிப்பிடத்தக்கது. நிக்கோல்ஸ் ப்ரேக்ஸ்பியர் என்பது இவரது இயற்பெயர்.

1715 ஐந்தாவது வயதிலிருந்து அரசாட்சி புரிந்து, சூரிய மன்னன் என்று அழைக்கப்பட்ட பிரான்ஸ் மன்னன் பதினாலாம் லூயிஸ் மரணமடைந்தார்.

1864 அமெரிக்க உள்நாட்டுப்போரில், ஜெனரல் ஹீடின் தலைமையில் கீழ் இயங்கிய பிரிட்டிஷ் படைகள், அட்லாண்டா நகரைவிட்டு வெளியேற ஜெனரல் ஷெர்மனின் கீழ் புதிய படை, மறுநாள் நகரை ஆக்ரமித்தது.

1875 காட்டு மனிதன் டார்ஜான் புத்தகங்கள் எழுதிய, உலகப்புகழ்பெற்ற நாவலாசிரியர் எட்கர் ரைஸ் பர்ரோஸ் அமெரிக்காவில் பிறந்தார்.

1916 முதல் உலகப்போரில், ரோமானிய மீது பல்கேரியா போர் தொடுத்தது.

1923 ஜப்பானில் ஏற்பட்ட பெரும் பூகம்பத்தில், 1,42,000 பேர் கொல்லப்பட்டு, 25 லட்சம் பேர் இருப்பிடத்தை இழந்தனர்.

1939 இரண்டாம் உலகப் போரின் துவக்கத்தில் ஜெர்மனி, போலந்து நாட்டை ஆக்ரமித்தது.

1946 இங்கிலாந்தில் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்து வந்த தங்கள் மன்னன் இரண்டாம் ஜார்ஜை மீண்டும் அரசாள அழைத்து கிரேக்க மக்கள் வாக்களித்தனர்.

1969 இராணுவப் புரட்சிமூலம், லிபிய அரசு நீக்கப்பட்டு, தளபதி முயம்மார் கடாஃபியின் தலைமையில் லிபியஅராபிய குடியரசு ஆட்சி நிறுவப்பட்டது.

1982 போலந்து நாட்டின் முன்னாள் தலைவர் விளாடிஸ்லா கோமுல்கா தனது 77 வயதில் காலமானார்.

1999 பனாமாவின் முதல் பெண் அதிபராக, மிரேயா மொஸ்காசோ நியமிக்கப்பட்டார்.

## ஸ்பானியாவின்...

*(29ம் பக்கத் தொடர்ச்சி)*

அவருடைய விண்ணப்பம் ஏற்கப்படவே இல்லை. 1547 ஆம் ஆண்டில் ஸ்பெயினிலுள்ள செவில் அருகே கோர்ட்டே காலமானபோது, அவர் செல்வந்தராக இருந்தபோதிலும், மிகுந்த விரக்தி கொண்டவராகவே இறந்தார். மெக்சிகோவில் அவருக்குச் சொந்தமாக இருந்த பெரிய பண்ணைச் சொத்தினை அவருடைய மகன் மரபுரிமையாகப் பெற்றார்.

கோர்ட்டே மிகவும் பேராசை கொண்டவராகவும், புகழார்வம் மிக்கவராகவும் இருந்தார் என்பது தெளிவு. கோர்ட்டேக்கு மிக நெருக்கமாக இருந்தவரும், அவரை வியந்து பாராட்டுபவருமான ஒருவர், அவரை 'ஈவிரக்கமற்றவர்; இறுமாப்புக் கொண்டவர், பொல்லாங்கு செய்பவர்; வலுச்சண்டை பிடிப்பவர்' என்று வருணித்துள்ளார். அதே சமயம், கோர்ட்டே போற்றத்தக்க பல பண்புகளையும் கொண்டிருந்தார். அவர் துணிச்சல் மிகுந்தவர்; அஞ்சா நெஞ்சம் வாய்த்தவர்; அறிவாற்றல் நிரம்பியவர்; அவர் பொதுவாக எப்போதும் முக மலர்ச்சியுடன் இருந்தார். அவர் உறுதி வாய்ந்த இராணுவத் தலைவராக விளங்கிய போதிலும், அவர் வேண்டுமென்றே கொடுரமாக நடந்துகொள்ளவில்லை. சிவப்பிந்தியர்கள் அனைவரின் கடும் வெறுப்புக்குள்ளான பிசாரோவைப் போலன்றி, கோர்ட்டே ஏராளமான சிவப்பிந்தியர்களுடன் நட்புறவு கொண்டிருந்தார். அவர்கள் மீது கடுமையாக ஆதிக்கம் செலுத்த இவர் முயலவில்லை. கோர்ட்டே அழகிய தோற்றமுடையவராகவும், கவர்ச்சி மிக்கவராகவும் விளங்கினார். அவர் எப்போதும் பெண்களைக் கவரும் ஆணழகராகவே திகழ்ந்தார்.

கோர்ட்டே தமது உயிலில், சிவப்பிந்தியர்கள் அடிமைகளாகச் சொந்தம் கொண்டிருப்பது அறநெறிப்படி சரியானதுதானா என்பது தமக்கு உறுதியாகத் தெரியவில்லை எனக் குறிப்பிட்டிருந்தார். அடிமை முறை அவருடைய மனத்தை உறுத்தியிருக்க வேண்டும். எனவே இது குறித்து கவனமாகச் சிந்தித்துப் பார்க்கும்படி அவர் தம் மகனிடம் கேட்டுக்கொண்டார். அவருடைய காலத்தில் அவரது இந்தச் செயல் அபூர்வமானது எனலாம். பிரான்சிஸ்கோ பிசாரோ (அல்லது கிறிஸ்டோபர் கொலம்பஸ்) இவ்வாறு சிந்தித்திருப்பார்கள் என நினைத்துக்கூடப் பார்க்க முடியாது. மொத்தத்தில், ஸ்பானிய வெற்றி வீரர்கள் அனைவரிலும் கோர்ட்டே தான் மிக்க பண்பு நலம் வாய்ந்தவராகத் தோன்றுகிறார்.

# புத்திசிகாமணி பதில்கள்

★ புத்திசிகாமணி அவர்களே! தமிழீழ விடுதலைப்புலிகள் இன்னும் ஏன் யாழ்ப்பாணம் மீது தாக்குதல் நடத்தாமல் இருக்கிறார்கள்? அவர்கள் பொறுமையாய் இருப்பதற்கு காரணம் என்ன?

*B. Theepan- Clichy. France.*

❣ உங்களின் ஆதங்கம் புரிகிறது. ஆனால் போர்க்கள முடிவுகளை எடுப்பதென்பது வெறும் உணர்ச்சிகள் சம்பந்தப்பட்ட விடயமல்ல நண்பரே! ஆனாலும் 'யாழ் மண் நிச்சயம் வீழும்' புலிகளே அறிவித்துள்ளார்களே. பொறுத்திருப்பீராக.

★ பொதுசன ஐக்கிய முன்னணி அரசும் ஐக்கிய தேசியக் கட்சியும் 'தேசிய நல்லிணக்க அரசு' ஒன்றினை அமைக்கும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளது பற்றி....?

*க. கல்யாணி– பலெர்மோ, இத்தாலி.*

❣ சிறீலங்கா அரசுக்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலை இப்படியானதொரு சூழ்நிலையை தோற்றுவித்துள்ளது. அத்துடன் இரு பெரும் கட்சிகளினதும் இணக்கப்பாட்டிற்கான நெருக்குதலை அமெரிக்காவும் ஏற்படுத்தியுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் ஜே.வி.பியின் வளர்ச்சியையும், தேசிய அரசியலில் அதன் சக்தியையும் தடுக்க வேண்டிய நிலையில் அமெரிக்கா இருக்கிறது. எது எப்படியோ இறுக்கமான மனங்கள் நல்லிணக்க அரசமைக்க இணங்கிக்கொண்டாலும் தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்க்க சிங்களப் பேரினவாதச் சக்திகள் இணங்கிக்கொள்ளுமா என்பது கேள்விக்குறிதான்.

**மடுவுக்குச் சென்ற சிங்கள மக்கள் பலர் அங்கிருந்த மாவீரர் இல்லத்திற்குச் சென்று விளக்கேற்றி அவர்களுக்கு மரியாதை செலுத்தியுள்ளார்களாமே?**

★ தேசிய நல்லிணக்க அரசு– நன்னடத்தை அரசு இரண்டுக்கும் உள்ள வேறுபாடு என்ன?

*க. ரங்கன்– சூரிச், சுவிஸ்.*

❣ பல கட்சிகளும் ஒன்றிணைந்து தமக்குள் ஒரு இணக்கத்தை ஏற்படுத்தி ஒரு அரசாங்கத்தை ஏற்படுத்திக் கொள்வதை 'தேசிய நல்லிணக்க அரசு' என்று கூறலாம். அரசுக்குச் சில நிபந்தனைகளை விதித்து குறிப்பிட்ட காலத்திற்கு அரசை ஆட்சி நடாத்த அனுமதிப்பதை 'நன்னடத்தை அரசு' என்று கொள்ளலாம். ஜே.வி.பி. 'நன்னடத்தை அரசு' பற்றியே அரசுக்கு ஆலோசனை வழங்கியிருந்தது.

★ அம்பாறை மத்திய முகாம் பொலிஸ் நிலையத் தாக்குதலை, 4 வருடங்களுக்கு முன்பு அங்கு கடமை புரிந்த பொலிசாரினால் பாலியல் படுவதைக்கு உள்ளாக்கப்பட்டுக் கொல்லப்பட்ட கோணேஸ்வரியின் நினைவாக நடாத்தியதாக புலிகள் அறிவித்துள்ளது பற்றி....?

சி. கல்யாணி– ஈஸ்ராம், லண்டன்.

❣ அரச படைகளின், தமிழ் மக்களுக்கெதிரான அட்டூழியங்களுக்கு எந்தவொரு சிங்கள அரசுமே நீதியான தண்டனை வழங்கியதில்லை. அந்த வகையில் புலிகளின் இந்த அறிவிப்பு படையினருக்கு அதிர்ச்சியான ஒரு எச்சரிக்கை என்றே கொள்ளலாம். 3 பிள்ளைகளின் தாயான கோணேஸ்வரி, அவரது கணவன் பிள்ளைகளுக்கு முன்பாகவே மிகக் கொடூரமாக பாலியல் படுவதைக்கு உள்ளாக்கப்பட்ட பின்னர் அவரது பெண்ணுறுப்பில் கிரனைட் வைத்து மிருகத்தனமாக, மனித குலம் வெட்கித் தலைகுனியும் வகையில் மத்திய முகாம் பொலிஸ் அதிரடிப்படையினர் சிலரால் படுகொலை செய்யப்பட்டார். அவர் கொல்லப்பட்ட அதே தினம் நடாத்தப்பட்ட மத்திய முகாம் தாக்குதலில் புலிகளின் மகளிர் படையணியே முக்கிய பங்காற்றியது என்பதும் குறிப்பிடத்தக்கது.

★ புலிகளின் எந்தவொரு தாக்குதலையும் விழுந்தடித்து கண்டனம் செய்ய முன்வரும் சர்வதேச நாடுகள் பலவும், சிறீலங்கா அரசு தமிழர்களைக் கொன்று குவிக்க நச்சு இரசாயன ஆயுதங்களை வாங்கிக் குவித்திருப்பது பற்றி வாய் திறக்கவில்லையே, என்ன காரணம்?

*க. சுந்தரம்– டொட்முன்ட், ஜேர்மனி.*

❣ இலங்கையின் வடகிழக்கில் வாழும் தமிழர்கள் எல்லாம் இந்த சர்வதேச நாடுகளுக்கு மனிதர்களாகவே தெரிவதில்லை. ஆனால் கட்டுநாயக்கா விமானப்படை தளத் தாக்குதலின்பின் பல நாடுகளும் விழித்துக்கொண்டுள்ளது. புலிகளின் பலத்தின் வெளிப்பாடு எதிர்காலத்தில் சர்வதேசத்தின் பார்வையில் சில மாற்றங்களை கொண்டுவர வாய்ப்புண்டு.

★ மடுவுக்குச் சென்ற சிங்கள மக்கள் பலர் அங்கிருந்த மாவீரர் இல்லத்திற்குச் சென்று விளக்கேற்றி அவர்களுக்கு மரியாதை செலுத்தியுள்ளார்களாமே?

*தி. திவ்யா– ஒஸ்லோ, நோர்வே.*

❣ பேரினவாதக் கட்சிகளால் தமிழ் மக்கள் மட்டுமல்ல சிங்கள மக்களும் அடக்கி ஒடுக்கப்பட்டுக்கொண்டுதான் இருக்கிறார்கள். தமிழீழ விடிவில்தான் சிங்கள மக்களின் விடிவும் சாத்தியமாகும். அந்த நிதர்சனத்தின் தரிசன நிகழ்வாகவே இதனை நாம் கொள்ள முடியும். சிங்கள மக்களின் விடிவுக்குமான அத்திவாரக் கற்களாக மாவீர்களை நாம் பார்க்க முடியும்.

★ ஒரு குடும்பம் வறுமையில் உள்ளது என்று வைத்துக் கொள்வோம். அந்தக் குடும்பத்தை ஏன் 'கஸ்டப்பட்ட குடும்பம்' என்று இறந்தகாலத்தில் சொல்கிறோம். 'கஸ்டப்படுகின்ற குடும்பம்' என்று நிகழ்காலத்தில் சொல்வதில்லை. விளக்குவீர்களா?

*இ.திலீபன்– பாரிஸ், பிரான்ஸ்.*

❣ இலக்கணத் தமிழும் பேச்சுவழக்குத் தமிழும் வேறுபட்டவை. பெரும்பாலான பேச்சு வழக்குச் சொற்களை இலக்கணம் மீறியே நாம் பாவிக்கிறோம். அந்த வகையிலேயே 'கஸ்டப்பட்ட' என்ற சொல்லை நோக்க முடியும். 'கஸ்ரப்படுகிற' என்றும் அநேகமாக பாவிக்கப்படுவதுண்டு.

★ தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும் அதை வழிநடத்திச் செல்லும் விடுதலைப்புலிகளுக்கும் எதிராக கொழும்பிலிருந்து வெளிவரும் தினகரன் பத்திரிகை தொடர்ச்சியாக அவதூறுப் பொய்ச் செய்திகளை வெளியிட்டு வருவது பற்றி....?

*த. தர்மராஜ்–சென்ரனிஸ், பிரான்ஸ்.*

❣ தமிழர் போராட்டத்திற்கு எதிரான விரோதச் சக்திகளின் சரணாலயமே ஏரிக்கரைப் பத்திரிகையான தினகரன். பேரினவாத அரசுகளுக்குப் பணிசெய்து கிடக்கும் 'தினகரனின் அரசியல்' ஈழத்தமிழ் மக்களால் எப்போதோ நிராகரிக்கப்பட்டுவிட்டது.

**உங்கள் கேள்விகளை,**
புத்திசிகாமணி பதில்கள்
**CHEZ EELAMURASU**
**22, Rue Perdonnet, 75010 Paris, France.**
அல்லது **E.Mail-eelamurasu@noos.fr**
**எனும் முகவரிக்கு அனுப்பவும்.**


## ஐரோப்பா வாழ் தமிழர்களை ஒன்றிணைக்கும் ஏடு

ஐரோப்பிய தமிழர் தகவல்
**களஞ்சியம**

ஐரோப்பா வாழ் தமிழர்களுக்கு பயன்தரக்கூடிய தகவல்களை உள்ளடக்கிய வழிகாட்டி நூல்

**இது ஓர் ஈழமுரசு வெளியீடு**

2002ல் வெளிவர இருக்கும் இத் தகவல் களஞ்சியமானது ஐரோப்பா வாழ் தமிழ் மக்களை நாடு ரீதியாக, அவர்களின் விபரங்கள், மற்றும் முக்கிய விடயங்களை உள்ளடக்கியதாக வெளிவரவுள்ளது. தங்களின் விபரங்களை விளம்பரமாகவோ அல்லது தகவல்களாகவோ வெளியிட விரும்பின் 15.09.2001 இற்கு முன்னர் எமக்கு அனுப்பி வைக்கவும். அஞ்சல் உறையின் மேல் இடதுபக்க மூலையில் 'தகவல் களஞ்சியம்' என்று குறிப்பிட்டு ஈழமுரசின் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

கறுப்பு

| அளவு | பெறுமதி Euro | Franc |
|---|---|---|
| 27 x 18.4 | 762.31 | 5000 |
| 27 x 9 | 457.39 | 3000 |
| 18.4 x 13.4 | 457.39 | 3000 |
| 18.4 x 8.6 | 304.92 | 2000 |
| 13.4 x 9 | 243.94 | 1600 |
| 9 x 8.7 | 152.46 | 1000 |
| 9 x 6.6 | 121.97 | 800 |
| 18.4 x 3.1 | 121.97 | 800 |
| 6.5 x 4.4 | 76.23 | 500 |
| 9 x 3.1 | 76.23 | 500 |
| 4.4 x 3.1 | 53.36 | 350 |

வர்ணம்

| அளவு | பெறுமதி Euro | Franc |
|---|---|---|
| 27 x 18.4 | 1524.62 | 10000 |
| 27 x 9 | 914.78 | 6000 |
| 18.4 x 13.4 | 914.78 | 6000 |
| 18.4 x 8.6 | 609.84 | 4000 |
| 13.4 x 9 | 487.88 | 3200 |
| 9 x 8.7 | 304.92 | 2000 |
| 9 x 6.6 | 243.94 | 1600 |
| 18.4 x 3.1 | 243.94 | 1600 |
| 6.5 x 4.4 | 152.46 | 1000 |
| 9 x 3.1 | 152.46 | 1000 |
| 4.4 x 3.1 | 106.72 | 700 |

விளம்பரம் தொடர்பான ஏனைய விபரங்களுக்கும், ஆக்கபூர்வமான ஆலோசனைகளுக்கும் தொடர்புகொள்ளவும்:

**EELAMURASU**
22, Rue Perdonnet, 75010 Paris, FRANCE.
Tél: 00 33 (1) 40 37 63 63
Fax: 00 33 (1) 40 37 64 64
E.Mail-kalangiam@worldonline.fr

களஞ்சியம

தாங்கள் தெரிவு செய்யும் விளம்பர அளவு மற்றும் விபரங்களை பூர்த்தி செய்து எமக்கு அனுப்பிவைக்கவும்.

பெயர்: ..............................
முகவரி: ..............................
..............................
..............................
தொலைபேசி: ..............................
தொலை நகல்: ..............................
கைத்தொலைபேசி: ..............................
மின்னஞ்சல் (E.mail): ..............................

தாங்கள் தெரிவு செய்யும் அளவு
தங்கள் தெரிவின் விபரம்
கறுப்பு/மஞ்சள்
வர்ணம்

# எங்கள் கவியின் 4வது ஆண்டு நினைவு



திதி: 20.08.2001

## செல்வி கவிதா சின்னையா

அன்னை மடியில்:
16
*
12
*
1980

ஆண்டவன் அடியில்:
02
*
09
*
1997

**கள்ளமில்லா உள்ளத்தில்**
**எம்மையெல்லாம் கொள்ளை கொண்ட**
**எங்கள் இதய தாரகையே!**
**மார்கழியில் பூத்தவள் நீ**
**மல்லிகையாய் மணம் வீசி மிளிர்ந்தாய்.**
**காசினியில் நீ வாழ்ந்த காலமோ சொற்பம்.**
**மாலைப் பொழுதில் மின்னாமல் முழங்காமல்**
**விழுந்ததோர் பேரிடி!!!**
**காலம் பிந்தினாலும்**
**கார்த்திகை மலர்போல் நீ!**
**மீண்டும் எம்மிடம் மலர்வாய்.**
**நிறைந்த கனவுகளுடன்**
**உங்கள் வருகையைப் பார்த்திருக்கும்**
**உந்தன் அன்புறவுகள்.**

அப்பா அம்மா: *சின்னையா, சரஸ்வதி*
அண்ணாமார்: *மாறன், குமார்*
அக்காமார்: *மலர், சாந்தம், செல்லம்*
மைத்துனர்மார்கள்: *நவநீதன், ரூபன், தெய்வேந்திரன்*
மைத்துனிமார்கள்: *கல்யாணி, சர்மிளா*
பெறாமக்கள்: *திவாகர், சிவன்யா, பானுயா*
*கயோல் (ஓவியா) ஆதவன்*

*தகவல்:*
*சின்னையா, சரஸ்வதி*
*மாறன், குமார்*
*(சுவிஸ்)*

Pub.Sw.

# எல்லாமே போயிற்று போ!

**காலத்தைப் பதிவுசெய்து உமாயோன் எழுதுவது**

**கார்களில் ஏறி அவர்கள் வந்தனர்.**
**கால்நடையாக நாங்கள் வந்தோம்**

இதுவே உலகம். இதுவே வாழ்வு– இதிலேதான் எங்கள் இருப்பு. அழுதாலும், புரண்டாலும், அரற்றி ஓய்ந்தாலும், ஒரு துரும்பு தானும் அசைக்கமுடியாத நிலை எங்களது ஊரை, உலகை இந்த வாழ்வை, அதன் வளத்தை, யாவற்றையும் கண்கொண்டு பார்க்கிறோம். நிகழ்வன, செயல்புரிவன, எவற்றையும் உணர்கிறோம். யாவும் எமக்குச் சொல்லும் சேதி அதுதான். இது இருவேறு உலகம். இரு உலகங்களுக்குமிடையே எந்த ஒட்டுமில்லை; உறவுமில்லை– ஒரு ஒட்ட உறவாய், இயல்பில்லாத ஒட்டுறவாய் ஆகிவிட்ட இந்த உலகங்கள் ஒட்டுமில்லா, உறவுமில்லா இந்த இரு உலகங்களுக்குமிடையில் எங்ஙனம் சீவிப்பது. எங்ஙனம் எம்மக்களை நாம் மனிதராக வளர்ப்பது?

மானுடம் மகத்துவமானது– வாழ்வு வளம் மிகுந்தது– அப்படித்தான் நம்பினோம். அப்படி நம்புவதில்தான் ஆறுதல் கொண்டோம். மானுடம் சுடரும் விடுதலைக்காக நம்மால் ஆனதைச் செய்வோம், ஆவன செய்வோம் என்று உழைத்திருந்தோம். களைத்திருந்தோம்– மானுட விடுதலை கிட்டியதே என்று இறுமாந்திருந்தோம். வாழ்வு நம் வசப்பட்டதே என்று வியந்திருந்தோம். எல்லாமே பொய்யாய், பழங்கதையாய் புகைவினையாய் ஆனதுவோ? மெய்யாலுமே மேதி வியக்கும் வண்ணம் வரலாறு ஒன்றும் நிகழவில்லையோ?

**போனதெல்லாம் கனவினைப்போல்**
**புதைத்தழிந்தே போனதனால்**
**நானும் ஓர் கனவோ– இந்த**
**ஞாலமும் பொய்தானோ ?**

நானும் ஓர் கனவாய், ஞாலமும் பொய்யாய் பாரதிக்கு நிகழ்ந்த காரணம் என்ன? பாரதியின் காலத்திலேயே இருவேறு உலகங்கள் இருந்திருக்கிறதா? இருந்திருக்கலாம். ஆனால் இவ்வளவு வலிமையாய், வாழ்வை வதக்குவதாய் ஆயிருக்காது.

எப்படியோ இவ்வுலகில் எல்லோரும்போல் இருந்துவிடத்தான் ஆசை இருக்கிறது. – அதுதான் சரியாகவும் தெரிகிறது– சாதாரண வாழ்வு போல் உண்டு, உடுத்து, உறங்கிச் சீவிக்கத்தான் ஆசை வருகிறது. அப்படி ஆசைப்படுவது பாவமும் அல்ல – ஆனால் வாழ்வு அத்தனை வசதியாய் இல்லை– வலியதாய் எதிர்கொள்கிறது.

**எதனையும் எதிர்கொள்**
**முகம் திருப்பாதே**
**மனம் சலிக்காதே**

சொல்லச் சுலபமாய் இருக்கிறது. சுகமாய் இருக்கிறது. ஆனால் அப்படி ஆய்விடமுடியவில்லை. வாழ்வு விரண்டு, வதைபாடு தந்து, வீழ்த்திவிடத் துடிக்கிறது. எதையும் எதிர்கொள்ள முடியவில்லை; எதிர்ப்பில் முகம் கொள்ள முடியவில்லை. வெற்றியைத்தவிர வேறெல்லாம் கிடைக்கிறது. இருவேறு உலகங்களுக்கிடையே இருந்து இடர்ப்படின் இதுதான் நிகழும். வாழ்வு வரண்ட பாலையாய் ஆகும். இலை இல்லா மரமாய், இனிப் பூக்காத செடியாய், வாழ்வு வலு விழந்து போய் நிற்கும். இருவேறு உலகம் என்கிறோம். இதில் இருந்தால் கடினம் என்கிறோம். நம் மண்ணின் மணம் விட்டு, மரத்தின் நிழல்விட்டு, மலரின் வாசம் விட்டு, உறவின் உன்னதம் விட்டு, உணர்வின் உயிர்ப்பு விட்டு, உயிரின் இருப்புவிட்டு ஓடி வந்தோம், ஓடோடி வந்தோம். இது எம் மண் அல்ல– எனினும் இங்குள்ள மண்ணைக்கூட எம்மால் காணமுடியவில்லை. கொங்கிறீற்றும், சீமேந்தும், தாரும், கல்லும், காரம் பெற்றுதாம் காணக்கிடைக்கின்றன. நிழல் தரும் மரங்கள் இல்லை, அட நிழல் தருகிறதே என நினைத்து முடிப்பதற்கிடையில் மலர் சொரிந்து, இலை உதிர்ந்து பட்டுப்போன மரமாய் பார்வைக்குத் தெரிகின்றது. நிழல் தருவன நீண்ட கட்டிடங்கள்தாம். அது தரும் உணர்வு எம் உலகிற்கு ஒவ்வாதன. மலருக்கு இங்கு மணம் இல்லை. கடதாசிப் பூவாய், காகித இதழ் பிளாஸ்ரிக் தண்டாய் இருப்பன மணம்தருமா? மல்லிகை, முல்லை, இங்கு பூக்குமா? இங்கு வெடுக்கு நாத்தம் வரும் வேறென்ன வரும்?

உறவின் உன்னதம், உணர்வின் உயிர்ப்பு, உயிரின் இருப்பு இங்கு ஏது? ஒரு கதை எனக்கொரு அத்தை இருந்தார். நேசமான அத்தை மிகச் சிறுவயதில் புல்லில் இருந்து விரிந்த அந்தக் கொத்துகளை புடுங்கித்திரட்டி, சொகுசாகத் தடவுவார். கூச்சமாக இருக்கும், ஆசையாக இருக்கும், கொஞ்சம் வளர, பின்னேரம் கூப்பிட்டு படிப்பித்தார். அன்பென்றால் கொள்ளை அன்பு, காலம் போயிற்று– கடல் கடந்து புலம் பெயர்ந்தனர். இங்கு புகுந்தனர். புகுந்தும் கனகாலம் ஆயிற்று– ஒருநாள் அன்புமிகுந்து ஆசை மீதூர அவர்தம் இல்லம் புகுந்தேன். ஆங்கிலம் அங்கு அரசோச்சியது– அவர்தம் மழலையர் ஆங்கில மழலை பேசினர். அத்தை வந்தார்– 'ஆ, நீயா எப்பவந்தாய்?' என்றார்– 'எப்படி இருக்கிறாய்?' என்றார்– பதில் சொல்லமுன்னம் போய் பழச்சாறு கொண்டுவந்தார். 'எனக்குக் கொஞ்ச வேலை இருக்கிறது பிறகு சந்திப்பம்' என்றார். இன்னோர் உலகம் எனக்குத் தெரிந்தது.

**புன்னகைக்கு பொருள் இல்லை**
**பொழுதுக்கு ஒளி இல்லை.**

அதுவே அந்த உலகம். அது எங்கள் மொழியில் சொல்வதானால் 'யாவார உலகம்' அந்த உலகில் வாழ எங்களுக்கு இடம் இல்லை. என்பதிலும் பார்க்க எங்களால் இயலாது. புன்னகைக்கு பொருள் உள்ள உலகமே எங்கள் உலகம். பொழுதுக்கு ஒளி உள்ள உலகமே எங்கள் உலகம். யாவார உலகில் புன்னகை பொருள் இல்லை. ஆளியை அழுத்தினால் சட்டென எரியுமே மின்குமிழ். அப்படி கண்டவுடன் 'ஹாய்' சொல்லி, சட்டென புன்னகை மின்னல், சட்டென மறைதல்– சம்பிரதாயமான குசலம். சடங்கு மயமான குலாவல். உள்ளத்தால் அல்ல; உதட்டால் சிரிப்பு. மனதால் அல்ல; வாயால் வாழ்த்து. எதுவும் கிடைக்கும்வரை எல்லா வகைக் கொடி, குடை, ஆலவட்டம் பிடித்தலும், தீப்பந்தம் ஏற்றலும், கிடைத்தவுடன் 'அம்போ' எனக் கைவிட்டு விட்டு தங்கள் உலகில் சஞ்சரித்தலும் என ஆகிப்போன யாவார உலகம். இந்த உலகில் எவ்வாறு வாழ்வது? எங்ஙனம் சீவிப்பது, நடிக்கவும், வேஷமிடவும், பொய்பேசவும், பொய்பேசியது தெரிந்தவுடன், அப்படித்தான் செய்வேன் என இறுமாப்புக் கொள்ளவும் நாடகமாடவும், நாவிரிக்கப்பேசி நயவஞ்சகம் செய்யவும், குழி பறிக்கவும், கொன்று போடவும் எது நடந்தாலும் எனக்கென்ன என்று இருக்கவும் தெரிந்திருக்கவேண்டும். இந்த உலகில் வாழ இதுதான் நியதி, இப்படித்தான் அமைப்பு, இவ்வுலகில்

**பாரதியாக வாழ்தலே கடினம்.**
**பாரதியாக எழுதுதல் எங்ஙனம் ?**

திரும்பத்திரும்பச் சொல்லில் துயர்தான். எனினும் சொல்லியாகவேண்டும். இருவேறு உலகில் இருக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம்– ஒரு உலகம் எங்கள் உலகம். ஒரு உலகம் ஒவ்வாத உலகம். ஒவ்வாத உலகில் துயர்களும் சிதைபடலும், வதைபடலுமாய் வாழ்வு கழிகிறது. யாரோடு நோக, யார்க்கெடுத்துரைக்க இந்த உலகில் வாழ்வதைத் தவிர வேறு என்ன வழி இருக்கிறது. இந்த மனிதர்களை நேசிப்பதைத்தவிர, வேறு செயல் என்ன இருக்கிறது? எங்கேயாவது விழுது பற்றி வாழோமா? வேர் பிடித்து உயிர்க்கோமா? விழுது பற்றுவதற்கும், வேர் பிடிப்பதற்கும் சில முயல்வுகள் இருந்தன. தொடர்ந்தன. அன்பையும், பிரியத்தையும் நேசிப்பையும் அள்ளி அள்ளிக் கொட்டிட அது கூட வேண்டாம் என்கிறார்கள். அதனால் என்ன பயன் என்றும் கேட்கிறார்கள். அதனால் ஆய்க்கினைதான் என்கிறார்கள். காசு வரும் வழி என்ன என்று தேடுகிறார்கள். அன்பை அள்ளி அள்ளிக் கொட்டுகிறாயா? வேண்டாம். நேசத்தை காசாக்கித்தா என்று கேட்கிறார்கள். காசு உள்ள இடத்தில் நேசமும் தானாக மலர்கிறது.

**என் நேசம் என்னுள்ளே வாழும்**
**துயர் படலும் வதை படலுமாய் கழிகிறது காலம்.**

இப்படியே அழுவதா? இந்த இருப்பில் வேறு ஏது அர்த்தம்? மானுடம் என்பது மகத்தானது அல்லவா? மேன்மையானதும் அல்லவா? வேருடன், அதன் விழுதுடன், ஊருடன் அன்பின் உறவுடன் வாழ்ந்தோம். அந்தப் பெரும் பேற்றை விட்டு வந்தோம். அந்த மண்ணின் மைந்தரல்லவா நாம். அன்னை பூமியின் அருந்தவப் புதல்வரல்லவா நாம். விதையாய் வீழ்ந்து, நாற்றாய் முளைத்து, மரமாய் அன்னை மண்ணில் எழுந்த எம்மை இந்த மண்ணில், மீண்டும் பதியப் போட்டால் படத்தானே செய்யும். இந்த மண், இப்போ வாழும் மண்ணிற்குரிய குணங்கள் வரத்தானே செய்யும்– மண்ணில் என்ன வளம் உண்டோ அது மரத்தில் தெரியத்தானே செய்யும்? மண் என்ன தன்மையோ அதனை மரம் அடையத்தானே வேண்டும்– எம் மனிதர்க்கு அதுதான் நிகழ்கிறது.

ஆனால் அது மகாமோசமானது. வியாபாரத்தன்மை வாய்ந்தது– நாங்கள்தான் அழிந்து போவோம். எங்களுடன் இது அழிந்து போகாது. அடுத்தடுத்த தலைமுறைகளுக்கும் இது தொற்று கூட வரும். எமது பண்பாடே இந்தப் புத்தியால் ஆளப்படும். நாளைய தலைமுறையின் மகளோ, மைந்தனோ, தனது தாய், தந்தையை கவனியாது விடும்; முதியோர் இல்லம் தள்ளிவிடும்– நம் கற்பனைக்கெட்டாத காரியங்கள் செய்யும் சுயநலம், நடிப்பு, வேஷம், பொய், இவையே பிரதான இயல்பாய் இருக்கும். காசு ஒன்றே குறிக்கோளாக அமையும்.

நான் அஞ்சுகிறேன்– எங்கள் வாழ்வு இப்படியே போய்விடும். போகட்டும். என் புதல்வர்களை இட்டு அஞ்சுகிறேன். வலிய இந்த உலகில் அவர்கள் எப்படி வாழ்வார்களோ என நான் அஞ்சுகிறேன்.

**வலியவர்கள் வாழ்வார்கள்**
**மெலியவர்கள் வீழ்வார்கள்**

அவர்கள் வலியராய் வாழவேண்டும். அதனால் அவர்களுக்குச் சொல்ல ஒன்றுண்டு.

**எதற்கும் சிரி**
**எல்லாவற்றையும் சகி**

இப்படியென்றால் வாழ்ந்திடலாம்; வாழ்வை வென்றிடலாம். ஆயினும் என்ன, உணர்வுள்ளவராய், உண்மை மனிதராய் வாழ்ந்திட முடியாது. அவ்வளவுதானே!

நினைத்துப் பார்க்கிறேன். நீண்டபனை, நெடிதுயர்ந்த தென்னை, வேருக்குள் உறுதி கொண்ட வேம்பு, கருங்கடல், இருவாட்டிமண், விளையும் வயல், மல்லிகை மணம், மாம்பழச்சுவை, 'ஆ'என்ற குரலுக்கு ஓடிவரும் அன்பு உறவுகள், இவற்றுடன் நின்றிருக்கலாம். நீண்ட பனையுடன் நானும் நின்றிருக்கலாம். நின்றால் உணர்வாய், உண்மையாய், வாழ்ந்திருக்கலாம், வாழ்வை வென்றிருக்கலாம். எல்லாமே போயிற்று போ!

**கால்நடையாக நாங்கள் சென்றோம்**

# வெற்றித் திருமகன்

– பேராசிரியர் செவாலியே சுகிர்தராஜ் – [டிகோல் தொடர் - 58]

டிகோல் உண்மையான கத்தோலிக்கக் கிறித்துவர்.

இறைவன் அளித்த ஒரு வாழ்வை, ஒரு மனிதன் [அவன் எவ்வளவு தான் பெரியவன் ஆனாலும்] பறிக்கலாமா? இந்தக் கேள்வி அவரைக் குடைந்தது. போர்க்களத்தில் எதிரியைக் கொல்வதும், ஒரு நாட்டின் தலைவராய் இருந்து கருணை மனுவை நிராகரிப்பதும் இரு வேறுபட்ட நிலைமைகள் என்பதை அவர் உணர்ந்தே இருந்தார். டிகோல் மனசாட்சியுடன், புய்ஷெ சம்பந்தப்பட்ட அனைத்துத் தாள்களையும் படித்தார். சிந்தித்தார்.

புய்ஷெ, மேலெழுந்த வாரியாக பார்த்தபோது, ஒரு துரோகி அல்ல என்று அவருக்குத் தோன்றியது.

'அவர் பிரான்சுக்குப் பணி புரிவதாக நினைத்தார். அவரது திறமை, அவரது குண நலன்கள், அவரது புத்திசாலித் தனம் அனைத்தையும் ஒரு தவறான காரணத்துக்குப் பயன் படுத்தினார். 40தில், ஏறத்தாழ அனைவருமே தவறான வழியில் சென்றனர்.



புய்ஷெவுக்குக் கருணை காட்டலாம்.

ஆனால் 1941இல்? எப்படி இவ்வளவு புத்திசாலியான ஒரு மனிதர், எதிரியுடன் சேர்ந்து, பல தவறான, தாறுமாறான முடிவுகளை எடுத்தார்?

முடியாது. இக்காரணத்துக்காக, அவர் மீது கருணை காட்டமுடியாது.

முறைப்படி, புய்ஷெவின் வழக்கறிஞர்கள், ஜெனரல் டிகோலைச் சந்தித்து, அவருக்காகப் பரிந்து பேசினர்.

டிகோல், அவர்களிடம் தனது காரணங்களை விளக்கி, தனது முடிவை அறிவித்தார். அத்துடன், அவரை நான் மதிக்கிறேன் என்பதையும், அவரது பிள்ளைகளை, தந்தைக்கு மரியாதை அளிப்பவர்களாக வளர்க்க உதவுவேன் என்பதையும் அவரிடம் தெரிவியுங்கள்' என்று கேட்டுக்கொண்டார்.

22.03.44 இல் புய்ஷெ சுட்டுக்கொல்லப்பட்டார். அதற்கு முதல்நாள் இரவு முழுதும், ஜெனரல் டிகோல் கண் உறங்கவில்லை. மறுநாள். புய்ஷெ சுட்டுக்கொல்லப்பட்ட பின்பு, டிகோலுக்குப் பல விவரங்கள் கிடைத்தன.

புய்ஷெ, சுட்டுக்கொல்ல வந்த இராணுவ வீரர் ஒவ்வொருவர் கையையுங் குலுங்கினாராம். அத்துடன், அவரது சாவுக்கு வேறுயாருங் காரணம் இல்லை என்பதைக் குறிக்கும் வகையில், அவரே, வீரர்களைப் பார்த்து: 'சுடுங்கள்' (Feu) என்று கூறினாராம்.

அடுத்த நாள், டிகோல், அவரது நம்பிக்கைக்குரிய ஜோக்ஸ் [Joxe] என்ற உதவியாளரிடம்,

'புய்ஷெவின் கருணை மனுவை, நான் ஏற்றுக்கொண்டிருந்தால், இவரைப் போன்ற பலர், கொடுமைகளைச் செய்தவர்கள், இங்கே வந்து சரண் அடைந்திருப்பார்கள். நமது சிறைகள் நிரம்பி இருக்கும். அவர்கள், நிம்மதியாக, போரின் முடிவில் தங்களது கொடுமைகள் மறக்கப்பட்டிருக்கும் என்று நம்பிக்கை கொண்டு இருந்திருப்பார்கள்' என்று கூறினார்.

அந்தக் காலப் பகுதியில், பிரான்சில், தேச பக்தர்களை மிகக் கடுமையாக நடத்திய பிரஞ்சு துரோகிகளின் தலைவர் டர்னாண்ட் (Darnand) என்பவர் டிகோலுக்கு ஒரு மடல் எழுதி இருந்தார். அந்த மடலில், தனது கடந்த காலத் தவறுகளுக்கு வருந்துவதாகவும், அப் பாவத்தைப் போக்க, போராடும் பிரஞ்சுப் படையணி ஒன்றில் சேர்ந்து போர் புரிய அனுமதி வேண்டி இருந்தார். டிகோல் அந்த மனுவை ஏற்க மறுத்தார். ஒவ்வொருவரும், தங்களது நடவடிக்கைகளுக்குப் பதில் கூறியே ஆகவேண்டும் என்று முடிவெடுத்தார்.

புய்ஷெவைத் தொடர்ந்து, முன்னாள் அமைச்சர்கள் ஃப்லாந்தென், [Flandin) பெய்ருத்தோன் (Peyrouton], 1940 செப்டம்பரில், செனகல் நாட்டின் தலைநகர் டக்காரில் ஜெனரல் டிகோலையும், சுதந்திர பிரஞ்சு இயக்கத்தினரையும் பலத்தால் விரட்டி அடித்த புவாசோன் [Boisson) ஆகிய மூவருங் கைது செய்யப்பட்டனர். இவர்கள் கைது செய்யப்பட்டது அமெரிக்கர் ரூஸ்வெல்ட்டுக்கும், ஆங்கிலேயர் சர்ச்சிலுக்கும் சிறிதும் பிடிக்கவில்லை.

[டிசம்பர் 40 முதல் ஃபெப்ரவரி 41 வரை மார்ஷல் பெட்டெய்னின் வெளித்துறை அமைச்சராகப் பணியாற்றிய Flandin, 2 ஆண்டு சிறைக்குப்பின், 1945இல், 5 ஆண்டுகளுக்கு, ஒரு குடிமகனுக்குரிய உரிமைகளை இழக்கும் தண்டனையைப் பெறுவார்.

ஆகஸ்ட் 40 முதல் ஃபெப்ரவரி 41 வரை, பெட்டெய்னின் உள்துறை அமைச்சராய்ப் பணியாற்றிய Peyrouton, டிசம்பர் 48இல், ஒரு தண்டனையுமின்றி விடுதலை செய்யப்படுவார்.

Boisson, வழக்கு நடக்கும் முன்பே, 1948இல், சிறையில் மரணம் அடைவார்]

நாடு விடுதலை அடைந்த பின்பு, ஜெனரல் டிகோல் துரோகிகள் விவகாரத்தில், மிகவும் நிதானத்துடனும், மனிதத் தன்மையுடனும் நடந்து கொள்வார்.


யாரும் தண்டனையில் இருந்து தப்பக்கூடாது, அதே சமயம், பழி வாங்கும் உணர்வுக்கு இடந் தரலாகாது, நீதி மன்ற உத்தரவின்றி, யாரையுங் கொல்லக் கூடாது என்பது டிகோலின் கொள்கையாக இருந்தது.

ஆனால், கம்புனிஸ்டுகள், இங்கும்–அங்கும் சட்டத்தை மதியாது, பலரைக் கொன்று, வஞ்சம் தீர்ப்பார்கள்.

## ப்ராசாவீல் [Brazzaville] மாநாடு

1960 க்கு முன்பு, ஆஃப்ரிக்கக் கண்டத்தில், இரு நாடுகள் கொங்கோ (Congo) என்ற பெயரில் இருந்தன. இரண்டும் பக்கத்து– பக்கத்து நாடுகள். இந்த இரு நாடுகளிலும் கொங்கோ நதி பாய்ந்தது, பாய்கிறது.

இந்த இருவேறு நாடுகளையும், வேற்றுமைப் படுத்த, ஒன்றை கொங்கோ லெயோபோல்ட் வீல் [Léopoldville] என்றும், மற்றதை, கொங்கோ ப்ராசாவீல் என்றும் உலகம் அழைத்தது.




முதல்நாடு மிகப் பெரிது– நிறைய வளம் நிறைந்தது. அப்போதும், பிறகு 1960 வரையும் பெல்ஜியம் நாட்டின் காலனியாய் இருந்தது. 1960ம் ஆண்டுகளில், சர்வாதிகாரி மொபுட்டு, இந்த நாட்டின் பெயரை ஜெயிர் என்று மாற்றினான்.

இரண்டாவது கொங்கோ, பரப்பளவில் சிறியது, வளத்தில் குறைந்தது.

இது பிரான்சுக்குச் சொந்தமாய் இருந்தது.

1943 அக்டோபரில் ப்ராசாவீலில், பிரான்சின் காலனிகளின் எதிர்காலம் குறித்து, சிந்திக்க ஒரு மாநாட்டைக் கூட்ட வேண்டும் என்று ஜெனரல் டிகோல் முடிவெடுத்தார்.

பிரான்சுக்கும், ஆஃப்ரிக்காவுக்கும் இடையே நீண்ட நாளாகவே தொடர்பு இருந்தது.

துரதிருஷ்ட வசமாக, ஆஃப்ரிக்க மக்கள் முன்னேறி இருக்கவில்லை. பிரான்சு, அதுவரை, தன்னால் இயன்ற உதவிகளை, ஆஃப்ரிக்கக் காலனிகளுக்கு அளித்து வந்தது.


பள்ளிகள் திறக்கப்பட்டன. [போதுமான எண்ணிக்கையில் அல்ல] பிரான்சுக்குச் சொந்தமான, ஆஃப்ரிக்காவின் நடுப்பகுதியில், அன்று 60 இலட்சம் கருப்பு இன ஆப்ரிக்க, மக்கள் வாழ்ந்தனர். இவர்களில் அன்று 321 பேர் மட்டுமே ஆறாம் வகுப்பு வரை படித்திருந்தனர்.

மருத்துவ மனைகள் இருந்தன. ஆஃப்ரிக்க மக்கள் பல கி. மீட்டர்கள் நடந்து, நகரில் இயங்கிய மருத்துவ மனைகளில் சிகிச்சை பெற்றனர். சில பிரஞ்சு மருத்துவர்கள், மிகவும் முயற்சி எடுத்து, அங்கும்– இங்குமாக, காடுகள் மத்தியில் [Brousse] வாழ்ந்த கிராமங்களுக்குச் சென்றும் மக்களைக் குணப்படுத்தினர்.

ஆஃப்ரிக்க மக்கள் சனநாயகம் பற்றியோ, நகராட்சி, கிராம ஆட்சி பற்றியோ ஒன்றும் அறிந்திருக்கவில்லை.

[தொடரும்]

விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு இந்தியாவில் பல்லாயிரக் கணக்கான வகையில் விநாயகர் உருவங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் இருந்து சில...



– 10,008 தேங்காய்கள் கொண்டு உருவாக்கப் பட்ட விநாயகர் உருவச்சிலை

## காட்சிப் பதிவு



– வாஜ்பாய் – முஷாரப் ஆகியோரின் உருவப் பொம்மைகள் விநாயகர் வழிபாட்டில் ஈடுபடுவதாக உருவாக்கப்பட்டுள்ளது.



– எலியை விட்டுவிட்டு டைனோசரில் வலம் வரும் விநாயகர்



– வெண்ணிற விநாயகரை வடிவமைக்கும் கலைஞர்

# ஸ்பானியாவின் சிறந்த வீரர் கோர்டே



மெக்சிகோவை வெற்றி கொண்டவர் ஹெர்னாண்டோ கோர்ட்டே (Hernando Cortes) ஆவார். இவர், 1485ம் ஆண்டில், ஸ்பெயினிலுள்ள மெடெலின் நகரில் பிறந்தார். இவருடைய தந்தை ஒரு குறுங் கோமகன். கோர்ட்டே தம் இளமையில் சலமான்கா பல்கலைக் கழகத்தில் சட்டம் பயின்றார். இவர் தமது 19 ம் வயதில் புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட மேற்கு கோளார்த்தத்தில் பொருளீட்டும் நோக்குடன் ஸ்பெயினிலிருந்து புறப்பட்டார். 1504ம் ஆண்டில் ஹிஸ்பானியோலா என்ற தீவைச் சென்றடைந்தார். அங்கு பல ஆண்டுகள் ஒரு குடியானவர் சீமானாகவும், உள்ளூர் டான்ஜூவானாகவும் விளங்கினார். 1511ம் ஆண்டில் கியூபா மீது ஸ்பானியர் மேற்கொண்ட படையெடுப்பில் இவரும் பங்கு கொண்டார். இந்த வீரதீரச் செயலுக்குப் பிறகு, கியூபாவுக்குப் பேரரசின் ஆளுநரான டீகோ வெலாஸ் கியூவின் மைத்துனியை இவர் திருமணம்

## உலக வரலாற்றில் பதிவானவர்கள்

செய்துகொண்டார். அத்துடன், இவர் சாண்டியாகோவின் மேயராகவும் நியமிக்கப்பட்டார்.

1518ம் ஆண்டில் மெக்சிக்கோவுக்கு நாடாய்வுக்காக அனுப்பப்பட்ட குழுவின் தலைவராக இவரை லெவாஸ்கியூ தேர்ந்தெடுத்தார். ஆனால், கோர்ட்டேயின் பேராசையை அறிந்துகொண்ட ஆளுநர், விரைவிலேயே தம் ஆணையை நீக்கம் செய்தார். ஆனால், அதற்குள்ளேயே கோர்ட்டே மெக்சிகோவுக்குப் புறப்பட்டுச் சென்றுவிட்டார். கோர்ட்டே, 1519 ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் 11 கப்பல்களுடனும், 110 மாலுமிகளுடனும், 55 படை வீரர்களுடனும் 10 கனத்த பீரங்கிகளுடனும் பயணமானார். இன்றைய பெராக்ரூஸ் நகரம் இருக்கும் இடத்தில் இந்தக் குழுவினர் பெரிய வெள்ளிக்கிழமையன்று (Good Friday) தரையிறங்கினரர்கள். கோர்ட்டே கடற்கரை அருகிலேயே சிறிது காலம் தங்கியிருந்து மெக்சிக்கோவின் நிலைமை குறித்து தகவல்களைச் சேகரித்து வந்தார். மெக்சிகோவை ஆண்டு வந்த ஆஸ்டெக்குகள் (Aztecs) நாட்டின் உட்பகுதியில் ஒரு பெரிய தலைநகரைக் கொண்டிருக்கின்றனர் என்பதையும், அவர்களிடம் விலையுயர்ந்த உலோகங்கள் ஏராளமாக இருக்கின்றன என்பதையும், அவர்களை, அவர்கள் அடக்கி வைத்திருக்கும் மற்றச் சிவப்பிந்திய மரபினர் வெறுக்கிறார்கள் என்பதையும் இவர் அறிந்து கொண்டார்.

ஆஸ்டெக்குகள் எப்படியும் வெற்றி கொண்டுவிட வேண்டும் எனக் கோர்ட்டே உறுதி பூண்டார். நாட்டின் உட்பகுதிக்குள் படை நடப்புச் செய்து, ஆஸ்டெக் ஆட்சிப் பரப்புகள் மீது படையெடுக்க முடிவு செய்தார். ஆஸ்டெக்குகளில் ஏராளமான எண்ணிக்கையையும் கண்டு இவரது படையினரில் சிலர் அச்சம் கொண்டனர். எனவே, உட்பகுதிக்குள் படை நடப்புச் செய்வதற்கு முன்னதாக தமது குழுவினரின் படகுகள் அனைத்தையும் அழித்துவிடும்படி செய்தார். இதனால், தாம் சொன்னபடி கேட்கவேண்டும் அல்லது சிவப்பிந்தியர்களின் கையால் சாகவேண்டும் என்ற நிலையை அக்குழுவினருக்கு இவர் உருவாக்கினார்.

உட்பகுதிக்குள் படைநடப்பு மேற்கொண்ட ஸ்பானியர்கள், சிவப்பிந்தியர்கள்'டிலாக்ஸ்காளான்ஸ்' (Tlaxcalans) என்ற சுதந்திரமான மரபுக் குழுவினர் பெரிய இராணுவத்தை சில கடுமையான போர்களில் ஸ்பானியர்கள் தோற்கடித்துவிடவே இக்குழுவினர் தாங்கள் கடுமையாக வெறுத்துவந்த ஆஸ்டெக்குகளுக்கு எதிராக ஸ்பானியருடன் கூட்டுச் சேர்ந்துகொண்டனர். கோர்ட்டே, பின்னர் சோலூலாவை நோக்கி முன்னேறினார். அங்கு, ஆஸ்டெக் அரசன் இரண்டாம் மாண்டேசூமா (Montezuma) ஸ்பானியர் மீது திடீர் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருந்தான். ஆனால், சிவப்பிந்தியர்களின் இந்தத் திட்டம் குறித்து முன்னதாகவே தகவல் அறிந்த கோர்ட்டே, முதலிலேயே தமது தாக்குதலைத் தொடங்கி, சோலூலாவில் பல்லாயிரம் சிவப்பிந்தியர்களைப் படுகொலை செய்தார். பின்னர், இவர் தலைநகராகிய டெனோக்டிட்லான் (Tenochitlan) நகரை (இன்றைய மெக்சிகோ நகர்) நோக்கி முன்னேறினார். 1519ம் ஆண்டு நவம்பர் 8ஆம் நாளன்று, அந்நகரில் இவர் எதிர்ப்பின்றி நுழைந்தார். விரைவிலேயே ஆஸ்டெக் அரசன் மாண்டேசூமாவைச் சிறைப்பிடித்து அவனைத் தமது கைப்பாவையாக ஆக்கிக் கொண்டார். இத்துடன் ஸ்பானியரின் வெற்றி பெரும்பாலும் முற்றுப் பெற்று விட்டதாகத் தோன்றுகிறது.

ஆனால், பான்ஃபிலோ டி நார்வேஸ் (Panfilo de Narvaez) என்பவரின் தலைமையில் மற்றொரு ஸ்பானியப் படை, கோர்ட்டேயைக் கைது செய்வதற்கான ஆணைகளுடன், கடற்கரையில் வந்து இறங்கியது. கோர்ட்டே தமது படையினரில் ஒரு பகுதியை டொனோக்டிட்லான் நகரில் நிறுத்திவிட்டு, மற்ற படையினருடன் கடற்கரைக்கு வந்தார். அங்கு, இவர் நார்வேஸ் படையைத் தோற்கடித்து, அவருடைய எஞ்சிய படையினரைத் தம்முடன் சேர்த்துக்கொள்ளும்படி செய்தார். ஆயினும், இவர் டெனோக்டிட்லான் நகருக்குத் திரும்பி வருவதற்குள், அங்கு இவர் பொறுப்பு ஒப்படைத்திருந்த துணை அதிகாரி ஆஸ்டெக்குகளின் எதிர்ப்பை சமாளிக்க முடியாத அளவுக்குத் தூண்டி விட்டிருந்தார். 1520ம் ஆண்டு ஜூன் 10 ஆம் நாளன்று, டெனோக்டிட்லான் நகரில் ஒரு புரட்சி தோன்றியது. ஸ்பானியப் படையினர் கடும் உயிர்ச் சேதங்களுக்குப் பின்னர், டிலாக்ஸ்லாவுக்குப் பின் வாங்கினார். எனினும், அடுத்த மே மாதத்தில் கோர்ட்டே கூடுதல் படைகளை, வரவழைத்து, டெனோக்டிட்லானை முற்றுகையிட்டார். ஆகஸ்ட் 18ம் நாளன்று அந்நகர் வீழ்ச்சியடைந்தது. அதன் பின்பு, மெக்சிகோவின் எல்லையோர மண்டலங்களின் மீதான வெற்றியை வலுப்படுத்துவதற்கு கோர்ட்டே சிறிது காலம் செலவிட நேர்ந்தபோதிலும், மெக்சிக்கோமீது ஸ்பானியர் ஆதிக்கம் பெருமளவிற்குப் பாதுகாப்பாகவே இருந்தது. டெனோக்டிட்லான் நகரம் மீண்டும் நிறுவப்பட்டு, மெக்சிக்கோ நகர் எனப் பெயரிடப்பட்டது. அது ஸ்பெயினின் குடியேற்ற நாடாகிய புதிய ஸ்பெயினின் தலைநகராகவும் ஆகியது.

*உலக வரலாற்றில் கடந்த 2000 ஆண்டுகளுக்கு மேலாக மனித வாழ்வியலில் பல்வேறு மாறுதல்கள் ஏற்படுவதற்குக் காரணமாக இருந்த பிரசித்தி பெற்ற பலரது விபரங்கள் இத் தொடரில் வெளிவருகின்றன. மைக்கேல் ஹெரச் ஹார்ட் எழுதிய 'புதிய வரலாறு படைத்தோரின் வரிசைமுறை 100' என்ற நூல் மணவை முஸ்தபாவால் தமிழில் பதிப்புச் செய்யப் பட்டது. அதில் இருந்து தொகுக்கப்படுகின்றது.*

மிகக் குறைந்த எண்ணிக்கையிலான படையினருடன் கோர்ட்டே தமது படையெடுப்பைத் தொடங்கினார். என்பதைக் கருதுகையில், 50 இலட்சம் மக்களைக்கொண்ட ஒரு பேரரசின் மீது அவர் பெற்ற வெற்றி உண்மையிலேயே ஒரு மகத்தான இராணுவச் சாதனை என்பதில் ஐயமில்லை. பேரளவு எண்ணிக்கையினரை எதிர்த்து ஒரு சிறிய படை பெற்ற வெற்றிக்கு வரலாற்றில் மற்றொரு எடுத்துக்காட்டுக் கூறவேண்டுமானால், அதற்குப் பெருவில் இன்காக்கள் மீது பிரான்சிஸ்கோ பிசாரோ பெற்ற வெற்றியை மட்டுமே கூறலாம். கோர்ட்டே ஏன் இவ்வாறு வெற்றி பெற்றார் என்பது இங்கு ஆராய்வதற்குரியது. இவர் பெற்றிருந்த குதிரைகளும், சுடுபடைக் கலங்களும் இவருடைய வெற்றிக்கு ஒரு முக்கிய காரணம் என்பது உண்மைதான். எனினும் இவரிடம் இருந்த துப்பாக்கிகளும், குதிரைகளும் எண்ணிக்கையில் மிகக் குறைவு. இவர் சந்தித்த எதிரிகளின் மிகப் பெரிய எண்ணிக்கையைச் சமாளிப்பதற்கு அவை போதுமானவை அல்ல. இதற்கு முன்பு இரண்டு முறை ஸ்பானியர், மெக்சிகோ கடற்கரையை அடைந்த போதிலும், ஒரு முறைகூட அவர்கள் அங்கு ஓர் குடியேற்றத்தை ஏற்படுத்துவதிலோ, ஒரு நிரந்தரமான வெற்றி பெறுவதிலோ, வெற்றியடையவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஸ்பானியரின் வெற்றிக்கான கடைசி முக்கிய காரணம் அவர்களுடைய தீவிர சமய உணர்வு ஆகும். கோர்ட்டேயின் படையெடுப்பு மன்னிக்க முடியாத ஓர் ஆக்கிரமிப்பு நடவடிக்கை என்று நமக்குத் தோன்றுகிறது. ஆனால், தமது படையெடுப்பு அறநெறிப்படி நியாயமானது எனக் கோர்ட்டே கருதினார். 'நமது குறிக்கோள் நியாயமானது, நாம் சிலுவைக் கொடியின் கீழ் போரிடுகிறோம். எனவே, நாம் வெற்றியடைவது உறுதி' என்று கோர்ட்டே தம் வீரர்களிடம் கூறி ஊக்குவித்தார். கோர்ட்டே மனமார்ந்த நம்பிக்கையுடனேயே அவர்களின் சமய உணர்வைத் தூண்டிவிட்டார். ஒரு தடவைக்கு மேலாக, அவர் தம் வெற்றியைப் பணயம் வைத்து, சிவப்பிந்தியர்களைக் கிறிஸ்துவத்திற்கு மாற்றுவதற்கு இரும்புக்கர முயற்சிகளை மேற்கொண்டார்.

1540 ஆம் ஆண்டில் கோர்ட்டே ஸ்பெயினுக்குத் திரும்பினார். அவர் தமது வாழ்நாளின் கடைசி 7 ஆண்டுகளை, புதிய ஸ்பெயினில் தமது அதிகாரத்தை மீண்டும் தமக்கு அளிக்கும்படி அரசருக்கு விண்ணப்பம் அனுப்புவதிலேயே கழித்தார்.

(தொடர்ச்சி 24ம் பக்கம்)

# கவிக்களம்

## சுயசரிதம்

ஈசலின் வாழ்வாய்
என்
இளமைக் கனவுகள்

எல்லாமே
எனக்கு எட்டா தூரத்தில்...

விண்மீனாய் சுகங்கள்
பார்த்து ஏங்கவே...

தேனியின் வாழ்க்கையில்
குறிஞ்சிப் பூவாய்
சிலரை
சந்தித்தது மட்டுமே
நான் சாதித்ததெல்லாம்

ஒரு பனையேறியின்
இலாவகத்தோடு
அடிகள் வைக்கிறேன்...
வாழ்க்கையில்
(ஆனாலும்) ஆங்காங்கே ரணங்கள்...

★ குருதியின்
நிறம் அறியாதவர்களுக்கு
என்
ரணத்தின் வலியை
எப்படி உணர்த்த....?

— கி. ஆறுமுகம், தமிழ் நாடு

❋ ❋ ❋ ❋ ❋

## சாபக்கேடு

குயிலொன்று கரையக் கண்டு குமட்டியது சில நிமிடம்...
காகத்தின் கூட்டினிலே கரைகின்ற குஞ்சுகளின்
கானத்தின் ஓசையினால் காழ்ப்புணர்வு கொண்ட குயில்
கூவாமல் கரைகிறது.. கேட்ட மனம் கனக்கிறது!

தற்பெருமை தேட எண்ணி தன்வாயில் இருந்த வடை
தான் கொடுத்து விலைபோன தப்பான காகமல்ல
தற்காப்பு நலன் கருதி தன் காலில் வடை திணித்து
பக்குவமாய்ப் பதிலளிக்கும் படிப்பறியாக் காகமது!

உத்தி பல உண்டு ஊரறியச் செய்வதற்கு
பத்தி பல தொடுத்து பார்வைக்கு மறைந்துகொண்டு
தத்தித் தவழுமந்த குஞ்சுகளைத் தேர்ந்தெடுத்து
கொத்தி விளையாடுவது சத்தியமாய் நல்லதல்ல!

கீரைக் கடைக்குமொரு எதிர்க்கடை வேண்டுமென்று
காகம் படித்ததிலே காழ்ப்புணர்ச்சி ஏதுமுண்டா?
கூவுகின்ற குயில்களெல்லாம் கூவாமல் கரைவதெனில்
குயிலென்றும் காகமென்றும் கூறுவதேன் புரியவில்லை!

மாற்றானின் தோட்டத்து மல்லிகைக்கும் மணமுண்டு
கூற்றாகச் சொன்னசேதி காற்றோடு போயிடுத்து
போற்ற மனம் நோகுதெனில் தூற்றாமல் இருப்பதுவும்
சாற்றாமல் பயிர் வளரும் நம்பிடுவீர் இது உண்மை!

படித்தவர்க்கு எது பெருமை படித்தபடி நடப்பதனால்...
எடுப்பவர்க்கு எது பெருமை ஏற்பவற்றைப் பொறுப்பதனால்
பெண்ணுக்கு எது பெருமை பெண் உரிமை பேசுவதால்..
பண்புக்கு எது பெருமை எதிரியையும் மதிப்பதனால்..!

— த.சு. மணியம், ஜேர்மனி

# 3000 மீற்றர் ஓட்டத்தில் உலகசாதனை வீரன் பிரஹிம் பௌலமி

பெல்ஜியத்தில் நடந்து கொண்டிருக்கும் கோல்டன் பிரிக்ஸ் தடகள போட்டிகளின்போது 3000 மீற்றர் தூரத்தை ஓடிக் கடப்பதில் மொராக்கோ வீரன் பிரஹிம் பௌலமி புதிய உலக சாதனையை உருவாக்கியுள்ளார். இவர் இத்தூரத்தை 7 நிமிடம் 55.28 வினாடிகளில் கடந்தார். இதற்கு முன்பு கென்ஜவீரன் பெர்னார்டு பர்மசை 7 நிமிடம் 55.72 வினாடிகளில் கடந்து உலக சாதனையாளராக இருந்தார். 1997ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் கோலேன் நகரில் இச்சாதனை பர்மசை ஆல் நிகழ்த்தப்பட்டது.

பொலமியின் இச்சாதனைக்கு பெரும் போட்டியாக விளங்கியவர் ஒலிம்பிக் சாதனையாளரான கென்ஜாவின் ரூபன் கார்ஸ் கெய்ம். ஆனாலும் இறுதியில் பௌலமியை முறியடிக்க முடியாது இவரால் இரண்டாம் இடத்தையே எட்ட முடிந்தது. மூன்றாவது இடம் இன்னொரு கென்ஜா வீரரான ஸ்ரீபன் செரோனாவுக்கு கிடைத்தது.

பெல்ஜியத்தில் நடைபெறும் இப் போட்டியில் 1500 மீற்றர் ஓட்டத்தில் இன்னொரு மொராக்கோ வீரரான ஹிகாம் எல்குர்ரெஜ் தனது சாதனை நேரத்தை அண்மித்து வெற்றிபெற்றார். இத்தூரத்தை கடக்க ஹிகாம் 3 நிமிடம் 26.12 விநாடிகளை எடுத்தார். 1998ம் ஆண்டு ரோமில் நடைபெற்ற போட்டியின் போது ஹிகாம் 3 நிமிடம் 26.00 வினாடிகளில் வெற்றிபெற்று இன்றுவரை சாதனையை தொடர்கின்றார்.

பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டத்தில் ஒலிம்பிக் சம்பியனான அமெரிக்காவின் மரியாள் ஜோன்ஸ் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டி முதலிடத்தை தட்டிச்சென்றார். ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டத்தில் அமெரிக்கவீரன் டிம் மாண்டகோ மெரி 9.96 வினாடிகள் எடுத்து முதலிடத்தை பெற்றார்.

பெண்களுக்கான 3000 மீற்றர் ஓட்டத்தில் ரஷ்ய வீராங்கனை ஓல்கா பெகோரோவாவும் 1500 மீற்றர் ஓட்டத்தில் வாயோலெட்டாவும் வெற்றி பெற்றுள்ளனர்.

# 400 விக்கட்டுகள் வீழ்த்திய 6வது வீரன் வோர்ன்

உலகின் சிறந்த லெக்ஸ்பின் பந்து வீச்சாளரான அவுஸ்திரேலியாவின் ஷேன் வோர்ன் 400 விக்கட்டுகள் விழ்த்திய 6 ஆவது வீரனாக உருவாகியுள்ளார். டெஸ்ட் போட்டிகளில் இதுவரை 5 வேகப்பந்து வீச்சாளர்களே 400 விக்கட்டுக்களை கடந்துள்ளனர். ஆனால் முதல் தடவையாக வேகப்பந்து வீச்சாளர்களுக்கு இணையாக சுழல் பந்து வீச்சாளர்களாலும் விக்கட்டுகளை சாய்க்க முடியும் என வோர்ன் 400 ஐ தாண்டி நிருபித்துள்ளார். இங்கிலாந்து ஓவல் மைதானத்தில் நடந்துள்ள 5 ஆவது இங்கிலாந்து அவுஸ்திரேலிய டெஸ்ட் போட்டியின்போதே வோர்ன் இப்புதிய சாதனையை படைத்தார். 400 விக்கட்டுகளை தாண்டியோர் விபரம் பின்வருமாறு.



| வீரன் | நாடு | பங்குபற்றிய போட்டிகள் | வீழ்த்திய விக்கட்டுகள் |
|---|---|---|---|
| 1. வோல்ஸ் | மேற்கிந்தியதீவுகள் | 132 | 519 |
| 2. கபில்தேவ் | இந்தியா | 131 | 434 |
| 3. காட்லி | நியுசிலாந்து | 86 | 431 |
| 4. வசிம் அக்ரம் | பாகிஸ்தான் | 102 | 414 |
| 5. அம்புறாஸ் | மேற்கிந்தியதீவுகள் | 98 | 405 |
| 6. வோர்ன் | அவுஸ்திரேலியா | 92 | 403 |

# சிறீலங்காவுக்கு பதிலடி கொடுத்தது இந்தியா

சிறீலங்காவுக்கு பயணம் மேற்கொண்டிருக்கும் இந்திய கிரிக்கட் அணி கண்டி அஸ்கிரியா மைதானத்தில் 25.08.2001 முடிவுற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியின் போது தக்க பதிலடியை வழங்கியுள்ளது. முதல் டெஸ்ட்டை வெற்றிகொண்ட சிறீலங்காவுக்கு முதலில் துடுப்பாடும் சந்தர்ப்பம் கொடுக்கப்பட 274 ஓட்டங்கள் மட்டுமே சேர்க்க முடிந்தது. இதில் ஜெயவர்த்தனே நிதானமாக ஆடி 104 ஓட்டங்களை பெற்றார். இந்திய வீச்சாளர்கள் அனைவரும் சிறப்பாக பந்துவீசி விக்கட்டுக்களை பகிர்ந்து கொண்டனர். பதிலுக்காடிய இந்தியா தனது துடுப்பாட்டத்தை எதிர்பார்த்த அளவுக்கு முன்னெடுக்க முடியாது 232 ஓட்டங்களுடன் ஆட்டங்கண்டது. இதில் தமிழக வீரனும் இந்திய ஆரம்ப துடுப்பாட்ட வீரனுமான ரமேஸ் கூடுதலாக 47 ஓட்டங்களைப் பெற்றார். மீண்டும் துடுப்பாட நுழைந்த சிறீலங்காவை விரட்டி அடிப்பதில் குறியாக இருந்த இந்திய வேகப்பந்து வீச்சாளர் பிரசாத் சிறப்பாக பந்துவீசி சிறீலங்காவை 157/9 என்ற தாழ் நிலைக்கு கொண்டுசென்றார். அந்தநேரம் மட்டை பிடித்தாடிக் கொண்டிருந்த முரளிதரன் இறுதிவரை சிறப்பாக ஆடி 67 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்க அணி 221 ஓட்டங்களை பெற்றது. பிரசாத் 5 விக்கட்டுக்களை சாய்த்தார். 264 ஓட்டங்கள்ள பெறுவதற்காக ஆடிய இந்தியா ஆரம்பம் முதல் நிதானமாக ஆடி 3 விக்கட்டுகள் இழப்புடன் மட்டும் தனது இலக்கை நிறைவு செய்தது. இதில் உதவித்தலைவர் ராவிட் 75 ஓட்டங்களையும் அணித்தலைவர் கங்குலி ஆட்டமிழக்காது 98 ஓட்டங்களையும் பெற்றனர். இப்போட்டியின் நாயகனாக கங்குலி தெரிவானார். இவ்வெற்றி மூலம் தொடர் சமநிலைக்கு வந்திருப்பதால் இவ்வாரம் கொழும்பில் ஆரம்பிக்கும் மூன்றாவது டெஸ்ட் இரு அணிகளுக்கும் முக்கியமான போட்டியாக உருவெடுத்துள்ளது.



பொன். தாமோதரம்




# புனர்வாழ்வு கழகத்தின் சிறுவர் பட்டினிச் சாவு தவிர்ப்புத் திட்டம்

வவுனியா மாவட்டத்தில் தமிழர் புனர்வாழ்வு கழகத்தின் அனுசரணையுடன் வன்னிச் சிறுவர் பட்டினிச் சாவு தவிர்ப்புத் திட்டம் கடந்த மாதம் தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் பெரியகுளம் மொட்டுக்கள் முன்பள்ளியில் ஒரு போசாக்கு நிலையமும், புதுக்குளம் சங்கீதா முன்பள்ளியில் ஒரு போசாக்கு நிலையமும், பண்டாரவன்னியன் வீதி தளிர்கள் வீதியில் ஒரு போசாக்கு நிலையமுமாக 4 போசாக்கு நிலையங்கள் பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தால் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் ஊடாக 16 கற்பவதிகளும், 26 பாலூட்டும் தாய்மாரும், 35 ஐந்து வயதுக்குட்பட்ட சிறுவர்களுமாக மொத்தம் 77 பயனாளிகள் பயனடைகின்றனர்.

# ஜேர்மனில் இரு தமிழர்கள் உண்ணாவிரதம்

சிறீலங்காவுக்கு நாடுகடத்த வேண்டாம் எனக்கோரி இரண்டு தமிழ் இளைஞர்கள் ஜேர்மனியில் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். பிறேமன் பொலிஸ் தடுப்பு முகாமில் கடந்த 24ம் திகதி முதல் இந்த உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மீசாலையைச் சேர்ந்த மயில்வாகனம் நித்தியசங்கர் (வயது 36), கோப்பாயைச் சேர்ந்த குகநாதன் சுப்பிரமணியம்(வயது 28) ஆகிய இருவரே நாடு கடத்தல் உத்தரவைப் பெற்றுள்ளார்கள்.

அவர்களின் உண்ணாவிரதத்தை ஆதரித்து பிறேமன் நகரில் நூற்றி ஐம்பதிற்கும் மேற்பட்ட தமிழர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடாத்தினர். ஒகஸ்ட் 25ம் திகதி சனியன்று முற்பகல் 11 மணிக்கு இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் இடம்பெற்றது.

பிறேமன் நகரின் பிரதான பாதைகள் போக்குவரத்துக்கு தடை செய்யப்பட்டிருந்தன. ஊர்வலம் பிரதான பாதைகளுக்கூடாகச் சென்று இரு இளைஞர்களும் தடுத்து வைக்கப்பட்டிருந்த தடுப்பு முகாமின் எதிரே முடிவடைந்தது.

'உல்லாசப் பிரயாணிகளை சிறீலங்காவுக்குப் போகாதே என எச்சரிக்கிறார் உள்துறை அமைச்சர். ஆனால் தமிழ் அகதிகளை பொலிசார் சிறீலங்காவுக்கு நாடு கடத்துகின்றார்கள்.'

'சிறீலங்காவில் மிக மோசமான முறையில் மனித உரிமைகள் மீறப்படுகின்றன. தமிழர்கள் அங்கு கொலை செய்யப்படுகின்றார்கள்.'

### நீடிக்கப்பட்டுள்ளது

எதிர்வரும் 29.09.2001 அன்று தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஜேர்மன் கிளை நடாத்தும் கானம்பாடி-2001 போட்டிக்கான விண்ணப்பத் திகதி நீடிக்கப்பட்டுள்ளது. உங்கள் விண்ணப்பங்களை 30.08.2001ற்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கோரப்படுகின்றது.

- த.பு.க. ஜேர்மன் கிளை

(32 ம் பக்கத் தொடர்ச்சி)

### வன்னிக்கு...

தேவைப்படுவதனால் விலை குறைந்த இவ்வாறான பீப்பாக்களை கொழும்பில் கொள்வனவு செய்வதாகவும், இதன் மூலம் பெருமளவு எண்ணெயை வன்னிக்கு அனுப்பி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ஆனால், இது சிறீலங்கா இனவாதிகளின் திட்டமிட்ட ரீதியான ஒரு நடவடிக்கை என கூறப்படுகிறது. நச்சு இரசாயனப் பொருட்கள் வரும் இப் பீப்பாக்கள் கழுவப்பட்டு பாவிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டாலும் கூட, அதனுடைய சக்தி முழுமையாக அதிலிருந்து மறையாது எனவும், இவை பயன்படுத்துகின்றவர்களுக்கு நீண்ட காலத்தின் பின்னர் பெருமளவு பாதிப்புகள் ஏற்படலாம் எனவும் வைத்திய அதிகாரிகள் எச்சரிக்கின்றனர்.

இது இவ்வாறிருக்க, விவசாயத் தேவைக்குரிய திரவ இரசாயனங்கள் முடிவடைந்ததன் பின்னர் அவை வரும் பீப்பாக்கள், வுனியாவுக்குக் கொண்டு வந்து கழுவுவதன் மூலம் வவுனியா குளத்து நீரில் நச்சுத் தன்மை சேர்ந்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்கு தேங்காயெண்ணை கொண்டு செல்வதற்காக வர்த்தகர்களினால் இந்த நச்சுத் திரவப்பொருள் வருகின்ற வெற்றுப் பீப்பாக்கள் மலிவான விலைக்கு கொழும்பில் கொள்வனவு செய்யப்பட்டு வவுனியாவுக்கு கொண்டுவரப்பட்டு கழுவும் பகுதிகளில் வைத்து கழுவப்படுவதாகவும் இவ்வாறு கழுவப்படும் நீரில் நச்சுத் தன்மை கலந்து வவுனியாக் குளத்தில் சேர்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நூற்றுக்கு மேற்பட்ட இவ்வாறான வெற்றுப் பீப்பாக்கள் வவுனியாவின் பகுதியொன்றில் கழுவப்பட்டுக் கொண்டிருந்த வேளை கண்டுபிடிக்கப்பட்டதாக, வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்ததுடன், இந்த விடயம் குறித்து வவுனியா அரசாங்க அதிபரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் கூறினார். குறிப்பிட்ட வர்த்தகரை இவ்வாறான செயலில் ஈடுபட வேண்டாம் என எச்சரித்துள்ளதாகவும் இவ்வாறு தொடர்ந்து அவர் செயற்படுவாரானால் அவருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளதாவும் தெரிவிக்கப்படுகின்றது.

(32 ம் பக்கத் தொடர்ச்சி)

### நோர்வேயின்...

டவுணரிடம் விளக்கம் கேட்டு எழுதிய கடிதத்திற்கு பதில் அனுப்பியுள்ள அலெக்சாண்டர் டவுணர், மேற்கண்டவாறு அரசின் நிலைப்பாட்டை முதன் முறையாக வெளிப்படுத்தியுள்ளார்.

இது சம்பந்தமாக அலெக்சாண்டர் டவுணர் திருமதி மார்கிறட் ரெயிட்டுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில், இலங்கை இனப்பிரச்சினையில் சம்பந்தப்பட்டுள்ள இரு பகுதியினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வொன்றை மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் மேற்கொள்ளப்படல்வேண்டும் என்ற கொள்கையை அவுஸ்திரேலிய அரசு வலியுறுத்தியுள்ளது. நோர்வே நாட்டின் சமாதான மத்தியஸ்த முயற்சியை இரு தரப்பினரும் ஏற்றுக்கொண்டுள்ளனர். நோர்வே நாட்டின் மத்தியஸ்தத்தின் மூலம் இரு தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு தீர்வை அவுஸ்திரேலிய அரசு ஆதரிக்கின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(32 ம் பக்கத் தொடர்ச்சி)

### முகமாலையில்...

உள்ளாகியுள்ளனர்.

இதேவேளை வவுனியா மன்னார் வீதியில் சுமார் 9 மைல் தூரத்தில் உள்ள பம்பைமடு பிரதேசத்தின் இராணுவ முன்னணிக் காவலரண்கள் மீது சனிக்கிழமை காலை 9.30 மணி முதல் 12.30 மணிவரை விடுதலைப் புலிகள் மோட்டார் மற்றும் எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர். இதன்போது படையினரும் பதில் தாக்குதல் நடத்தியதாகவும் இந்த மோதல்கள் சுமார் 3 மணித்தியாலங்கள் நீடித்ததாகவும் சிறீலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இத் தாக்குதலில் இரண்டு கொமாண்டோப் படையினர் காயமடைந்து அனுராதபுரம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாக படை வட்டாரங்கள் தெரிவித்தன.

(32 ம் பக்கத் தொடர்ச்சி)

### கோட்டையை...

முல்லைத்தீவில் அமைந்திருந்த ஆங்கிலேயரின் கோட்டையைத் தாக்கித் தகர்த்து வெற்றிகொண்ட ஆகஸ்ட் மாதம் 25ம் திகதியை நினைவுதினமாக கொண்டாட வேண்டும் என்று இப்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆங்கிலேயராகிய அன்னியருக்கு எதிராக இறுதி வரையில் போராடி, நாட்டின் சுதந்திரத்தைக் காத்த இறுதித் தமிழ் மன்னனாக பண்டாரவன்னியன் போற்றப்பட்டு வருவது தெரிந்ததே. சுதந்திரத்திற்காக முழுமூச்சுடன், தீரமாகப் போராடிய அந்த பெருமைக்குரிய மன்னனை அவன் தோற்கடித்த தினத்தில் நினைவு கூர்வது பொருத்தமற்றது. எதிரியின் கோட்டையைத் தாக்கி அழித்து வெற்றிகொண்ட ஒரு வெற்றிதினத்தில் அவனைக் கொண்டாடுவதே பொருத்தமாக இருக்கும் என்பதனால் இந்த திகதி மாற்றம் செய்யப்பட்டுள்ளதா தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மரண அறிவித்தல்

தோற்றம்: 10 – 11 – 1938



மறைவு: 24 – 08 – 2001

## திருமதி புவனேஸ்வரி பொன்னுத்துரை (ராணி)

யாழ்ப்பாணம் யாழ் வீதியைச் சேர்ந்த திருமதி புவனேஸ்வரி அவர்கள் தனது இல்லத்தில் காலமானார்.

இவர் பொன்னுத்துரை (கமலாகரராஜ்) அவர்களின் அன்பு மனைவியும், காலம் சென்ற திரு. திருமதி நல்லதம்பியின் மகளும், காலம் சென்ற இரத்தினம், காலம்சென்ற இராசையா, காலம் சென்ற மங்கையற்கரசி, இராசேந்திரம், கமலநாயகி, அருணகிரிநாதன் (பிரான்ஸ்), ஆகியோரின் சகோதரியும், ரஜீந்திரன் (இலங்கை), ரஜிவதனன் (ஜேர்மனி), சாந்தி (பிரான்ஸ்), ரஜிகரன் (ஜேர்மனி), ஜெயந்தி (ஜேர்மனி), வசந்தி (இலங்கை), துசியந்தி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், தனபாலசிங்கம், ரட்ணமோகன், றெயினோல்ட், றோயன், மல்லிகாதேவி, குணவதி, ஜெயந்தினி ஆகியோரின் மாமியாரும், ஜதுசன், லதீசன், விதுசனா, பிரவீனா, செரோலினா, திவ்யா ஆகியோரின் பேத்தியுமாவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தொடர்புகட்கு: றாஜன் 0211-6989420 (ஜேர்மனி)
ரஜிகரன் 0209-204995 (ஜேர்மனி)
சாந்தி 01 39 92 10 27 (பாரிஸ்)
றூபா 02421951997 (ஜேர்மனி)
துசியந்தி-0014163213931 (கனடா)

தகவல்: பிள்ளைகள்

PAPAYA Restaurant
MODERN CEYLON CUISINE
குறைந்த விலையில் குன்றாத மனநிறைவு
* தமிழர்களால் தயாரிக்கப்பட்டு தமிழர்களால் பரிமாறும் அறுசுவை உணவகம்.
* அனுபவமும், திறமையும் உள்ள சமையலாளர்களால் தயாரிக்கப்படுகின்றன.
* இத்தாலிய உணவுவகைகளும் தேர்வுகளுக்குண்டு.
* திருமணம், பிறந்தநாள் மற்றும் விருந்துபசார வைபவங்களுக்கு குறித்த நேரத்தில், குறைந்த நியாயமான விலைகளில் அறுசுவையுடன் பரிமாற காத்திருக்கின்றார்கள்.
15 Village Way East, Rayners Lane, Harrow, Middlesex HA2 7LX
Tel: 020 8866 5582 Fax: 020 8866 5582
www.papayauk.com
e-mail:papaya@papayauk.com

ஈழமுரசு
Eelamurasu Weekly
அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

மேற்கு லண்டன் மாநகரில்
புதிய நிர்வாகத்தில்... புதுப்பொலிவுடன்...
துவாரகா
Cash & Carry
இல்லை என்பது இங்கில்லை
N°: 199, The Broadway, Southall, Middx. T.P: 020 8813 9126
Pub

# முகமாலையில் முன்னேறிய படையினர் விரட்டியடிப்பு

(27.08.01)

யாழ். முகமாலைப் பகுதியிலிருந்து நாகர்கோவில் மற்றும் எழுதுமட்டுவாள் பகுதியில் இருந்தும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளை நோக்கி சிறீலங்கா படையினர் முன்னேற்ற நகர்வொன்றை மேற்கொண்டனர். நேற்று அதிகாலை 5.30 மணியளவில் இம் முன்னேற்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஏ-9 பிரதான வீதியின் இரு மருங்களின் ஊடாக முன்னேற முயன்ற படையினர் விடுதலைப் புலிகளால் தாக்கி விரட்டயடிக்கப்பட்டுள்ளனர். இப்படைநகர்வின்போது இரு தரப்பினருக்குமிடையில் இடம்பெற்ற சண்டையில், படையினர் தரப்பில் பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது. படையினரின் இத்தாக்குதல் ஆரம்பமானதும் விடுதலைப் புலிகள் தமது நிலைகளிலிருந்து எறிகணைத் தாக்குதல் நடத்தியதுடன் கடுமையான இடைமறிப்புச் சண்டையிலும் ஈடுபட்டனர். இதனால் தொடர்ந்து முன்னேற முடியாத படையினர் இடைநடுவில் தமது முன்னேற்ற நடவடிக்கையை கைவிட்டுவிட்டு மீண்டும் பழைய நிலைகளுக்கு சென்றுள்ளனர்.

இம் முறியடிப்புச் சமரில் விடுதலைப் புலிகளின் தரப்பில் 2ம் லெப். காண்டீபன் (பாலகிருஸ்ணன் செந்தூரன் - யாழ்.) என்ற போராளி வீரச்சாவை தழுவிக்கொண்டார்.

படையினர் தரப்பில் உயிரிழப்புக்கள் ஏற்பட்டதுடன் ஒரு உயர் அதிகாரி உட்பட பல படையினர் படுகாயங்களுக்கும்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## கோட்டையை வெற்றிகொண்ட தினமே பண்டாரவன்னியன் நினைவு விழா

(27.08.01)

மாவீரன் பண்டார வன்னியன் நினைவு விழா கடந்த சனியன்று மாலை 7 மணிக்கு ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் நடைபெற்றது. பண்டாரவன்னியன் அறங்காவல் கழகத் தலைவர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சிறப்புரைகள், கவியரங்கம், பட்டிமன்றம், நாடகம் மற்றும் இசைக் கச்சேரி போன்ற கலை நிகழ்வுகளும் இடம்பெற்றுள்ளன.

வருடந்தோறும் ஒக்டோபர் மாதம் 31ம் திகதி கொண்டாடப்பட்டு வந்த வன்னிப் பிரதேசத்தின் இறுதி மன்னனாகிய பண்டார வன்னியனின் நினைவுதின வைபவத்தை இவ் வருடம் முதல் ஆகஸ்ட் மாதம் 25ம் திகதியில் கொண்டாடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கான தீர்மானத்தை வன்னியில் உள்ள பண்டார வன்னியன் அறங்காவலர் மன்றம் கூடி ஏகமனதாக நிறைவேற்றியது. இதனையடுத்து 25ம் திகதி சனிக்கிழமை பண்டார வன்னியனின் நினைவுதினத்தைக் கொண்டாடுவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த கற்சிலைமடுவில் 1803 ஒக்டோபர் மாதம் 31ம் திகதி பண்டாரவன்னியன் ஆங்கிலேயருக்கு எதிரான சண்டையில் ஆங்கிலேயரினால் சிறைப்பிடிக்கப்பட்டு தோல்வியடைந்த தினத்தையே இதுவரையில் அனைவரும் அவனுடைய நினைவு தினமாகக் கொண்டாடி வந்தனர். இதனை மாற்றி, மன்னன் பண்டாரவன்னியன்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## நுணாவிலில் பொறிவெடித் தாக்குதல் அதிகாரியும் இரு சிப்பாய்களும் காயம்

(27.08.01)

யாழ்.நுணாவில் பகுதியில் கடந்த சனியன்று இடம்பெற்ற பொறி வெடித் தாக்குதலில் சிறீலங்கா இராணுவ அதிகாரி ஒருவர் உட்பட மூன்று படையினர் படுகாயமடைந்துள்ளனர். அன்றைய தினம் நண்பகல் ஒரு மணியளவில் ஓர் அதிகாரி உட்பட மூன்று படையினர் கண்காணிப்பு ஒன்றை மேற்கொள்ள கால் நடையாக ரோந்தில் ஈடுபட்டிருந்துள்ளனர். இதன்போது, நூலினால் இணைக்கப்பட்டு, இராணுவத்தினர் நடமாடும் பகுதியில் வைக்கப்பட்டிருந்த கைக்குண்டு ஒன்று வெடித்துச் சிதறியுள்ளது. இதன்போது அதிகாரியும் ஏனைய இரு சிப்பாய்களும் காயமடைந்துள்ளனர்.

## நோர்வேயின் முயற்சிக்கு அவுஸ்திரேலியா ஆதரவு

(27.08.01)

நோர்வேயின் சமாதான முயற்சிகளுக்கு அவுஸ்திரேலிய அரசு பூரண ஆதரவு வழங்கும் என அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் அலெக்சாண்டர் டவுணர், செனேட் சபைத் தலைவர் மார்கிறட் ரெயிட்டுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதமொன்றில் தெரிவித்துள்ளார். அண்மையில் அவுஸ்திரேலிய நாட்டிற்கு விஜயம் மேற்கொண்ட மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் அவுஸ்திரேலிய நாட்டின் செனேட் சபைத் தலைவர் மார்கிறட் ரெயிட்டை, கன்பேரா நகரில் அமைந்துள்ள அவரது செனேட் சபை அலுவலகத்தில் சந்தித்து உரையாடியபோது, இலங்கை இனப்பிரச்சினை சம்பந்தமாகவும், நோர்வே நாட்டின் சமாதான முயற்சிகள் சம்பந்தமாகவும் இதுவரை அவுஸ்திரேலிய அரசு அதனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தத் தவறிவிட்டது என்று குற்றம் சாட்டியிருந்தார். இது தொடர்பாக மார்கிறட் ரெயிட் அந்நாட்டின் வெளிநாட்டமைச்சர் அலெக்சாண்டர்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## வன்னிக்கு நச்சுப்பொருள் வரும் பீப்பாக்களில் தேங்காய் எண்ணை

- மக்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்படும் என எச்சரிக்கை -

(27.08.01)

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிக்கு தேங்காய் எண்ணெய் கொண்டு செல்லும் பீப்பாக்கள் நச்சு இரசாயனப் பொருட்கள் பாவிக்கப்பட்டவை என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இப் பீப்பாக்களில் வரும் எண்ணெயை பாவிப்பதால் மக்களுக்கு உடனடியாகவும் நீண்ட காலத்திலும் மிகவும் பாரிய பாதிப்புக்களை ஏற்படுத்தும் என சுகாதார வட்டாரங்களால் எச்சரிக்கப்பட்டுள்ளது.

வன்னிக்கு எண்ணெயை கொண்டு செல்லும் வர்த்தகர்கள் பெருமளவில் பீப்பாக்கள்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

Southharrow Food & Wines
234 & 236 Northolt Road, South Harrow, HA2 8DU
Tel: 020 8423 6321
உங்கள் அன்றாட அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்துகொள்ள நாடவேண்டிய ஒரே நிறுவனம் Southharrow Food & Wines
★ வாரம் ஏழு நாட்களும் இரவு 11 மணி வரையும் திறந்திருக்கும்
Pub